கல்கி

KALKI 7.1.90 ரூ. 2.50



வெற்றிகரமான மணவாழ்க்கை...

கோ-ஆப்டெக்ஸ்

இல்லங்களுக்கு · எழிலூட்டும் · துணிவகைகள்









ஒவ்வொரு பெண்ணும் இல்லத்தரசி யாகிறாள்... உங்களது இல்லங்களில் அழகு மிளிர்ந்திட கோ-ஆப்டெக்ஸ் அளித்திடும் சிறந்த துணி வகைகள்— எண்ணற்ற வண்ணங்களில்.

- ☐ இதமான துவாலைகள்
- ☐ பரந்த படுக்கை விரிப்புகள்
- ☐ மனம் கவரும் மேசை விரிப்புத் துணிகள்
- ☐ புதுமை பொலிந்திடும் திரைச் சீலைத்துணி வகைகள்

உங்கள் இனிய கனவுகள் நனவாகும் போது அதிலே கோ-ஆப்டெக்ஸின் பங்கும் உண்டு!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனைக் கைத்தறி வகைகள்

DIPR 1089/MS/89/HTA

எங்களது பிரத்தியேக ஆடையலங்கார அங்காடி கோலம், 843, அண்ணா சாலை, சென்னை — 2-க்கு விஜயம் செய்யுங்கள்.

கிழக்கு ஐரோப்பாவில் கிளர்ச்சி வெடிக்கிறது!

எழுச்சிக்கு என்ன காரணம்? திடீரென்று இந்தத் துணிவு எப்படி வந்தது? விளக்குகிறார் ஓய்வு பெற்ற வெளியுறவுத் துறைச் செயலர் எம். ஏ. வெள்ளோடி.

கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி, ருமேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் மக்களின் எழுச்சி பல வருடங்களாக அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சியின் வெளிப்பாடுதான். பேச்சு, எழுத்து போன்ற அடிப்படையான சுதந்திரங்கள் பறிக்கப்படும் நிலையில், ஆள்பவர்கள் ஒரு காலகட்டத்தில் மக்கள் உருவாக்கும் புயல் போன்ற ஜனநாயக ஆதரவு இயக்கத்தால் ஊதித் தள்ளப்படுவார்கள் என்பதைத்தான் நடந்திருக்கும் நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. 1975ல் இந்தியாவில் ஏற்பட்ட இதுபோன்ற ஒரு நிலைதானே இந்திரா காந்தியைப் பதவியிலிருந்து இறக்கியது!



• சௌசெஸ்கு

இதற்கு முன்பும் பலமுறை கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுதந்திர ஆர்வம் கிளர்ந்தெழப் பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் அப்போதெல்லாம் ருஷ்ய இரும்புக் கரத்தின் துணை கொண்டு கிளர்ச்சிகளை அடக்கினார்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ஆண்டவர்கள். மக்கள் புரட்சியை அடக்க சோவியத் படைகள் தருவிக்கப்பட்டன.

ஆனால் இன்று ரஷ்யாவில் கோர்பசேவ் ஆளுகைக்கு வந்த பின்னர் நிலைமை மாறி விட்டது. தன் நாட்டு மக்கள், சுதந்திரக் காற்றை சுவாசிக்கப் பல கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறார் கோர்பசேவ். 'கிளாஸ்னாஸ்ட்' எனப்படும் பகிரங்கத் தன்மையால் மக்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 'மறுசீரமைப்பு' என்று நாட்டைப் பொருளாதார ரீதியில் பலப்படுத்தும் வேலையும் ஆரம்பமாகி விட்டது. ரஷ்யாவில் ஏற்பட்ட மாற்றங்கள் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்களைச் சிந்திக்க வைத்தன. 'சுதந்திரத்தை நோக்கி நாமும் நடைபோடலாம்' என்று எண்ணச் செய்தன. அது மட்டுமின்றி அடக்கு முறையை எதிர்த்துப் போராடினால் ரஷ்யா அதைத் தடுத்து நிறுத்தாது என்றும் கிழக்கு ஐரோப்பிய மக்கள் உணர்ந்தனர். இது புரட்சி செய்ய அசாதாரணமான துணிவைத் தந்தது. கோர்பசேவின் அணுகுமுறை மாறியிருக்காவிட்டால், ரஷ்யாவில் மட்டுமல்ல, பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அடிப்படைச் சுதந்திரம் இன்னமும் முடக்கப்பட்டுத்தானிருக்கும்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் இந்த நிலை, கம்யூனிஸத்துக்கு விடைகொடுத்து அனுப்பி விடும் என்று சொல்ல முடியாது. அந்த நாடுகளில் கம்யூனிஸ நடைமுறைகளில், ஏற்பட்ட கோளாறுதான் மக்கள் எழுச்சிக்குக் காரணமே தவிர, ஒரேயடியாக கம்யூனிஸத்துக்கு எதிராக மக்கள் திரும்பி விட்டார்கள் என்று எண்ணுவதற்கில்லை. கருத்து அல்லது பேச்சுச் சுதந்திரம் கூட மறுக்கப்பட்டால் அது எந்த 'இஸமானாலும்' மக்கள் வெகு காலத்துக்குச் சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கிளம்பியிருக்கும் சுதந்திர எழுச்சிக்கு மேற்கத்திய நாடுகள் ஆதரவு கொடுக்கின்றன. ஆனால் பத்து வருடங்களுக்கு முன்னர் ருமேனியாவின் ருஷ்ய எதிர்ப்புப் போக்குக்காக அமெரிக்கா ருமேனியாவை ஆதரித்தது! அப்போதும் சௌசெஸ்குதான் ஆண்டு கொண்டிருந்தார்! எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மேற்கத்திய நாடுகளின் போக்கு ஒரு நிதானமான போக்கு அல்ல; அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுவதுதான்!

சந்திப்பு: **ப்ரியன்**

படம்: **ராஜன்**



• வெள்ளோடி

ஜெ'யின் துறவு கேட்டுத் தீக்குளித்த தொண்டர் பற்றி...?

* கே. வி. நாதன், நெய்வேலி.

? புதிய சபாநாயகர் ரபி ரே குறித்து...?

! நம்பகமான சோஷலிஸ்ட்; நாணயமான அரசியல்வாதி என்பது வரை இன்று தெரியும்; சிறந்த சபநாயகரா என்பது நாளை தெரியும்!

* ஆர். மாதவராமன், சோளிங்கர்.

? அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை; நிரந்தரப் பகைவனும் இல்லை என்பதற்குத் தமிழக அரசியலில் எடுத்துக் காட்டு..?

! அதற்குப் பஞ்சமேயில்லை. லேட்டஸ்ட்: இதுவரை தி. மு. க. வை வசை பாடிய ராகவானந்தம், கலைஞர் முன்னிலையில் தி.மு.க.வில் சேர்ந்தது. தி.மு.க.வுக்குள் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவருக்குக் கட்சியிலோ ஆட்சியிலோ பதவி ஏதும் தந்து விடாமல் இருப்பது நல்லது. இல்லையேல் கட்சியில் அதிருப்தியும் விரிசல்களும் ஏற்படுவது உறுதி.

* கே. வேல்சாமி, மதுரை.

? எம். ஜி. ஆர். கட்டிக் காத்து வளர்த்த அ. தி. மு. க.வுக்கு ஏன் இந்த இழி நிலை?

! சரியான முறையில் கட்டிக் காத்து வளர்க்காததால் ஏற்பட்ட துயரங்கள்தான். கட்சிக்குள் ஜனநாயகம் வேர் பிடிக்க அவர் உதவியிருந்தால், உடைவதும் சேர்வதும் மீண்டும் விரிசல் விழுவதுமாக இராது.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'ஒரு பெரிய தலைவராக மதிக்கப்படுவதற்கு உரிய தகுதிகள் எதுவும் வி. பி. சிங்கிற்குக் கிடையாது' என்று சோ கூறியிருக்கிறாரே?

! தகுதி இல்லை என்று சோ கூறிக் கொண்டிருக்கிறார்; தகுதி இருக்கிறது என்று சிங் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்!

* லட்சுமி பிரியன், வெள்ளகோவில்.

? ஐந்து ரன் கொடுத்து மூன்று விக்கெட் வீழ்த்திய மனோஜ் பிரபாகர் பற்றி...?

! விழலுக்கு இறைத்த நீரானதுதான் துயரம். வெற்றி வாய்ப்பு இந்தியாவுக்கு ஓரளவு இருப்பதைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல் கல்லெறிந்து ஆட்டத்தைக் கலைத்து விட்டார்களே, கராச்சி ரசிகர்கள்!

* வி. முரளி, சென்னை — 44.

? ஜெ யின் விலகல் அறிவிப்பைக் கேட்டுத் தீக்குளித்து, மரணம் அடைந்த தொண்டர் பற்றி?

! இதுபோன்ற பைத்தியக்காரத்தனங்கள் நடப்பதற்கு அடிப்படைக் காரணம், ''தொண்டர்'' என்ற சொல்லின் அர்த்தம் மாறிப் போனதுதான். சுதந்திரத்துக்கு முன் 'காங்கிரஸ் தொண்டன்' என்று கூறப்பட்டது, 'காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களின் தொண்டன்' என்ற அர்த்தத்தில் தான். மதுவிலக்கு பிரசாரம், தீண்டாமை ஒழிப்பு, அந்நியப் பொருள் பகிஷ்காரம் போன்ற பலப்பல அம்சங்களில் மக்களுக்குத் தொண்டாற்றிய தொண்டர்கள் அவர்கள். சுதந்திரத்துக்குப் பிறகு, கட்சிக்கும் அதன் தலைவருக்கும் தொண்டாற்ற வேண்டியவர்களாகப் பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்கள் தொண்டர்களைக் கருதத் தொடங்கினார்கள். தலைவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தொண்டர்களும் இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டார்கள். இந்த அடிமை புத்தி நீங்கி, ''தொண்டன்'' என்ற சொல்லின் கௌரவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டால் எல்லாத் தரப்பினருக்கும் நல்லது. தீக்குளிப்பு போன்ற அபத்தங்கள் நிகழாது.

* கே. ஏ. காளிமுத்து, காரை.

? 'சந்திரசேகர் உயர்ந்த பண்புள்ள நல்ல மனிதர்' என்று சோ கூறியிருக்கிறாரே?

! சந்திரசேகரைப் பிரதமர் பதவிக்குப் போட்டியிட விடாமல் ஒரு சூழ்ச்சி, தவிர்க்க முடியாமல் நடந்து விட்டதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சந்திரசேகர் பண்புள்ள, நல்ல மனிதராயின், அந்தச் சந்தர்ப்பத்தில் சந்திரசாமியிடமும் மாமாஜியிடமும் அம்பானியிடமும் குலாவிக் கொண்டிருந்திருக்க மாட்டார் என்பதையும் சொல்லி வைக்கிறேன்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? சத்தியமூர்த்தி பவனில் இளைஞர் இ. காங்கிரஸ் — காங்கிரஸ்காரர்களின் கோஷ்டி மோதல், அடிதடி பற்றித் தங்கள் கருத்து...?

! முன்பு காமராஜர் திடலில் அடித்துக் கொண்டு காமராஜரை அவமதித்தார்கள். பாவம், சத்தியமூர்த்திக்கும் அந்தக் கௌரவம் கிடைக்க வேண்டாமா? அதனால் இப்போது சத்தியமூர்த்தி பவனில்

* சேருமிடம் சேர்ந்தார்



* தி. மு. க. வுக்குள் அனு



அடித்துக் கொண்டு அவரையும் அவமதித்திருக்கிறார்கள்!

* ம. செந்தில்நாதன், மதுரை.

? சின்ன நாடான பனாமா மீது வல்லரசு நாடான அமெரிக்கா அதிரடி தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து?

! பனாமா நாட்டின் மீது அமெரிக்கா படையெடுத்ததை ''ஆக்கிரமிப்பு'' என்றும் ''மற்றொரு தேசத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுதல்'' என்றும் இருவிதமாக வர்ணித்து அமெரிக்காவைக் குற்றம் சாட்டலாம். ஆனால் அப்படி ஒரேயடியாகக் கண்டனம் செய்யவும் முடியாமல் இரண்டு விஷயங்கள் தடை செய்கின்றன. நொரீகா என்பவர் சர்வாதிகாரி மட்டுமல்ல; போதைப் பொருள்கள் கடத்துவோருக்கு ஆதரவும் ஊக்கமும் தந்து கொழுத்த பணம் பண்ணி வந்தார். ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஆட்சியை வழங்காமல், அக் கட்சியினரை அடித்து நொறுக்கி, அடக்கி ஆண்டு வந்தார். நொரீகாவின் போதைப் பொருள் கடத்தல் ஆதரவு காரணமாக, மிக அதிகமான பாதிப்புக்கு உள்ளானவர்கள் அமெரிக்க இளைஞர்களே. இப்போது மக்களால் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட என்டெராவுக்கே அமெரிக்கா ஆட்சியை வழங்கியுள்ளது. நொரீகா சாமர்த்தியமாக அமெரிக்க வீரர்களுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு, போப்பாண்டவரின் தூதரகத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார். அவர் தலைக்கு அமெரிக்கா தரத் தயாராயிருக்கும் கோடிக் கணக்கான பணமும் கூட போப்பாண்டவரை மயங்கச் செய்யாது; அடைக்கலம் என்று வந்தவரைக் கைவிட மாட்டார் என்று நம்பப்படுகிறது.

* ஆர். நெடுஞ்செழியன், சென்னை — 41.

? போஃபர்ஸ் விவகாரத்தில் மத்திய அரசு எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

! ''லஞ்சமாகத் தரப்பட்ட தொகைகள் திருப்பித் தரப்பட வேண்டும்; லஞ்சம் பெற்றவர்களின் பெயர்கள் வெளியிடப்பட வேண்டும்; இல்லையெனில் இனி போஃபர்ஸுடன் வியாபாரம் கிடையாது'' என்று அறிவித்து விட்டாரே, வி. பி. சிங்! சரியான முறையில்தான் நடந்து கொண்டு வருகிறார்.

கண்டிக்க முடியாமல்......



* முரண்டு பிடிக்கப் போய்...





* சோவின்...



* ...கருத்துக்கள்.

* இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? சிவாஜி ஜனதா தளத்தில் சேரத் துடிக்கிறார் போலிருக்கிறதே?

! சேர்ந்தே விட்டார்! இனி என்ன? ஜனதா தளம் தமிழகத்தில் ஆல்போல் தழைத்து, வேல் போல் வேரூன்றி, வெற்றி மேல் வெற்றியாகக் குவிக்க வேண்டியது தானே!

* எஸ். சங்கரநாராயணன், சென்னை — 80.*

? உள்துறை அமைச்சரின் மகளை விடுவிக்க பயங்கரவாதிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்தது சரியா?

! 'சரியல்ல' என்று ராஜீவ் கூறப் போக, பாவம், சென்னா ரெட்டி தெலுங்கு தேச எம்.எல்.ஏ. விடுதலை பெறுவதைத் தாமதித்து, 'கோரிக்கைகளுக்கு அடிபணிய மாட்டேன்' என்று முரண்டு பிடிக்க, இப்போது காங்கிரஸ் எம்.எல்.ஏ.வும் பயங்கரவாதிகளால் அபேஸ் பண்ணப்பட்டிருக்கிறார்! எனவே, எது சரி என்பதோடு எது புத்திசாலித்தனம் என்பதையும் அப்போதைய யதார்த்த நிலைமையை வைத்து முடிவு செய்ய வேண்டுமே தவிர, முரட்டுப் பிடிவாதம் உதவாது!

* ஜி. சதாசிவம், நெல்லை.

? இந்த சங்கீத சீசனில் நீங்கள் கேட்ட ஒரு நல்ல சங்கீதம்?

! கர்நாடக இசைக் கல்லூரி மாணவர்கள் நடத்துகிற, நியாயமான கோரிக்கைகளுக்கான, நேர்மையான அமைதிப் போராட்டம். முதலில் இடைவிடாமல் இசைக் கருவிகளை இசைத்தார்கள். பின்னர், 'ஸரிகமபதநி' என்று எழுதிய அட்டைகளை வாயில் பொருத்திக் கொண்டு, மௌனப் போராட்டத்தைச் சபா வாசல்களில் நிகழ்த்தினார்கள். சுருதி பிசகாத நல்லிசையாகவே இதுவரை இவர்கள் கிளர்ச்சி ஒலித்து வருகிறது.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:
எஸ். சங்கரநாராயணன்,
L 22/6, மத்திய நிழல் சாலை,
கொரட்டூர்,
சென்னை — 80.

வெற்றிகரமான

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது உண்மையாக இருக்கலாம்... ஆனால் அவற்றின் வெற்றி அல்லது தோல்வி, பெரும்பாலும் நமது ஆற்றலுக்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறது. வெற்றிகரமான மணவாழ்க்கைக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சென்னை இலவசச் சட்ட உதவி மையத்தை (Legal Aid Board) சேர்ந்த ஆலோசகர் விமலா வின் கருத்துக்கள்:



பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்கு வரன் பார்த்துக் கல்யாணம் நிச்சயிக்கிறார்கள். இவர்களைப் பொருத்தவரை திருமணத்துக்குப் பொருளாதார ரீதியாகத் தாங்கள் தயாராவதே முக்கியமாகி விடுகிறது. மணமகன் அல்லது மணமகள் திருமண நிகழ்ச்சியின் குதூகலம் தரும் சுகத்துடன் ஒரு தனி உலகில் இருக்கிறார்கள். இவர்களின் கனவுகள் பெரும்பாலும் கணவன் தன்னை எப்படித் தாங்குவான் அல்லது மனைவி தனக்கு எப்படிப் பணிவிடைகள் செய்வாள் என்ற ரீதியிலேயே இருக்கும். இந்தத் திருமணத்தில் என் பங்கு என்ன? நான் என்ன செய்வதால் இந்த பந்தம் வலுப்படும் என்று மணவாழ்க்கைக்குள் நுழையும் முன்னர் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்வது நல்லது. பெற்றோர்கள் பொருளால் உதவுவதோடு இந்தச் சிந்தனையைத் தூண்டியும் உதவ வேண்டும்.

மணவாழ்க்கையில் ஆரம்பம் முதலே கணவன் – மனைவி தங்களுக்கிடையே ஒரு வலுவான பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த பந்தம் தானாகவே ஏற்பட்டு விடாது. நாம் ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாக வேர் பிடித்து, நமது சின்னச் சின்னப் பரிமாற்றங்களால்தான் வளரும்.

சின்னச் சின்னப் பரிமாற்றங்கள் என்றால் என்ன? இருவரில் ஒருவருக்கு முக்கியமாகத் தோன்றும் ஒரு விஷயம் மற்றவருக்கு முக்கியமாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் அந்த உணர்ச்சிக்கு மதிப்பு கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். உதாரணமாக: பெரும்பாலான பெண்கள் கணவன் மாலையில் சீக்கிரமாக வீட்டுக்கு வர வேண்டும், தன்னோடு பேச வேண்டும் என்று விரும்புவார்கள். இது ஆண்களுக்குச் சிறுபிள்ளைத்தனமாகத் தோன்றும். குறிப்பாக வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே இருக்கும் பெண்களுக்கு இதனால்

மணவாழ்க்கை

ஒரு தாழ்வு மனப்பான்மை கூட ஏற்படும்— 'படுக்கைக்கு மட்டும்தான் பெண்டாட்டியா?' என்ற எண்ணம் கூடத் தோன்றி விடும்.

ஒரு ரயில் பிரயாணத்தின் போது சக பயணிகளுடன் பரிச்சயம் செய்து கொண்டு உற்சாகமாகப் போகலாம் அல்லது ஒரு மூலையில் தனியாக உட்கார்ந்து எதையோ படித்துப் பொழுதைக் கழிக்கலாம். அப்படித்தான் மணவாழ்க்கையும்.

வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று ஆபீஸில் நடந்த சின்ன நிகழ்ச்சிகள் தொடங்கி, பெரிய கனவுகள், எண்ணங்கள், சிந்தனைகள் என்று எல்லாவற்றையும் கணவன் மனைவி பகிர்ந்து கொள்ள வேண்டும். இது மனம் விட்டுப் பேசுவதன் மூலமாகவே சாத்தியமாகும். ரொம்ப 'பிஸி'யாக இருக்கும் தம்பதிகள் கூட ஒவ்வொரு நாளும் தங்களுக்கென்று ஓர் அரை மணி நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். ஆரம்பம் முதலே இதைப் பழக்கிக் கொள்வது நல்லது.

எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வது போலவே, வீட்டு வேலைகளையும் பொறுப்புகளையும் கௌரவம் பார்க்காமல் பகிர்ந்து கொள்வது மணவாழ்க்கையின் இன்பத்தைப் பெருக்கும். எண்ணங்களை முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முடிந்தால் பிறகு பணிகளையும் பொறுப்புகளையும் பகிர்ந்து கொள்வது ஓரளவு இயல்பாகவே அமைந்து விடும்.

பந்தத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் இன்னொரு விஷயம்: உடலுறவு. டேல் கார்னகி என்ற பிரபல அமெரிக்க சிந்தனையாளரின் புத்தகத்தில் அவரது வாசகர் ஒருவர் தமது அனுபவத்தைக் கூறியிருக்கிறார்:

'என் திருமணம் தோல்வியை நோக்கி அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த சமயத்தில் நண்பர் ஒருவர் வீட்டில் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். உடலுறவு பற்றிய புத்தகம். துளியும் விரசமில்லாமல் எழுதப்பட்டிருந்தது. அதைக் கடன் வாங்கிப் போய்ப் படித்த பிறகு என் திருமண வாழ்க்கையில் எத்தகைய மாற்றம்! வெற்றிப் பாதைக்கு வழிகாட்டியது அந்த நூல்.'

திருமணம் நிச்சயமானதும் உடலுறவு பற்றிய விஞ்ஞான பூர்வமான நூல் ஒன்றைப் படித்து வைத்துக் கொள்வது நல்லது என்கிறார் டேல் கார்னகி. இந்த அறிவுரை செக்ஸ் பற்றிய அரைகுறை ஞானமும் மூடநம்பிக்கையும் உள்ள இந்திய இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இன்னும் அதிகமாகப் பொருந்தும் என்றே சொல்லலாம்.

குழந்தைகள் பெற்றுக் கொள்வதால் கணவன் மனைவியிடையே பந்தம் வலுப்படுகிறது என்பது அங்கீகரிக்கப்பட்ட கருத்து. இதை மிகக் கவனமாகத் திட்டமிட்டுக் கொள்ளும் வசதி இப்போது இருப்பது குறித்து நாம் மகிழ வேண்டும். குழந்தை பெற்றுக் கொள்ளும் முன் கணவன் மனைவி மனத்தளவில் முழுமையாக ஒன்றுதல் நல்லது.

இருவரில் ஒருவரின் மலட்டுத்தன்மை காரணமாகக் குழந்தை பெற்றுக் கொள்வது சாத்தியமில்லாது போனால் அந்த இயலாமை இருவருக்கும் சேர்த்து விதிக்கப்பட்ட ஒன்று என்றே கருதப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அனாவசிய உயர்வு, தாழ்வு மனப்பான்மைகள் வளரும். மனப் பக்குவம் இருப்பவர்கள் வேறு குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

மன விரிசல் மற்றும் உயர்வு தாழ்வு

* சின்னச் சின்ன சண்டைகள் வரத் தான் செய்யும்...



மனப்பான்மைக்கு வித்திடும் இன்னொரு விஷயம் பணம். இருவரும் சம்பாதித்தால் கூடப் பணத்தைப் பொதுவில் வைத்துச் செலவுகளைத் திட்டமிட்டு வகுப்பது நல்லது. இருவரில் யார் என்ன செலவுக்காகப் பணம் எடுத்தாலும் அதை மற்றவரைக் கலந்தாலோசித்தே செய்வது என்பதைக் கொள்கையாக்கிக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ரகசியமாகச் செலவு செய்யவே கூடாது. நம்பிக்கையை இழக்க மிகச் சுலபமான வழி இது. பல ஆண்கள் மனைவிக்குத் தெரியாமல் முதலீடு செய்திருக்கிறார்கள். ஏன் — ஒருவர் மனை வாங்கி வீடு கூட கட்டி விட்டார்! மூன்றாம் மனிதர் மூலமாக விஷயம் தெரிய வந்த மனைவி என்ன பாடுபட்டிருப்பாள் யோசித்துப் பாருங்கள்!

மேலும், இருவரும் ஆலோசித்துச் செலவு செய்வதால் அனாவசிய செலவுகள் தவிர்க்கப்பட வாய்ப்பு அதிகம். சேமிப்பு வளரும்.



* இருவரும் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்தால் அந்நியோன்னியம் வலுப்படும்.

கணவன் — மனைவி எவ்வளவுதான் அனுசரித்துப் போனாலும் சின்னச் சின்னச் சண்டைகளும் மனஸ்தாபங்களும் தலைதூக்காமல் இருக்கவே இருக்காது. மணமான புதிதில் இவற்றால் அச்சமும் பாதுகாப்பற்ற உணர்வும் கூடத் தோன்றும் (குறிப்பாகப் பெண்களுக்கு). இந்தப் பிரச்னைக்குச் சுலபமாக முடிவு கட்ட கணவன் — மனைவி ஆரம்பத்திலேயே ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

யார் காரணமாகச் சண்டை ஏற்பட்டது என்று ஆராயாமல் கணவன், மனைவியிடம் 'போனது போகட்டும்; மறந்து விடுவோம்' என்று சொல்ல வேண்டும். மனைவி கொம்பில் ஏறிக் கொள்ளாமல் உடனே சகஜ நிலைக்குத் திரும்ப வேண்டும். அடுத்த முறை சண்டை ஏற்படும்போது மனைவி முதலில் தானே வலியச் சென்று 'நடந்ததை மறந்து விடுவோம்' என்று கூற வேண்டும். இப்படி முறை வைத்துக் கொண்டு சமாதானத்துக்கு அடிகோலினால், நேசக்கரம் நீட்டினால், சிறு விஷயங்கள் பெரிதாகாமல் தவிர்க்கப்படும். இதில் முக்கியமான விஷயம், நடந்து விட்ட தவறுக்கு மன்னிப்புக் கோரப்பட வேண்டும் என்று இருவருமே எதிர்பார்க்கக் கூடாது. தவறு உணரப்படுவதுதான் முக்கியமே தவிர, மன்னிப்புக் கோருவதல்ல. மன்னிக்கும் மனப்பான்மைதான் முக்கியமே தவிர மன்னிப்பு கோரச் செய்து சிறுமைப்படுத்துவது அல்லவே அல்ல.

இருவருமே எடுத்துக் கொள்ள வேண்டிய இன்னொரு பிரதிக்ஞை: பழைய தப்புகளைச் சுட்டிக் காட்டக் கூடாது என்பது. அதோடு, ஒருவர் மற்றவருக்குப் பிடித்ததைச் செய்யா விட்டாலும் பிடிக்காததைச் செய்வதில்லை என்று முடிவு செய்தலும் உதவும்.

விட்டுக் கொடுக்கும் சுபாவம் இருப்பது ரொம்ப நல்லது. இருவருமே விட்டுக் கொடுப்பது மிகவும் முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியம் 'ஐயோ! நாம் தாழ்ந்து வர வேண்டியிருக்கிறதே' என்ற மன வருத்தமின்றி விட்டுக் கொடுப்பது...

யாரிடம் விட்டுக் கொடுக்கிறோம்...? நம்மை நம்பி வாழ்க்கையை ஒப்படைத்துள்ளவரிடம்தானே? அலுவலகத்திலும் வெளி வாழ்க்கையிலும் சுலபமாக விட்டுக் கொடுக்கும் நாம் இதை வீட்டில் ஏன் சந்தோஷத்துடன் செய்யக் கூடாது...?

இருவருமே தங்கள் உடல் ஆரோக்கியம் பேணுவதிலும் அளவாக அலங்கரித்



துக் கொண்டு அழகை விகசிக்கச் செய்வதி லும் அக்கறை காட்ட வேண்டும். குறிப்பா கப் பெண்கள் இந்த விஷயத்தில் அசிரத்தை காட்டுவதால் கணவனுக்கு எரிச்சல் ஏற் படுத்துவதோடு தங்கள் மனச்சோர்வையும் வளர்த்துக் கொள்கிறார்கள். புறத் தோற் றம் முக்கியமில்லை, அன்புதான் முக்கியம் என்று அடியோடு ஒதுக்கி விடக் கூடாது. சராசரி மனித மனம் கண்ணுக்குக் குளிர்ச்சி யான விஷயங்களைக் கண்டு பூரிப்படை கிறது. அந்தக் குளிர்ச்சியைத் தருபவர் கணவனாகவோ மனைவியாகவோ இருந் தால் அது மகிழ்ச்சியை அதிகரிக்கத்தானே செய்யும்.

ஏக்காரணத்தினாலாவது மண வாழ் வில் விரிசல் ஏற்படும் அறிகுறி தோன்றி னால், ஒருவரைப் பற்றி மற்றவர் அக்கம் பக்கத்தில் புகார் செய்து புலம்புவதைக் காட்டிலும் தொழில் ரீதியான ஆலோசகர் களை (marriage counsellors) அணுகலாம். இவர்கள் தம்பதிகளைத் தனித்தனியே பேட்டி கண்டு, அறிவுரை வழங்கி மத்தியஸ் தம் செய்து வைக்க முயற்சி செய்வார்கள்.

'நான் அன்பு செலுத்தப் போகிறேன்' என்ற தீர்மானத்துடன் இருவர் திருமண பந்தத்துக்கு உட்பட்டால் எந்தப் பிரச்னை யுமே பயமுறுத்தும் அளவுக்கு வளராது. அன்புடன் அணுகினால் பொறுமை அதிகரிக்கும். அன்பும் பொறுமையும் இணைந்து அற்புதங்கள் சாதிக்கும்.

துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமுமெல்லாம்
அன்பில் அழியுமடி — இனியே
அன்புக் கழிவில்லை காண்


என்று பாரதியார் சொன்னது வெறும் கவிதை வரிகளல்ல — வாழ்க்கைப் பாடம்!

தொகுப்பு: **சீதா ரவி.**

மேலட்டை வண்ணப்படம்: **யோகா.**

பெற்றோர்கள் கவனத்துக்கு...

'கல்யாணம் முடிந்தால் சரி, பொறுப்பு விட்டால் போதும்' என்ற ரீதியில் அவசரப்படாதீர்கள். மணமகன் அல்லது மணமகள் பற்றித் தீர விசா ரித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த நாளில் மதுப் பழக்கம், போதைப் பொரு ளுக்கு அடிமைப்பட்டுப் போதல் என்று பல தீய பழக்கங்கள் ஆண் — பெண் இரு பாலாருக்கும் உள்ளன. பொறுப்பு முடிய வேண்டும் என்ற அவசரத்தில் பெற்றவர்கள் சரியாக விசாரிக்காமல் செய்து வைக்கும் திருமணங்களை அன்பினால் வெற்றி பெறச் செய்ய முடியாது. இவை விவாகரத்திலும் ஏமாற் றத்திலும்தான் முடியும்.



''அரசர்க்கரசேன்னுதன்னை யாரும் கூப்பிடக் கூடாதுன்னு மன்னர் உத்தரவு போட்டுட்டார்!''

''ஏனாம்?''

''அது மகாராணியைக் குறிக்குதாம்!''

— கமுதி. எஸ். சேதுராமன்.



''அண்ணே எங்க ஊருக்கும் ஒரு பஸ் விட ஏற்பாடு செய்யக் கூடாதா...?''

''செய்யலாம்தான்; ஆனா உங்க ஊர்ல பஸ் ஸ்டாண்டே இல்லையே...!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

''நீங்க கிரிக்கெட் ரசிகரா இருக்க லாம். அதுக்காக ஒவ்வொரு நாளும் ஆபீஸில் அதிகம் லஞ்சம் வாங்கின ஒருவரைத் தேர்ந்தெடுத்து 'மேன் ஆப் தி பிரான்ஞ்'சா கௌரவிக்கிறது அவ் வளவு நல்லா இல்லை!''

— கமுதி. எஸ். சேதுராமன்.





வித்தியாசமான மகாபாரதம்

தொலைக்காட்சியில் ஐம்பத்திரண்டு வாரங்களில் சுருக்கித் தர முடியாததை ஐந்தரை மணி நேரத்தில் திரைப்படமாக அளித்திருக்கிறார் பீட்டர் ப்ரூக்.

எடுத்த எடுப்பில் படமாகி விடவில்லை.

ஒன்பதாண்டு அடிப்படை ஆராய்ச்சி. ஒன்பது மாத நடிப்புப் பயிற்சி. அதன்பின் ஒன்பது மணி நேர நாடகமாக மேடையேறி, அதன் வெற்றியைத் தொடர்ந்து, சுருக்கப் பட்ட பதிப்பாக இந்தத் திரைப்படம்.

மொத்தம் முப்பத்தாறு நாடுகளைச் சேர்ந்த நடிகர்கள். கறுப்பு, வெள்ளை, மஞ்சள் இனக்கலவை. ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர் பீஷ்மர், சீனப் பெண்மணி காந்தாரி. பிரிட்டனைச் சேர்ந்தவர் கிருஷ்ணர். அமெரிக்க நீக்ரோ குந்தி. இப்படிப் பல்வேறு இனத்தவர் மத்தியில் திரௌபதி மட்டுமே இந்தியர் — மல்லிகா சாராபாய்.

பாத்திரங்களின் தோற்றமும் வெவ்வேறு வகையான ஆங்கில உச்சரிப்பும் எடுத்த எடுப்பிலேயே ஜீரணிக்க முடியாமல் திகைக்க வைத்து விட —

ஜிகினா வேலைகள் நிரம்பிய பட்டாடைகள், முத்து மாலைகள், தங்க ஆபரணங்கள், பளபளக்கும் கிரீடங்களுக்குப் பழக்கப் பட்டுப் போய் விட்ட கண்கள், சூடிதாரும் குர்த்தாவும் சரிகை அங்கவஸ்திரமுமாக பீஷ்மரும், துரோணரும், துரியோதனனும், யுதிஷ்டிரரும் இன்னும் இதர பாத்திரங்களும் உலா வருவதை ஏற்க முடியாமல் தவிக்கின்றன.

என்றாலும், நேரம் செல்லச் செல்ல, பொருள் பதிந்த வசனங்கள் நெஞ்சை ஊடுருவ, செயற்கைக் கலப்பே இல்லாத யதார்த்தமான நடிப்பு நம்மைக் கட்டிப் போட்டு விட, மற்ற எல்லாமே மறைந்து போய் மகாபாரதம் சொல்லும் மனித வாழ்க்கைத் தத்துவங்கள் மட்டுமே விசுவ ரூபமெடுத்து மூழ்கடித்து விடுகின்றன.

முதல் ப்ளஸ் பாயிண்ட்: கவிதை நயம் பொருந்திய வசனங்கள்.


இரண்டாவது ப்ளஸ் பாயிண்ட்: கண்களைக் கட்டிப் போடும் படப்பிடிப்பு.

மூன்றாவது ப்ளஸ் பாயிண்ட்: வியாசரும், விநாயகரும் படம் முழுதுமே அங்கங்கே வந்து இடையிடையே விட்டுப் போன பகுதிகளை நிரப்பி விடும் யுக்தி.

நாலாவது ப்ளஸ் பாயிண்ட்: மேலை நாட்டுக் கண்களைக் கொண்டு பார்க்காமல் மகாபாரதத்தின் உள்ளார்ந்த பொருளை உண்மையாகவே அறிந்து வெளிக்கொணர எடுத்துக் கொண்டிருக்கும் நிதரிசனமான அக்கறை.

ஐந்தரை மணி நேரமா படம் ஓடியது? தெரியவில்லையே!

— சி. ஆர். கே.



தீபத்திற்கு எந்த எண்ணெய்விட்டால் என்ன பலன்





எண்ணெய் பலன்

நெய் : தீபத்திற்கு நெய்விடுவது மிகச்சிறப்பு. சகலவித செல்வச் சுகத்தையும் வீட்டில் நலனையும் தருகின்றது.

நல்ல எண்ணெய் : நல்ல எண்ணெய் விட்டு ஏற்றுவதால் எல்லா பீடைகளும் விலகி விடுகிறது.

விளக்கெண்ணெய் : தேவதாசியம், புகழ்ஜீவன சீரகம், பந்து, சுகம், தாம்பத்திய சுகம் இவைகளை இது விருத்தி செய்கின்றது.

கடலை எண்ணெய்: இதில் தீபம் ஏற்றுவது மிகவும் தவறு. அந்த வீட்டில் நித்தியக் கடன், துக்கம், பயம், சோரநாசம், பீடை இவைகளே சேரும்.



திரியின் வகைகள்

பஞ்சு: இதில் திரியிடுவது மிகவும் நல்லது.

தாமரைத்தண்டு: இதை திரித்து ஏற்றுவது முன்வினை பாவத்தை போக்கும். செல்வம் நிலைத்து நிற்கும்.

வாழைத்தண்டு : இதை நூல் பாகமாகப் பக்குவப்படுத்தித் திரியிட, குழந்தைச் செல்வம் உண்டாகும். தெய்வக்குற்றம், குடும்பச் சாபம் முதலியவை நீங்கி, சாந்தி உண்டாகும்.

வெள்ளை எருக்கன் : இதன் பட்டையைத் திரியாகச் செய்து தீபம் போட, பெருத்த செல்வம் தரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லை தீரும்.

புது மஞ்சள் சேலைத்துண்டு : இதிலிருந்து திரி செய்து ஏற்றினால் அம்மன் அருள் கிட்டி வியாதிகள் குணமாகும். காற்று சேஷ்டை நீங்கும்.

சிகப்புகலர் சேலைத்துண்டு : திருமணத் தடை, மலட்டுத்தன்மை, பைசாச செய்வினை, தோஷங்கள் விலகிவிடும்.

புது வெள்ளை வஸ்திரம் : இதில் பன்னீர் விட்டு காய வைத்து திரியாகப் பயன்படுத்த உத்தம பலனைக் காணலாம்.

எண்ணெய் கலந்து விட்டு ஏற்றுவதால் ஏற்படும் பலன்

வேப்பெண்ணை, நெய், இலுப்பை எண்ணை மூன்றும் கலந்து தீபமிடுவதால் செல்வம் உண்டாகும். இது குலதெய்வத்திற்கும் உகந்தது.

நெய், விளக்கெண்ணை, வேப்பம் எண்ணை, இலுப்பை எண்ணை, தேங்காய் எண்ணை இந்த ஐந்தும் கலந்து ஏற்றி எவன் ஒருவன் ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்கிறானோ அவனுக்கு தேவியின் அருள், மந்திர சக்தி உண்டாகும்.



தீபத்திற்கு எந்த எண்ணெய் விட்டால் என்ன பலன்




காலை 3 முதல் 5க்குள் தீபமேற்றுவது வீட்டில் சர்வ மங்கள யோகத்தை உண்டாக்கும்.

வேலை வேண்டுவோர், நல்ல கணவன் வேண்டுவோர் குடும்பசுகம், புத்திர சுகம் வேண்டுவோர், சாயங்கால வேளை தீபம் மகாலட்சுமியை வழிபட அப்பலன் அடையலாம்.

இறைவனுக்கு உகந்த எண்ணெய்

மகாலட்சுமி	- நெய்	தேவி	—	ஐந்து வகை எண்ணைகளும்
நாராயணன்	- நல்லெண்ணை			
கணபதி	- தேங்காய் எண்ணை	சர்வ தேவதைகள்	—	நல்லெண்ணை
ருத்ராதி தேவதை	- இலுப்பை எண்ணை			





முகம் ஏற்றுவதின் பலன்

ஒரு முகம் ஏற்றுவது	: மத்திம பலன்
இரண்டு முகம் ஏற்றுவது	: குடும்ப ஒற்றுமையை பெருக்கும்
மூன்று முகம் ஏற்றுவது	: புத்திர சுகம் தரும்
நான்கு முகம் ஏற்றுவது	: பசு, பூமி இவற்றைத் தரும்
ஐந்து முகம் ஏற்றுவது	: செல்வத்தைப் பெருக்கும்

மண்ணால் செய்யப்பட்ட அகல் அல்லது வெள்ளி பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட விளக்குகள் பூஜைக்கு மிகவும் உகந்தது.




பூஜை முடிந்தவுடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர்முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், சீர் அதிரசம், தேன்குழல், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.



தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர் அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.



கார்பசேவ்
அட, இங்கே தண்ணி ஊத்தினா அங்கே முளை விடுதே...!
மறுசீரமைப்பு
கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகள்!
சுதந்திர உணர்வு
வி.பி.சிங்
மரியாதையா லஞ்சம் வாங்கினவங்க பேரை எல்லாம் சொல்லி பணத்தைத் திருப்பித் தர்றியா... இல்லே, இன்னு போடவா?
ஒப்பந்த ரத்து
போஃபர்ஸ் நிறுவனம்
ராகவானந்தம்
அவரு வேணா குதிச்சிடப் போறாரு... கம்பப் புடுங்கற வழியைப் பாருங்க!
தமிழக உடன்பிறப்பு
கலைஞர் ஆதரவு



ஸ்ரீ
கல்கி

1990 ஜனவரி 7
மலர் 48 இதழ் 23
சுக்ல மார்கழி 23



வாழப்பாடியின் எச்சரிக்கை!

பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்கி, கருணாநிதி, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். என்ன கருத்துப் பரிமாற்றம் நடந்தது என்பது தெரிய வரவில்லை. ஆனால் தமது பணி முடிந்து விட்டது என்றும் இனி பிரதமரின் பொறுப்பு என்பதாகவும் முதல்வர் கூறியது வியப்பளிப்பதாக உள்ளது. ஈழத் தமிழ்ப் போராளிகளின் இதர பிரிவினர், வியப்புடன் வேதனையும் அடைந்து, 'விடுதலைப்புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் தம் பணி முடிந்ததாகக் கருணாநிதி சொல்லலாமா?' என்று கேட்டிருக்கின்றனர். ஆனால் கருணாநிதியோ, ஈழத் தமிழர் பிரச்னைக்கு நல்ல முடிவு ஏற்படும் என்பது போல் நம்பிக்கை தெரிவித்துப் பேசியிருக்கிறார். அவரது நம்பிக்கையை நம்மால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

விடுதலைப்புலிகளை நம்பி ஒரு காரியமும் செய்ய முடியாது என்பது கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசை எதிர்த்து இலங்கை ராணுவத்துடன் முன்பு போராடியவர்கள், இன்று அதே இலங்கை அரசுடன் குலாவுகிறார்கள்; இலங்கை அரசின் ஆதரவுடன் ஆயுதங்களையும் பெற்று வருகிறார்கள். இவர்களுடைய குறுகிய கால நோக்கங்கள், இந்திய அமைதிப் படை இந்தியா திரும்பிவிட வேண்டும்; மக்கள் பாதுகாப்புக்காகப் பயிற்றுவிக்கப்படும் TNA எனப்படும் தமிழர் தேசியப்படை கலைக்கப்பட வேண்டும்; வரதராஜ பெருமாள் ஆட்சி பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என்பன. நீண்டகால நோக்கங்களும் உண்டு. அவை, தனிச் சுதந்திர ஈழ நாடு என்பதும் அங்கு அமைய வேண்டியது சர்வாதிகார ராணுவ ஆட்சி என்பதும் தாம். இந்த நீண்ட கால நோக்கங்களில் மாறுதல் ஏதும் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி இல்லை. அதற்குச் சான்றுகள் பாலசிங்கத்தின் பேச்சிலேயே உள்ளன. 'தனி சுதந்திர ஈழம் என்ற கோரிக்கையைக் கைவிடப் போவதில்லை; கைவிடுவது உசிதமல்ல' என்றும், 'விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி (PFLT) என்ற அரசியல் கட்சி ஆரம்பிக்கப்பட்டாலும் எல். டி. டி. ஈ. என்ற ராணுவ அமைப்பு கலைக்கப்படாது' என்றும் பாலசிங்கம் தெளிவாகவே கூறியுள்ளார். எனவே, 'ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விட்டோம், வன்முறையைக் கைவிட்டு விட்டோம், அரசியல் கட்சி ஆரம்பித்து விட்டோம்' என்றெல்லாம் இவர்கள் ஆட்டம் போடுவதை ஜீரணிக்க முடியவில்லை.

ஈழத்திலிருந்து அமைதிப்படை வாபஸ் ஆக, ஆக, அந்த இடங்களில் தங்கள் ஆளுமையைச் செலுத்தி, தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் போக்கு ஒரு புறம், தமிழ்நாட்டிலிருந்து கஸ்டம்ஸ் அதிகாரிகளைச் சிறைப்பிடித்துக் கொண்டு போகிற அளவுக்கு அசட்டுத் தைரியம் மறுபுறம் — (நல்லவேளை, பிரச்னை விசுவரூபம் எடுக்கு முன் தவறை உணர்ந்து அதிகாரிகளை விடுவித்து விட்டார்கள்.) இவையெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு உள்நோக்கங்கள் உண்டு என்பதை உறுதிப்படுத்தும் செயல்கள். ஈழத் தமிழர் பிரச்னை தீர, இதுபோன்ற கொள்கைகளும் நடவடிக்கைகளும் உதவுபடியாக இல்லவே இல்லை.

அமைதிப் படை வாபஸ் ஆனதுமே வரதராஜ பெருமான் ஆட்சி விழுந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதன் பிறகு அங்கே மறுபடி தேர்தல் நடக்குமா? நடந்தாலும் விடுதலைப்புலிகளின் பழிவாங்கலுக்கு அஞ்சாமல் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பார்களா? அப்படியே வாக்களித்து விடுதலைப்புலிகள் ஆட்சிக்கு வந்தாலும் ஜனநாயக ஆட்சி அங்கு நீடிக்குமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எதிர்மறையான பதில்களே கிடைக்கின்றன. கொழும்புவுக்கு இவர்கள் அடிபணிந்து நடக்கப் போவதுமில்லை; ஸ்ரீலங்கா அரசும் இதுவரை மறுத்து வந்திருக்கிற உரிமைகளையெல்லாம் இவர்கள் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் பதவிக்கு வந்து விட்டார்கள் என்பதால் வாரி வழங்கிவிடவும் போவதில்லை. போராட்டமே வேறு உருவில் தொடரும்.

இத்தகைய சூழ்நிலையில், ''தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் மிக அதிகமாகி வருகிறது'' என்ற வாழப்பாடி ராமமூர்த்தியின் எச்சரிக்கை அர்த்தமுள்ளதாக ஒலிக்கிறது.

நல்லது செய்ய நினைக்கிறார் முதல்வர். பிரதமரும் நன்மையையே எண்ணுகிறார். ஆனால் தமிழக அரசின் நல்லெண்ணமும் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண பாரத அரசு நீட்டுகின்ற நேசக்கரமும் பலவீனமாக எந்தத் தரப்பிலும் கருதப்பட்டு விடக் கூடாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

டாக்டர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஒரு புதிய சலுகை!

INDIA'S LARGEST PAIDUP CAPITAL CHIT COMPANY

'இந்து'வின் எக்ஸிக்யூடிவ் சீட்டு குரூப்புகள்

சிட் பண்டுகளில் இதுவரை வழங்கப்படாத

புதியதொரு சலுகை

முதன்முறையாக 'இந்து' வழங்குகிறது.

டாக்டர்கள், பேராசிரியர்கள், இன்ஜினியர்கள், அரசு அதிகாரிகள் போன்றோர்க்கு நபர் ஜாமீன் (SURETY) பேரில்

ரூ. 1,00,000 முதல் ரூ. 2,00,000 வரை

1000 × 100 மாதங்கள்		2000 × 100 மாதங்கள்
73/89	பைலா நம்பர்	72/89

சீட்டுத்தொகை பெற்றுக்கொள்ளலாம்.

புதிய சலுகைகள் பற்றிய மேலும் விவரங்களுக்கு அணுகவும்:-

இந்து சிட்பண்ட்ஸ்
(மதுரை) பிரைவேட் லிமிடெட்

155, வடக்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 17.
போன் : 445529 டெலக்ஸ் : 8868 TANX-IN

220, என்.எஸ்.சி. போஸ் ரோட், ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001. தொலைபேசி: 583901, 583178.

194, வக்கீல் புதுத் தெரு, மதுரை - 625 001. தொலைபேசி: 34940, 31351.

22, வணிகர் தெரு, காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி: 3048.

166, கண்ணம்புக்கார வீதி, லாங் பஜார், வேலூர் - 632 004.

106, பெரிய தெரு, திருவண்ணாமலை - 606 601. தொலைபேசி: 2681.

586, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர் - 1. தொலைபேசி: 30993.

16-4-40/2 சர்ச் தெரு, சித்தூர்.

TAS

ரெஸிடெண்ட் மேனேஜர்கள்

• நாகபட்டினம்-1 எஸ். துரைஅரசன் 8/103, ராஜா ராணி காம்ப்ளக்ஸ், முதல் மாடி, நீலா தெற்கு தெரு, தொலைபேசி: 2547. நெய்வேலி-1 ஜி. இளங்குமரன் டி-22, மாணிக்கவாசகர் ரோடு, பிளாக் - 2 • நெய்வேலி-3 திருமதி. சி. சேகில 105/டி பிளாட்ஸ், பிளாக் - 6 • நாகர்கோவில்-2 என்.எஸ். சுரேந்திரன் "பங்கஜ் இல்லம்" வெள்ளாள தெரு, வடாலகுடி • சிதம்பரம்-2 திருமதி. வி. விசாலம் எண்.4, புரபெஸர்ஸ் தற்காலிக குடியிருப்புகள், அண்ணாமலை நகர் • ராணிபேட்-3 வசந்தி "ராம் நிவாஸ்" பாரதி நகர், சிப்காட் • மயிலாடுதுறை ஜெ. சந்திரசேகரன் 73, செட்டி தெரு

15 வருட கால மக்களின் நம்பிக்கை. ✱

ஓய்வு பெற்றவர்கள் கூறும் உருப்படியான திட்டங்கள்



* நீதிபதி வேணுகோபால்



* டி. பி. பாரதி

"ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், பொறியாளர்கள், நீதிபதிகள், டாக்டர்கள் என்று பல்வேறு பொறுப்புக்கள் வகிப்பவர்கள் ஓய்வு பெறுகிற போது அவர்களின் திறமைகளெல்லாம் அப்படியே வீணாகத்தான் போக வேண்டுமா? அவர்களின் அனுபவம் நிறைந்த ஆலோசனைகளை இழப்பதென்பது மிகப் பெரிய நஷ்டமல்லவா' என்று யோசித்தேன். இது பற்றி ஓய்வு பெற்ற நான்கைந்து அதிகாரிகளுடன் பேசினேன். அனைவரும் இது பற்றித் தீவிரமாக விவாதித்தோம்.

"நாம் அனைவரும் நம்மிடமுள்ள பல்வேறு யோசனைகளை ஒன்று சேர்ந்து விவாதித்து, அவற்றுக்கு ஓர் இறுதி வடிவம் கொடுத்து, அரசாங்கத்துக்கு அளித்தால் என்ன? சுற்றுச் சூழல் பாதுகாப்பு, காவிரி நீர்ப் பிரச்னை என்று எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றனவே'

"அந்த விவாதத்தின் விளைவுதான் இன்டலக்சுவல் ஃபாரம்' என்னும் மூதறிஞர் குழு. இதில் இப்போது முந்நூறுக்கும் மேற்பட்ட ஓய்வு பெற்ற திறமையாளர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாதம் ஒருமுறை அனைவரும் ஒன்று கூடி, பிரச்னைகளை விவாதிக்கிறோம். பல்வேறு கோணங்களிலும் அலசி ஆராய்ந்து அவற்றை அறிக்கைகளாகத் தயார் செய்து அரசுக்கு அளித்துக் கொண்டிருக்கிறோம்..." என்று மூதறிஞர் குழு பற்றி விளக்கினார் ஓய்வு பெற்ற நீதிபதி வேணுகோபால்.

இந்த மூதறிஞர் குழு இதுவரை அரசுக்கு ஏதேனும் நீண்ட காலப் பயனுள்ள திட்டத்தை அளித்திருக்கிறதா?

"ஏன் இல்லை?" என்று விளக்க ஆரம்பித்தார் ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியான டி. பி. பாரதி.

"சென்னை நகரையே அசுத்தப்படுத்திச் சுகாதாரக் கேட்டை விளைவித்துக் கொண்டிருப்பவை இரண்டே இரண்டுதான். ஒன்று கூவம். மற்றொன்று பக்கிங்காம் கால்வாய். இந்த இரண்டையும் சுத்தப்படுத்தி விட்டாலே சென்னையிலுள்ள பாதி சுகாதாரக் கேட்டை அடியோடு ஒழித்த மாதிரி.

"இன்று கூவமும், பக்கிங்காம் கால்வாயும் சொல்ல முடியாத அளவுக்கு அசுத்தமாகிப் போனதால், அவற்றில் நீர் வாழ் உயிரினங்களே இல்லை. உயிரினங்கள் ஏதும் இல்லாததாலேயே அசுத்தமான நீர் மேலும் அசுத்தமாகிறது. எனவே, முதல் வேலையாகத் தூர் வார வேண்டும். அடுத்து கூவத்தில் இரண்டு அல்லது மூன்று இ. [illegible]



* நோய்களைப் பரப்பும் கூவம்...

இடைவெளிகளில் தடுப்பு அணைகள் (செக்டேம்கள்) கட்டப்பட வேண்டும்.

"பிறகு பெரிய பெரிய ராட்சசக் குழாய்கள் மூலம் கடல் நீரை எடுத்துச் சென்று அண்ணாநகருக்கு அருகில் கூவத்தில் கலக்கச் செய்ய வேண்டும். இந்த நீரின் அளவு விநாடிக்கு நூறு கன அடியாக இருக்க வேண்டும். இப்படி விடப்படும் நீர் அங்கங்கே உள்ள தடுப்பு அணைகளில் நிரம்பி நிரம்பி வழிந்து வருவதால் கூவத்தின் நீர் மட்டம் உயர்ந்து விடும். அதில் — ஆங்காங்கே உள்ள தடுப்பு அணைகளில் மீன் வளர்ப்புச் செய்யலாம்.

"அடுத்ததாகப் பக்கிங்காம் கால்வாய், எண்ணூர் அனல்மின் நிலையத்தில் குளிர்விக்கப் பயன்படுத்தப்பட்ட நீரை விநாடிக்கு அறுநூறு கன அடி வீதம் கடலில் விடுகிறார்கள். அதில் 150 கன அடி நீரைப் பக்கிங்காம் கால்வாயில் விடச் சம்மதித்திருக்கிறது நிர்வாகம்.

"இப்படி அனல்மின் நிலையத்திலிருந்து பக்கிங்காம் கால்வாயில் விடப்படும் நீரும், அண்ணாநகருக்கருகில்கூவத்தில்விடப்படும் கடல் நீருமாகச் சேர்ந்து இரண்டையும் சுத்தமாக்கிச் சுகாதாரக் கேட்டைக் குறைத்து, சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்கும்.

கூவத்தில் கடல்நீர் விடப்படுவதால் கூவம் கரைகளிலுள்ள கிணற்று நீர் உப்பாகி விட வாய்ப்பிருக்கிறது என்பதால், கூவம் படுகைகளில் பாலிதீன் விரிப்புச் செய்து விடலாம். இதுவொன்றும் கடினமான விஷயமல்ல. கடலிலிருந்து நீரைக் கொண்டு சென்று அண்ணாநகரருகில் கூவத்தில் விடுவதற்கு மூவாயிரம் குதிரைச் சக்தி கொண்ட மோட்டார் தேவை. அதற்கு ஆண்டுக்குச் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்கு மின் கட்டணமாகும். இந்தச் செலவை மீன் வளர்ப்பின் மூலமும் படகுப் போக்குவரத்தின் மூலமும் சரிக்கட்டி விடலாம்!" என்றார் டி. பி. பாரதி.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரம் பற்றிய பிரக்ஞை வெளி நாட்டரசுகளுக்கு இருக்கும் அளவுக்கு நம்மூர் அரசாங்கங்களுக்கு இல்லை என்பது உண்மைதான். இருந்தால் அது .சமீபத்திய தேர்தல் அறிக்கையில் முக்கிய இடம் பெற்றிருக்க வேண்டுமே!

— ப்ரியன்

படங்கள்: ராஜன்



வாசனின் பெருந்தன்மை

ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன் ஒருமுறை பம்பாய் சென்றிருந்த போது, தமது படம் ஒன்றைத் திரையிடுவது சம்பந்தமாய்த் திரையரங்க உரிமையாளர் ஒருவரைச் சந்தித்தார். அந்த உரிமையாளர், அப்போது தமது அரங்கில் ஓடிக் கொண்டிருந்த படத்துக்குக் கூட்டமே வரவில்லை என்றும், தாம் உடனே வாசனின் படத்தைத் திரையிடத் தயார் என்றும் தெரிவித்தார். அன்றிரவு வாசன் அந்தத் திரைப்படத்தைப் பார்த்தார். விரல் விட்டு எண்ணக் கூடிய அளவே கூட்டம் இருந்தது.

படம் முடிந்ததும் திரையரங்க உரிமையாளரிடம் சென்ற வாசன், தாம் பார்த்த படத்தின் தயாரிப்பாளர் — இயக்குனரின் விலாசத்தை வாங்கிக் கொண்டு, இரவோடு இரவாகக் குதிரை வண்டியில் அவர் வீட்டுக்குச் சென்று கதவிடித்து அவரைச் சந்தித்தார். தாம் பார்த்த படம் அற்புதமாக இருந்தது என்று மனப்பூர்வமாய்ப் பாராட்டுத் தெரிவித்தார். 'உங்கள் திறமையை உலகமே ஒருநாள் போற்றும்' என வாழ்த்தினார்.

வாசன் பார்த்த படம் 'பதர் பாஞ்சாலி.' ஆமாம்! தயாரிப்பாளர் — இயக்குனர் சத்யஜித் ரேதான்!

மற்றொரு சமயம், ஏ. பி. நாகராஜன் 'தில்லானா மோகனாம்பாள்' திரைப்பட உரிமையை வாசனிடமிருந்து பெற விரும்பி அவரை அணுகினார். ஆனால் அதைத் தாமே எடுக்க இருப்பதாகக் கூறி ஏ. பி. என். ஐ அனுப்பி விட்டார், வாசன்.

பிற்பாடு 'திருவிளையாடல்' படம் வெளியானதும் அதைப் பார்த்த வாசன் அசந்து போய், தாமே ஏ.பி.என்.ஐ அழைத்துத் 'தில்லானா மோகனாம்பாள்' பட உரிமையைக் கொடுத்தார். அதற்கான தொகையைச் 'செக்' ஆக வாசனிடம் அளித்தார் ஏ.பி.என்.

'தில்லானா மோகனாம்பாள்' கதையை எழுதிய கொத்தமங்கலம் சுப்புவுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஏ. பி. என்., பத்தாயிரம் ரூபாய்க்குச் 'செக்' எழுதி அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

'செக்'கைப் பார்த்த கொத்தமங்கலம் சுப்பு, 'சற்றுப் பொறுங்கள்' என்று கூறிவிட்டு, வீட்டின் உள்ளறையிலிருந்து வேறொரு 'செக்'குடன் திரும்பினார். அதை ஏ.பி.என்.விடம் காட்டினார்.

ஏ. பி. என். வாசனுக்குக் கொடுத்த 'செக்' அது. வாசன் அதனை அப்படியே கொத்தமங்கலம் சுப்பு பெயருக்கு 'endorse' செய்து விட்டிருந்தார்!


(23.12.89 அன்று காலை அகில இந்திய வானொலியின் தென் கிழக்கு ஆசிய ஒலிபரப்பில் நடிகர் சிவகுமார் கூறக் கேட்டவர்:

— டி. கே. சுப்பிரமணியம்.)





Photo : Shrihari



* கல்யாண வரதர்

சாஸ்தா கல்யாணம்

வில்லிவாக்கம் ஸ்ரீ காமகோடி திருமண மண்டபத்தில் கூட்டம் பொங்கிற்று! ஆண்களும், பெண்களுமாய் நயமான நாதஸ்வர இசையுடன் நீண்ட ஊர்வலமாக மண்டபம் நோக்கி வந்தார்கள். இளைஞர்கள் உற்சாகமாய் வாண வேடிக்கைகள் விட்டுக் கொண்டிருந்தார்கள். 'ஏதாவது பிரமுகர் வீட்டுக் கல்யாணமோ? ஆனால் மார்கழி மாசமாயிற்றே...' சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டது.

அது எந்த மனிதப் பிரமுகரின் வீட்டுத் திருமணமும் இல்லை; தெய்வத் திருமணம்! ஸ்ரீ சாஸ்தா திருக்கல்யாணம்! மீனாட்சி திருக்கல்யாணம், ராதா திருக்கல்யாணம் போன்று ஐயப்ப பக்தர்கள் ஸ்ரீ சாஸ்தா திருக்கல்யாணமும் பிரும்மாண்டமாய் நடத்தி வருகின்றார்கள். 'சபரிமலையில் பிரம்மசாரியாகத் தவக்கோலத்தில் காட்சி தரும் ஐயப்பனுக்குக் கல்யாணமா?' என்று விழியை அகட்டி ஆச்சரியம் காட்டுகின்றீர்களா? சபரிமலையில் பிரம்மச்சாரியாக அமர்ந்திருக்கும் ஐயப்பனுக்கு மணிகண்ட அவதாரத்தில்தான் கல்யாணம் கிடையாது. அதற்கு முந்தைய அவதாரமான ஹரிஹர சுதன் அவதாரத்தில், கைலையிலும், காந்த கிரியிலும் வீற்றிருக்கும் சாஸ்தாவுக்குப் பூர்ணா, புஷ்கலா என்று இரண்டு தேவியர்கள் உண்டு!



* விஸ்வநாத சர்மா

கல்யாண மண்டபத்திற்குள் நுழைந்ததும் நீண்ட ஹால் — நீளநீளமாய் ஜமுக்காளங்கள் விரித்து அடர்த்தியாய்ப் பக்தர்கள் அமர்ந்திருந்தார்கள். பொதுவாக ஐயப்ப பஜனை மடத்திற்குப் பெண்கள் அதிகம் வருவதில்லை. ஆனால் இங்கு பெண்கள் கூட்டம்தான் அதிகம்.

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட உயரமான மேடை. அதில் மிகச் சின்னதாய் ஒரு ஊஞ்சல். இடதுபக்கம் பூர்ணா வலப்பக்கம் புஷ்கலா சகிதம் மிகக் கம்பீரமாய்ப் பத்துக் கரங்களுடைய கல்யாண வரதர் (ஐயப்பன்). ஐம் பொன்னால் செய்யப்பட்ட அழகான விக்கிரகம். உற்சவ மூர்த்தி— ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் மிகவும் உயரமாய், பதினெட்டு (பூ)படிகளுக்கு மேல் ஒரு ஐயப்பன் ஜொலித்துக் கொண்டிருந்தார். ரோஜா, சாமந்தி, மல்லிகை என்று பூக்களைச் சொரிந்து அலங்கரித்திருந்தார்கள். மேடையின் இரு பக்கங்களிலும் இடுப்புயரத்தில் வெண்கலக் குத்து விளக்குகள் சுடர்


விட்டன. பார்த்ததும் கை உயர்த்திக் கூப்பி வணங்கச் செய்தது அந்தச் சூழ்நிலை.

பக்கத்துத் தெருக்களிலிருந்து ஊர்வலமாக வந்த பெண்கள் சீர்வரிசைகள் சுமந்து கொண்டு வந்தார்கள். முறுக்கு, வடை, லட்டு, ஜிலேபி என்ற வகையறாக்களும்.. வேஷ்டி, சேலை துண்டு, பட்டுப் பரிவட்டங்கள் என்ற வஸ்திர வகையறாக்களும் பெரிய பெரிய தட்டுகளில் வைத்து, அத்துடன் தேங்காய், பழவகைகள் என்று நீண்ட ஊர்வலமாய்ச் சுமந்து வந்தார்கள். தத்தமது தகுதிக்கேற்பப் பெரும்பாலும் எல்லோருமே சீர் கொண்டு வந்தார்கள். வஸ்திரங்களை ஸ்வாமிக்குப் படைத்து விட்டு எடுத்துச் சென்றார்கள்.

திடுமென நாதஸ்வர இசை அடங்கிற்று! ஒலிபெருக்கி மௌனமானது. பெரிய வரிப் புலி ஒன்று மண்டபத்திற்குள் பாய்ந்து வந்தது! அவ்வளவுதான் சிறுவர்களும், பெண்களும் இட்ட கூச்சலில் மண்டபமே ஆடிப் போயிற்று! கூச்சல் அதிகரிக்க, பால ஐய்யப்பன் தோன்றினான். உள்ளங்கை குவித்து புலியின் மீது ஒளி சிந்தினான். புலி கிறங்கிற்று; ஐயப்பனின் பாதங்களில் வந்து பவ்வியமாய்ப் படுத்துக் கொண்டது! பாலகன் புலி மீதேறி அமர்ந்து கொண்டு கூட்டம் பார்த்து ஆசீர்வதித்தான் — இந்தச் சிறு நாடகம் பார்த்து மண்டபமே குதூகலப் பட்டது.

ஸ்வாமி மணமேடைக்கு எடுத்து வரப் பட்டார். பெரியவர்கள் சிலரை சபை நடுவே உட்கார வைத்து மங்கல ஸ்நானம் நடத்தி முடித்ததும் கல்யாண சூர்ணிகை வாசித்தார்கள். அதாவது, மணமகனான ஐய்யப்பன், மணமகள்களான பூர்ணா புஷ்கலா இவர்களின் திருமண அலங்காரங்கள் பற்றி வர்ணனை... ஒருவர் பாடக் கூட்டமும் பின்னால் பாடிற்று! பாட்டு முடிந்ததும் வயதில் மூத்த மூன்று பெற்றோர்கள் முன்வந்து அமர்ந்தார்கள். ஒருவர் ஐய்யப்பனின் பெற்றோர்கள்; மற்ற இருவர் முறையே பூர்ணா — புஷ்கலாவின் பெற்றோர்கள்.

மந்திரங்கள் ஓதப்பட்டன. நீண்ட திரை பிடித்து ஸ்வாமியை மறைத்துக் கொண்டார்கள். நாதஸ்வர இசை உச்சஸ்தாயியை எட்ட, கெட்டி மேளம் கொட்ட, ஆலயமணி



* சாஸ்தாவுக்குச் சீர்வரிசை

ஒலிக்க — இந்த மங்கல ஓசைகளில் மண்டபம் அதிர, அலை அலையாய்ப் பக்தர்கள் குரல் எழும்பிற்று! பரவசத்துடன், 'ஸ்வாமியேய்... சரணமய்யப்பா...' என்று மூச்சு விடாது தொடர்ந்து கூவினார்கள் பக்தர்கள். அந்த ஒரு கணப் பொழுது சகலமும் ஸ்தம்பித்த மாதிரியான ஒரு பிரமை. சாஸ்தாவின் நாமம் மட்டுமே சாஸ்வதம் போல ஒலித்தது.

திரை விலகியது. பூர்ணாவும் புஷ்கலாவும் மாங்கல்யத்துடன் காட்சி தந்தார்கள். கல்யாணம் முடிந்ததும் வடை பாயசத்துடன் சாப்பாடு. பக்தர்கள் மாத்திரமல்ல எல்லாரும் வந்து சந்தோஷமாய்ச் சாப்பிட்டு விட்டு சாமி தரிசனம் பண்ணிச் சென்றார்கள்.

இப்படி சாஸ்தா கல்யாணத்தை 1979 லிருந்து நடத்தி வருகின்றனர், வில்லிவாக்கம் ஐயப்பா பஜனை சங்கத்தினர். ஐம்பொன்னில் பூர்ணா — புஷ்கலா சமேத கல்யாண வரதரை வடிக்கச் செய்து, அச்சிலைகளைப் பக்தர்கள் விரும்பும் இடங்களுக்கு எடுத்துச் சென்று, ஆங்காங்கே கல்யாண உத்ஸவம் நடத்தி வருகின்றனர். விசுவநாத சர்மாவின் சுறுசுறுப்பான தலைமையில் இச் சங்கம் பக்தி வளர்த்து வருகிறது. அதோடு திருக்கல்யாணம் நடத்தி வைப்பதாலும் சாஸ்தா கல்யாண வைபவத்தில் கலந்து கொள்வதாலும் கல்யாணம் ஆகாதவர்களுக்குச் சீக்கிரம் கல்யாணம் நிச்சயமாகி நடப்பதாக பக்தர்களிடையே நம்பிக்கை வளர்ந்து, வலுப்பட்டுள்ளது.

— பாரதிபாலன்

புகைப்படங்கள்: சுபா

சபரிமலையில் சில்லறை மலை!

சபரிமலை ஐயப்பன் கோவில் உண்டியலில் கடந்த ஆண்டு மட்டும் 1.25 கோடி ரூபாய்க்குச் சில்லறைக் காசுகளாகச் சேர்ந்தது. கோவில் வருமானம் எல்லாம் தனலக்ஷ்மி வங்கியில் போட்டு வைக்கப்படுகிறது. வங்கிக்கு இந்தச் சில்லறைப் பிரச்னை பெரிய தலைவலியாக விளங்குகிறதாம். தற்போது சுமார் 1.6 கோடி ரூபாய் மதிப்புக்குச் சில்லறைக் காசுகள் வங்கியின் சபரிமலைக் கிளையில் குவிந்து கிடக்கின்றன.

வங்கியின் உயர் அதிகாரி ஒருவர், இவ்வளவு பணமும் உபயோகிக்க வழியின்றி முடங்கிக் கிடக்கிறதே என்ற கவலையை வெளியிட்டுள்ளார்.

சில்லறையை ரிசர்வ் வங்கியில் கொடுத்து நோட்டுகளாக மாற்றிக் கொள்வதில் என்ன தடங்கலோ?

நன்றி: ஹிந்துஸ்தான் டைம்ஸ்

23

இரண்டாவது சூரியன்

உலகத்தில் வேறெந்த உயிர்களுக்கும் இல்லாத ஒரு வேதனை மனிதனுக்கு இருக்கிறது — நல்லதும் தீயதுமான கலவை அவனிடம் மட்டுமே இருக்கிறது.

புழு பூச்சி, பறவை, மிருகம், எல்லாம் வன்முறை கொண்டுள்ள உயிரினங்கள். திறம்படத் தாக்குதல் நடத்தத் தெரிந்தவை. ஆனால் அவற்றின் வன்முறை சந்தோஷம் கருதியல்ல — கர்வத்தின் விளைவு அல்ல; தன்னையே காத்துக் கொள்ளும் முறையும், தன் உணவு தேடும் வகையாகவும் மட்டுமே வன்முறை அவற்றுக்கு உணர்வாகிறது. உண்டு முடித்து, புரண்டு புரண்டு வெயிலில் தூங்கும் சிங்கக் கூட்டம் அருகே மான்கள் புல் மேயும். கன்றுகளைத் தொட வரும் மிருகத்தின் மீதுதான் காட்டெருமை குளம்படிரப் பாயும். பயத்தின் மிரட்சியில்தான் பாம்பு சீறும். நெருக்கம் தெரியும் போதுதான் கொத்தி விஷம் கக்கும்.

வதைக்க விரும்பும் ஆசை மனிதனுக்கு மட்டுமே வந்துவிட்டது. விதம் விதமாய் வதைத்து ஆனந்தப்படும் விசேஷ குணம் அவனிடம் மட்டுமே இருக்கிறது. சாத்தானின் பார்வை உலகத்தின் எந்த உயிர் மீதும் படவில்லை. மனிதன் மீது மட்டுமே படர்ந்து அவனைக் கண்டு பயம்கொள்ள வைத்து விட்டது.

அதில் தன்னினத்தையே, தன்னைப் போன்ற ஒரு மனிதரையே அவன் வதைக்க விரும்புகிற வேட்கையை எங்கிருந்து பெற்றான் என்பது புரியவில்லை. அச்சப்படுகிற பெண்ணையே ஆட்டிப் படைத்து, மேலும் அச்சுறுத்த அவன் முயல்வதின் அடிவேர் புரியவில்லை.

நீ வேறு காடு, நான் வேறு காடு என்று பானுமதி விலகினாலும், தேடி வந்து கதவு உதைத்து, மறுபடி முகத்தில் கதவு மோதி, உதடு பிய்ந்து ரத்தம் வர — இதற்கும் பானுமதிதான் காரணம் என்று எரிச்சல் அதிகமாயிற்று கதிரேசனுக்கு.

''உனக்கு முதல்வர் எப்படித் தெரியும்,என்னாலதானே தெரியும். நான் வேணாம்னு தள்ளிட்டு எனக்குத் தெரிஞ்சவங்களைக் கொண்டாடுவியா? அந்த வீட்ல உனக்குச் சோறு எப்படிடி போட்டாங்க...? உன் எம். எஸ்ஸி. கெமிஸ்டிரிக்கா போட்டாங்க? என் கவிதை, என் தமிழ், என் பேச்சு, அதுனாலே உனக்கு மரியாதை — இப்ப அங்கே போயி 'நான்தான் கதிரேசன் தாலி கழட்டி எறிஞ்ச பொண்டாட்டி'ன்னு நின்னியா?

''நான் சீமாண்டி! தமிழ்க் கவிஞன்! கவி — இந்தக் கொம்பு இல்லேன்னா அந்தக் கொம்பு! உண்டோ' குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு! கட்சி பிரிஞ்சுது. கூப்பிட்டுக் கிரீடம்வைச்சாங்க.பிரிஞ்சகட்சியிலபோய்ப் பாடினேனே தவிர, இவரை ஒரு வார்த்தை குற்றம் சொல்லியிருப்பேனா! சீ, தூன்னு சொல்லியிருப்பேனா? இன்னிக்கு என்னைக் குத்தம் சொல்ல வச்சிட்டியேடி நாயே!

நாலு பசங்களை உட்கார வைச்சு என்னை நிக்க வைச்சு... ஐயோ நான் வந்தால் நாற்பது பேர் எழுந்து நிப்பானுங்களே, நாற அடிச்சுட்டியே, என்னை...!''

கார் ஓட்டிக் கொண்டு, பானுமதி வீடு வரும் வரை வந்த புலம்பல் நச்சென்று முகத்தில் கதவு அடித்ததும் நின்றது.

யார் உள்ளே என்று ஆர்வம் வந்தது.

அவன் எழுந்து நின்றான். எங்கோ பார்த்தது போல் தெரிந்தது. எங்கே, என்று புரியவில்லை. அவள் பின்னால் நின்றபடி அவரை வியப்புடன் பார்த்தான்.

''ஐயா வாங்க'' அவன் கைகூப்பினான். மனசு சமாதானமாகவில்லை.

''யார் நீ?''

''பரத். வீடியோ கடை வச்சிருக்கேன். ஐயாவைப் பார்த்தேன். அடையார் ஹோட்டல்ல.''

''எந்த அடையார்...?''

கவிஞருக்குக் குழப்பிற்று. கோபம் போய் உள்ளே ஒரு ஆத்திரம் வந்தது. கடுகடுப்பு ஏறிற்று. கோபம் கொட்ட,குறையும். வெளிப்படுத்த,சமனமடையும். ஆத்திரமும் கடுப்பும் இன்னும் மோசமானவை — கோபம் வெட்டுப்பட்ட வலி. ரத்த ஓட்டம் நிறுத்த, குளிர் ஜலம் கொட்ட, நிதானமாகும். ஆத்திரம் விஷக்கடி. எத்தனை முயன்றும் இடம் இடமாகப் பரவி, துடிக்க வைக்கும்.

''நீ என்ன பண்றே இங்கே?''

பரத் தயங்கினான். தப்பாய் இருக்கிறார் கவிஞர் என்று புரிந்து கொண்டான். உள்ளே சிறிய பயம் தோன்ற, பேசாதிருந்தான்.

அந்த மௌனம், அவர் விஷத்தை மேலேற்றியது,பரவியது.

''நீ என்ன பண்றே இங்கே?'' நிதானமாய் ஒவ்வொரு சொல்லாய்க் கேட்டார்.

''என் அக்கா பொண்ணு ட்யூஷன் படிக்குது. இவங்க கிளாஸ்''.

''நீ என்ன படிக்கறே?''

பானுமதி பளிச்சென்று பின்வாங்கினாள். சுவரோடு சாய்ந்து கொண்டாள். நாகம்மாள் கொல்லைப்புறத்திலிருந்து எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

''அது யாரு?''

''வேலைக்காரி ஐயா. உள்ள வாங்க...''

'கூச்சலோ, குழப்பமோ, எது ஏற்பட்

பாலகுமாரன்

டாலும் வீட்டிற்குள் நடந்து விடட்டும் — வெளியே நாலு பேர் காதுக்குப் போக வேண்டாம்' என்று யோசித்தான்.

''அப்ப நீ வெளியே போ!''

பரத் திரும்பி பானுமதியைப் பார்த்தான். அவள் போகாதே என்று தலையசைத்தாள்.

''ஐயா உங்களுக்கு என்ன வேணும்னு சொன்னால்...''

''உனக்கு என்னடா வேணும்? உங்க அக்கா பொண்ணு வேணுமா, வேற ஏதாவது வேணுமா? பேசாம உங்க அக்கா பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போ.''

''அவ வரலைங்க.''

''ஏன் அவளுக்குப் பதிலா நீ படிக்கிறியா? பசிச்சவன்தான்டா சோறு தின்னணும். பக்கத்து வீட்டுக்காரன் தின்னா நமக்கு ரொம்புமா. எங்கே அவ?''


''உள்ளே இருக்காங்க. வாங்க.''


''நீ போ — வெளியே போ!''

''ஐயா சரியாயில்லைங்க. நிதானமாச் சாப்பிட்டிருக்கக் கூடாதா?''

''அவ... எங்கே?''

''அவங்களை வாசலுக்கு வரச் சொல்றீங்களா? வர மாட்டாங்க — நீங்க உள்ளே





ரத்தன் கோஷ் — கிழக்கு கல்கத்தாவில் காங்கிரஸ் — ஐ பிரமுகர். மத்திய கல்கத்தா ஐ. என். டி. யு. சி. இளைஞர் பிரிவின் தலைவர்; பெரிய வியாபாரி. பிளைவுட் தொழிற்சாலை அதிபர். ஒரிஸ்ஸாவில் பெரிய நிலப்பரப்புக்குச் சொந்தக்காரர். பல கடைகள், ஏழு லாரிகளின் முதலாளி.

இதே ரத்தன் கோஷ் கல்கத்தா முனிசிபாலிடியில் ஒரு துப்புரவாளராகவும் சம்பளம் வாங்குபவர்!

மாதா மாதம் சம்பளம் வாங்க, இந்தத் துப்புரவுத் தொழிலாளி காரில் வந்து இறங்குவார்! விஷயம் பெரிய களமுசா ஆனதன் பலன், முனிசிபாலிடி இவரை வேலையை விட்டு நீக்கியது!

— முத்து.

''சைக்கிள் செயின் கத்தி மேலே வேட்டி கட்டி, சட்டை போட்டுக்கிட்டா யாராலும் கண்டுபிடிக்க முடியாதில்லே?''

''முடியாது தலைவரே! ஆனால் எடைக்கு எடை கிடைக்கிற வெள்ளியில் இருபது சதம் எ ன க் கு வெட்டிப்புடணும். இல்லேன்னா பத்திரிகைக்கு நியூஸ் கொடுத்துடுவேன்...!''

— அ. தெய்வசிகாமணி.



வாங்க.''

''ஏன், ஏன்? படிதாண்டாப் பத்தினியா? — இல்லை, நான் பார்க்காத பொம்பளையா? பரத்து! நீ என் ஃபிரண்ட் — சினேகிதன். அடையார் பிரண்ட். நமக்குள்ளே தகராறு வேணாம். ஏதோ, வந்தே கொண்டே, சரி. நான் வந்துட்டேன் இல்லை? நீ போயிடு.''

''இல்லீங்க, அவங்க பயப்படறாங்க. உங்க நிலைமை வேற தெளிவா இல்லை. ரொம்ப ஆடறீங்க.''

''ஆடுவேன். நான் எப்படி ஆடினவன் தெரியுமா? டென் தவுசண்ட் ருபீஸ். ஒரே பந்தல் — இப்படிச் சுண்டிப் பாக்கெட்டுல போட்டுக்கிட்டேன்: பத்து வரி கவிதை சொன்னேன் — பத்தே வரி. அடிச்சான் கிளாப்ஸ்! விடாம அடிச்சான்.''

— கவிஞர் அந்த விரசமான வரிகளைச் சொல்ல,

''என்ன வேணும் உங்களுக்கு...?'' என்ற படி பானுமதி வெளியே வந்தாள். கவிதை சொல்லியது தாங்காமல் கோபப்பட்டாள்.

கவிஞருக்குச் சிலீரென்று உள்ளே மின்னல் வெட்டியது.

பானுமதி உடுத்திக் கொண்டிருந்த விதம், முடிந்து கொண்டிருந்த கொண்டை, விடுதலை பெற்ற சந்தோஷம் — பேரழகியாய் அவளைக் காட்டிற்று.

'இது என் சொத்தல்லவா! நான் ஆண்டு கொண்டிருந்ததல்லவா? எனக்குக் கீழ்ப் படிந்த பெண்ணல்லவா! நான் சுவைத்த உணவல்லவா? துக்கம் மண்டிற்று. அவனுக் குப் பின்னால் நிற்பது கோபமூட்டிற்று. பானுமதி பயம் காரணமாய் அவன் பின்னே நிற்கிறாள் என்பது புரியாமல் போயிற்று.

'அப்போ! உனக்குத் துக்கம் இல்லையா? இத்தனை துக்கத்துல நான் இருக்கேன் — உனக்கு இல்லையா? நீ சந்தோஷமா இருக் கியா? ஜாலியா? அரட்டையா? ட்யூஷனுக்கு அக்கா பொண்ணு வரும்னு சொன்னானே, இப்ப என்னடி வேலை அவனுக்கு? தட் மீன்ஸ் யூ ஆர் ஹாப்பி. நோ, நெவர். நோ ஹாப்பினஸ். விடமாட்டேன். உன்னைச் சந்தோஷமாக இருக்க விடமாட்டேன். உனக்கு எது துக்கம்? நான் வந்து குடிச்சுட்டு ஆடறது துக்கம். வீட்டு வாசல்ல கத்தறது அவமானம்.'

'கத்துவேன். ஆடுவேன். கன்னாபின்னான்னு பேசுவேன். வந்து ஆடி, 'வாடி என் கூட'ன்னு கூப்பிடுவேன். நீ வர மாட்டே. அப்ப கத்துவேன். கேவலமாப் பேசுவேன். அசிங்க அசிங்கமாய்த் திட்டு வேன். நாலு பேர் கேட்கத் திட்டுவேன்.'

'கற்பென்னும் கைநெருப்பைக்
கூவத்தில் கரைத்துவிட்டுக்
காலெல்லாம் சேறாக...'

விட்டுடுவேனா? கவிதைல சொல்லித் திட்டுவேன்.'

'திட்டக் கூடாதுன்னா என்னை உள்ளே விட்டுடு. கூட்டிக்கிட்டுப் படுக்கைக்குப் போ. சட்டம் பிரிச்சாச்சு. அதனால என்ன இப்போ? பொதுக் கிணறுதானே? அப்பா குடி — அம்மா குடி — நான் குடிச்சா தப்பா?'

— உள்ளே சிந்தனைகள் தடுமாறித் தடுமாறி ஓடின....

"**பா**னுமதி!" கூவியபடி உள்ளே படி யேறினார். விஷம் குறைந்து வெறியேறியது. பானுமதி என்கிற உறவு மறைந்து உடம்பு முன்னே தெரிந்தது. கள்வெறிக்குத் துணை தேவைப்பட்டது. உடல்பசி அதிகரித்தது.

பரத் தடுத்து நிறுத்தினான்.

அவர் கோபமாய் முறைத்தார்.

"கையை எடுடா! உனக்கு நான் யார்ன்னு தெரியாது."

"தெரியும் ஐயா."

"முதல்ல கையை எடு."

பரத் கைகளை அவர் தோளிலிருந்து எடுத்தான்.

"நீ வந்த வேலை முடிஞ்சு போச்சா? போ — பேசாம போ!"

"என் கூட வாங்க சொல்றேன்..."

"எதுக்கு வர்றது? வேற இடம் கூட்டிக் கிட்டுப் போறேன்றியா? இது என் இடம். மை ஓன். யூ ப்ளீஸ் கோ." — மறுபடி உள்ளே நுழைய முயற்சி செய்தார்.

பரத் இம்முறை இறுக்கமாய்த் தடுத்து நிறுத்தினான்.

"தயவு செய்து நான் சொல்றதைக் கேளுங்க. நிதானமில்லாத இருக்கீங்க. தவறா ஒரு காரியம் செய்யறீங்க. அது செய்ய உங்களை நான் விடக் கூடாது. வாங்க போகலாம்."

அவர் திமிர, அவன் படிக்கட்டுக்கு அருகே அவரை இறுக்கி இழுத்துப் போனான். தெரு ஜனங்கள் நின்றார்கள்.

நாகம்மா முன்னேறி ஹால் கதவைப் படாரென்று சாத்தினாள்.

அப்படிக் கதவைச் சாத்தியது மிகப் பெரிய அவமானமாகப் பட்டது. கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கதவு சாத்தியதாய்த் தெரிந்தது.

"யார் அவ கதவைச் சாத்தறது? என் வீட்டுக் கதவுடி அது!" — உரக்கக் கத்தினார்.

முழுப் பலத்துடன் அவனிடமிருந்து திமிறி, கதவை நோக்கி ஓடினார். நிற்க முடியாது அதன்மீது மோதினார். கதவு படாரெனத் திறந்து கொண்டது. நடுஹாலில் நின்றிருந்த நாகம்மா 'டேய்!' என்றாள்.

நாகம்மாவிடம் பளிச்சென்று தாவி அவள் முடியைப் பிடித்துக் கொண்டார். இழுத்தார்.

"போடி வெளியே! போடி வெளியே — கண்ட நாயெல்லாம் என் வீட்ல புகுந்து..."

குழந்தைகள் அலறின. பானுமதி பயந்து அவர் கையைப் பலங்கொண்ட மட்டும் நாகம்மாவின் முடியிலிருந்து விலக்க, அவள் அண்மை பட்டதும், நாகம்மாவை விடு வித்துவிட்டு அவளை அசிங்கமாய்த் தழுவ முயற்சி செய்ய, பரத் உள்ளே புகுந்து அவரை விலக்கினான்.

"விடுடா கயவாணிப் பையா!" திமிறினார்.

அவன் அவரை புஜங்களோடு இறுக்கி, மேலே தூக்கி, வாசலுக்கு வர, நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு பின்னே உந்தினார். பரத் அவரைத் தளரவிட்டு வாசலுக்குத் தள்ளினான். அவர் தடுமாறி நின்று, கழன்று விழுந்த செருப்பை எடுத்துக் கொண்டு அவன் மீது பாய்ந்தார். ஓர் அடி அவன் தோளில் விழுந்தது. மறு அடி முதுகில் விழுந்தது.

அடுத்த விநாடி பரத் ஒதுங்கிக் கொண்டான். முஷ்டியை மடக்கினான். முகவாய்க்கு நேரே ஒரு குத்து விட்டான். இடது கையால் தாடைக்குக் கீழே தாக்கினான். மறுபடி வலதுகை அவர் கன்னத்தில் இரும்பு மாதிரி விழுந்தது. கீழே விழுந்தவர் இடுப்பில் எட்டி உதைத்தான். புரண்டு விழ, முதுகில் மிதித்தான். காலரைத் தூக்கித் தரையோடு படிகளில் இழுத்துப் போனான்.

"என்ன? என்ன?" — யாரோ அவனைத் தடுத்த போது தூக்கித் தள்ளினான். கார் கதவைத் திறந்து அவரை உள்ளே தள்ளினான். எழுந்து உட்கார முயற்சி செய்த போது, உள்ளங்கையை விரைப்பாய் வைத்து உச்சி நெற்றியில் தட்டினான்.

கார் கதவைத் திறந்து, வண்டியின் ஸ்டியரிங் பிடித்து, சாவி போட்டு, எஞ்சினை இயக்கி, நகர்த்தினான். வேகமாக்கி அந்தத் தெருவை விட்டு வெளியேறினான்.

அமில மழை பொழிந்தது போலாயிற்று வீடு.

உள்ளேயிருந்த மனங்கள் நாலும் வேதனையில் உருகிப் போயின. பெண் குழந்தை நினைத்து நினைத்து விசிட்டாள். பையன் வெளிறிப் பேயறைந்தது போலானான். தெரு ஜனங்கள் அந்த வீடு பற்றி எல்லா இடத்திலும் பேசினார்கள்.

(தொடரும்)



— ஆர். அப்துல் சலாம்.

டாக்டர் சரவணன் தன் நர்ஸிங் ஹோமிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது தேவானை ஞாபகப்படுத்தினாள்.

"நாளைக்குத்தான் நம்ம ஊர் மாரியம்மன் கோவிலிலே பூச்சொரியல். நாளைக்கு நாம அங்கே போகணும். ஞாபகம் இருக்கில்லே....?"

"அது எப்படி மறந்து போகும்...? அது, தான் ஒரு மாதமா ராத்திரி, பகல்னு மாத்தி மாத்தி, இதையே திருப்பித் திருப்பிச் சொல்லி, என்னைத் தொளைத்து எடுத்துக் கொண்டிருக்கிறாயே..."

"என்ன சொல்லி என்ன பிரயோசனம்? நானும்தான் எத்தனையோ வருடங்களாகத் தொடர்ந்து கத்திக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்களும், இப்படி அப்படின்னு சாக்கு போக்குச் சொல்லித் தள்ளிப் போட்டுக்கிட்டுத்தானே வந்திருக்கீங்க..."

"சரி, சரி.. பழைய கதையெல்லாம் இப்போ வேண்டாம். இந்தத் தடவை நிச்சயமாகப் போகலாம்.." எனத் தலையை ஆட்டியபடி சொல்லி விட்டுக் கிளம்பினார் சரவணன்.

சரவணா நர்ஸிங்ஹோம் ஊரில் எல்லோருக்கும் தெரிந்த இடம். டாக்டர் சரவணன் மேல்நாடுகளில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர். நகரில் உள்ள மற்ற சர்ஜன்கள் கூட, இந்த நர்ஸிங் ஹோமில் உள்ள வசதிகள் காரணமாக, தங்களிடம் சிகிச்சை பெற வரும் நோயாளிகளை இங்கே சேரச் சொல்லிச் சிபாரிசு செய்வார்கள். இடம் கிடைப்பது சிரமம். முன்னதாகவே சொல்லி வைத்திருக்க வேண்டும்.

டாக்டர் சரவணனுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை எனச் சொல்லி விட முடியாது. ஆனால் அப்படி ஒரு நம்பிக்கை,



மனித சக்தியைக் குறைவாக மதிப்பிட்டு உழைப்பின் கௌரவத்தைக் குலைப்ப தாகும் என நம்பினார்.

தேவானை அவருக்கு நேர் எதிர்.. ஒவ்வொரு நாளைக்கு ஒரு கோவில். அட்ட வணைப்படி போய் வருவாள்.

இந்த இரு துருவங்களும் மனம் இணைந்த தம்பதிகளாய் குடும்பம் நடத்தி னார்கள். ஒருவர் மேல் இன்னொருவர் உயிரையே வைத்திருந்தார்கள்.

தேவானை பிறந்த ஊரில் மாரியம்மன் கோவில் விசேஷம். வருஷம் ஒருநாள் பெரிய அளவில் தீ மிதி, பூச்சொரியல் விழா நடக்கும். அன்றைக்குப் பொங்கலிடுவதாக வேண்டிக் கொண்டால், நினைத்த காரியம் நடக்கும் என்ற ஒரு நம்பிக்கை.

கல்யாணமான புதிது. எதிர்பாராத விதமாக டாக்டர் சரவணன் ஒரு கார் விபத் தில் சிக்கிக் கொண்டார். தலையில் காயம். நிலைமை கொஞ்சம் கவலையைத் தருவதாக இருந்தது. தேவானை தவித்துப் போனாள்.. அவள் கண் முன் ஊர் மாரியம்மன் தெரிந் தாள். ''தாயே, உன் பூச்சொரியல் விழா வின் போது இருவருமாக வந்து படையல் போடுகிறோம். எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடு!'' என வேண்டிக் கொண்டாள்.





நேரம் பொன்னானது!

டோக்கியோவில் உள்ள "டெட்ஸுஷாவா" என்பவர் தமது முடி வெட்டும் சலூனில் நான்கு சுருக்கெழுத்தாளர்களை (ஸ்டெனோ) அமர்த்தியிருக்கிறார். தம்மிடம் முகக்ஷவரம் அல்லது முடிவெட்டிக் கொள்ள வரும் நபர்கள் வியாபார சம்பந்தமான கடிதங்களைச் சொன்னால், அதைச் சுருக்கெழுத்தில் எழுதி டைப் செய்து கொடுக்கத்தான் இந்த ஸ்டெனோக்கள். முடிவெட்டும் நேரத்தைக் கூடப் பயனுள்ளதாக்கிக் கொள்கிறார்கள் ஜப்பானியர்கள்.

ஆதாரம்: 'கரண்ட்'
தகவல்: தக்கோலம் அ. முஸ்தபா.

டாக்டர் சரவணன் குணமடைந்து விடு திரும்பினார். அவள் வேண்டுதலைக் கேட்டுக் கடகடவென்று சிரித்தார். "என்னைக் கவனித்த டாக்டர்கள் யாரும் பெண்ணில்லையே...? உன் மாரியம்மன் யாருக்குள் புகுந்து கொண்டு என்னைக் குணப்படுத்தினாளாம்" எனக் கேலியாகக் கேட்டார்.

"அபசாரம். அபசாரம். அப்படியெல்லாம் தப்பாகப் பேசாதீர்கள்."

"தேவானை. நல்ல வேளையாக எங்கேயாவது போய் நான் மொட்டை போட வேண்டும். ஈரத் துணியுடன் உருள வேண்டுமென்று எல்லாம் விபரீதமாக வேண்டிக் கொள்ளாமல் இருந்தாயே!" எனத் திருப்திபட்டுக் கொண்டார்.

"இன்னும் இரண்டு நாளைக்கு நீங்கள் கண் விழிக்காமல் இருந்திருந்தால் அடுத்த படி அப்படித்தான் வேண்டிக் கொண்டு இருப்பேன்!" என்றாள் தேவானை விட்டுக் கொடுக்காமல்.

இந்தப் பதினைந்து வருஷங்களாக ஒவ்வொரு வருஷமும் முன்னாடியே ஊருக்கு ஆள் அனுப்பி எல்லா ஏற்பாடுகளும் செய்வாள் தேவானை. ஆனால் கடைசி நேரத்தில் தப்ப முடியாத காரணம் ஏதாவது தோன்றி, நினைத்தபடி செய்ய முடியாது போய் விடும்.

"எதற்கு வருத்தப்படுகிறாய் தேவானை. அடுத்த வருஷம் பார்க்கலாம்!" என்பார் சரவணன்.

"இல்லீங்க... என்ன காரணமோ தவறிக்கிட்டே போறது. எனக்குப் பயமாக இருக்குது. என் ஆயுளுக்குள்ளே இதுமுடியுமான்னு சந்தேகமா இருக்குங்க."

இவள் இப்படிப் பேசியது சரவணனின் மனத்தை உறுத்தியது. இந்த வருடம் கட்டாயம் போவதாக அவரே தீர்மானித்து விட்டார்.

மறுநாள்...

ஜெர்மனியிலிருந்து ஒரு டாக்டர் குழு சென்னை வந்திருந்தது. அவர்களைச் சந்தித்துப் பேச, டாக்டர் சரவணனைத் தபால் மூலமாக, நேரில், மற்றும் டெலிபோனில் அழைப்பு விடுத்திருந்தார்கள். அந்தச் சந்திப்பு டாக்டர் சரவணனுக்குத் தொழில் ரீதியில் நிச்சயம் பெருத்த உபயோகம் உள்ளதாக அமையும். அதை விட்டு விட்டு ஏதோ குக்கிராமத்தில் நடக்கும் திருவிழாவிற்குப் போவதா? கேட்டால் கூடச் சிரிப்பார்களே...

தேவானையிடம் சொல்லலாம் என டெலிபோனைத் தொடுமுன் அதுவே ஒலித்தது:

"சரியாக ஆறு மணிக்குப் புறப்பட வேண்டும். அப்பொழுதுதான் எட்டு மணிக்கு, நேரத்திற்குப் போய்ச் சேர முடியும். நான் வாசலிலேயே காத்துக் கொண்டிருப்பேன். கட்டாயம் வாருங்கள்! உம். என்ன!"

அவரால் மறுக்க முடியவில்லை. பாவம். எத்தனை நாட்களாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறாள்!

"உம். ஆகட்டும்!" என்றார்.

ஐந்து மணிக்குப் புறப்பட எழுந்த போது மறுபடி அழைப்பு.

அறுவை சிகிச்சை முடிந்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட பெரிய மனிதர் — தையல் போட்ட இடத்தில் லேசாக ரத்தக் கசிவு இருக்கிறதாம்.

அரசியல் செல்வாக்கு உள்ள மனிதர். போகாமல் இருக்க முடியாது. அவசர உதவிக்கு வேண்டிய மருந்துகள், உபகரணங்கள் அடங்கிய தன் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர்கள் பயந்தபடி ஒன்றும் இல்லை. அங்கிருந்து நேராகத் தன் வீட்டை அடைந்த போது மணி ஆறு பத்து.

சொன்னபடியே வாசலில் தேவானை. பூஜைக்கு வேண்டிய சாமான்கள் இரண்டு கூடைகளில் தயாராக இருந்தன.

"ஒரு நிமிஷம் தேவானை, மேலே போய் என் உடையை மாற்றிக் கொண்டு..."

"வேண்டாம். நான் எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன்.. அங்கே போய் மாற்றிக் கொள்ளலாம்."

"ப்ளீஸ். தேவானை.. உடம்பெல்லாம் கசகசவென்று..."

"காரில்தான் போகப் போகிறோம். ஒன்றும் தெரியாது. புறப்படுங்கள்"

"என்ன நீ... சின்ன விஷயத்திற்கெல்லாம் அடம்பிடித்துக் கொண்டு.."

"அடம் இல்லீங்க. அனுபவம். நீங்கள் மாடிக்குப் போவீங்க. என் போதாத காலம் எவனாவது டெலிபோனில் கூப்பிடுவான். அவ்வளவுதான். புறப்பட்டுப் போவீங்க...

அவள் கண்களில் நீர் கோப்பதைக்

கவனித்தார்.

''சரி... சரி. இப்படியே போவோம்'' எனக் காரில் ஏறி உட்கார்ந்தார் சரவணன்.

அந்தக் கிராமம் நகரிலிருந்து நூறு கிலோ மீட்டர் தள்ளி இருந்தது. புறப்படும் போதே மேகங்கள் நன்றாக இறங்கியிருந்தன. நகரின் எல்லையைத் தாண்டுமுன் மழை, 'சோ'வென்று கொட்டத் தொடங்கியது.

டிரைவர் காரை மிக மெதுவாகத்தான் ஓட்டினார். டாக்டர் சரவணன் இந்த விஷயத்தில் ரொம்பக் கண்டிப்பு. ஒரு தரம் அடிபட்டவராயிற்றே...

வழியில் ஒரு ரயில்வே கேட் மூடப்பட்டிருந்தது. மணி ஏழைத் தாண்டி விட்டது.

''இந்த கேட் எப்போ திறந்து நாம எப்ப போறது?'' என அலுத்துக் கொண்டார் சரவணன்.

''ரயில்வே லைனை ஒட்டி ஒரு சாலை போகுது பார். அதில் போனால் கொஞ்ச தூரத்தில் 'கேட்' இல்லாத 'கிராஸிங்' வரும்!'' என யோசனை சொன்னாள் தேவானை.

''அம்மா சொல்ற வழியிலே போ!'' என்றார் சரவணன்.

அந்த வழி இன்னும் மோசமாக இருந்தது. மேடும், பள்ளமும், குண்டும் குழியும், வழியை மறித்த நீர்ப் பிரவாகத்தில் வண்டியை மிக மிக மெதுவாகத்தான் ஓட்ட முடிந்தது.

ஒரு கிராமத்தைக் கடக்கும் போது கார் ஒரு பள்ளத்தில் இறங்கியது. டிரைவர் 'கியரை' மாற்றி மாற்றிப் போட்டு என்னவெல்லாமோ செய்தார். வண்டி நகரவில்லை. கொட்டும் மழையில் அவர் இறங்கி நனைந்ததுதான் மிச்சம். வண்டியின் பின் சக்கரங்கள் சேற்றில் புதைந்து போயிருந்தன.

சுற்றிலும் ஒரே கும்மிருட்டு. காற்றும் மழையும் தொடங்கியபோதே மின் தொடர்பு நின்று போயிருந்தது.

டிரைவர் ஊருக்குப் போய் உதவிக்கு மனிதர்களைக் கூப்பிட்டார். ''மழை நிற்கட்டும், பார்க்கலாம்!'' என்றார்கள். மணியும் இரவு ஒன்பதைத் தாண்டி விட்டது. முன்னேயும் போக முடியாமல், பின்னாலும் திரும்ப இயலாமல் என்ன ஒரு இக்கட்டு!

டிரைவர் யாரிடமோ போய், வந்திருப்பது யார் எனச் சொல்லி இரவு தங்க இடம் கேட்டார். இருப்பதற்குள் சற்றுப் பெரிதாகத் தெரிந்த வீட்டில் முன்னறையில் இடம் கொடுத்தார்கள். ஓட்டுக் கட்டடம். சிறிய காடி விளக்கு காற்றில் ஆடிய போது மேலே தெரிந்த நிழல்கள் பயங்கரமாக இருந்தன.

'ஏஸி' அறையில், மெத்தையில் படுத்தே உறக்கம் வராமல் தவிப்பவர் சரவணன். இங்கே?

பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. தேவானை விரட்டியதில் சாப்பிடாமல் புறப்பட்டு விட்டார். அவர் முகக் குறிப்பையறிந்த தேவானை படையலுக்கு வைத்திருந்த பழங்களைச் சாப்பிடக் கொடுத்தாள். மாவிளக்குப் போட எடுத்து வந்த மாவில் நெய்யைப் பிசைந்து கொடுத்தாள்.

அத்தனை வேதனையிலும் சரவணன் சிரித்தார். ''உன் பெயர் வள்ளி என இருந்திருந்தால் ரொம்பப் பொருத்தமாக இருந்திருக்கும் தேவானை. தினை மாவு போல் உருட்டி இந்தச் சரவணனுக்குத் தருகிறாயே!'' எனக் கேலி செய்தார்.

தேவானை பதில் ஏதும் சொல்லவில்லை. அவர் ரொம்பக் கடுப்பில் இருப்பார் எனத் தெரியும். இத்தனை தூரம் பொறுமையாக இருந்தது பெரிய காரியம்.

இரண்டு மணி இருக்கும். எல்லோரும் உரத்த குரலில் பேசும் சப்தம் கேட்டு இருவரும் விழித்துக் கொண்டார்கள். சரவணனுக்கு ஏதோ சொப்பனம்.. பயந்து உளறியபடி எழுந்தார்.

தேவானை எழுந்து போய் விசாரித்தாள். எதிர் வீட்டுப் பெண்ணிற்கு நிறை மாதம். திடீரென வலி எடுத்து விட்டது. அன்று காலையில் டாக்டரம்மா பார்த்து இன்னும் பதினைந்து நாட்கள் ஆகும் எனச் சொல்லியதால் அலட்சியமாக இருந்து விட்டார்கள். கிராமத்து நர்ஸ் கூட ஊரில் இல்லை. மழை வேறு இப்படிக் கொட்டுகிறது!

டாக்டர் சரவணன் தன் கண்களை மூடிக் கொண்டு தூங்க முயற்சி செய்தார். அந்தப் பெண் வலியால் அலறும் ஒலி அவரை அலைக்கழித்தது. எப்படி உறங்குவது?

ஒரு தீர்மானத்துடன் எழுந்தார். தேவானை மூலம் தான் பார்க்கலாமா என விசாரித்தார். அவர்களுக்குத் தெய்வமே நேரில் வந்தது போல் இருந்தது. சம்மதித்தார்கள்.

காரிலிருந்து 'டார்ச்' லைட் எடுத்து வந்து அதன் வெளிச்சத்தில் அந்தப் பெண்ணைப் பரிசோதித்தார். குழந்தை நிலைமை சரியாக

''நானும் என் மனைவியும் வெளி நாடுகளுக்குப் போவதானால் ஒரே விமானத்தில் பயணம் செய்வதில்லை, வெவ்வேறு விமானங்களில்தான் போவோம். விபத்து காரணமாக யாரேனும் ஒருவர் இறக்க நேரிட்டால் அடுத்தவர் ஆதரவில் எங்கள் குழந்தைகள் வளர முடியும், அல்லவா?''

— ஸ்வாகத் இதழில் பட்டோடி.

தகவல்: ராமு.



இல்லை. உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தாயையும் சேயையும் காப்பாற்ற முடியாது.

இந்த அறுவை சிகிச்சை பெரிய காரியம் இல்லை. ஆனால் வேண்டிய உபகரணங்கள்...? உதவிக்கு ஆள்?

சட்டென்று நினைவு வந்தது. காரில் அவர் எடுத்துப் போன பெட்டி. அது போதாது என்றாலும் ஒன்றும் இல்லாததற்கு எவ்வளவோ மேல்.

மடமடவென்று உத்தரவுகள் பிறப்பித்தார். இரண்டு பெஞ்சுகள் கொண்டு வரப்பட்டன. அந்தப் பெண்ணைக் கட்டிலில் படுக்க வைத்தார். பெட்டியில் இருந்த உபகரணங்களைக் கொதிக்கும் நீரில் போட்டு விட்டு சிகிச்சையை ஆரம்பித்தார். பெண்ணிற்கு மயக்க ஊசி போட்டார்.

ஒருபுறம் பெண்ணின் தாய் அரிகேன் விளக்கைத் தூக்கிப் பிடிக்க, தேவானை 'டார்ச்' லைட் அடித்துக் காட்ட, சரவணன் சிகிச்சையைத் தொடங்கினார். குனிந்து வேலை செய்ய வேண்டியிருந்ததால் இடுப்பு விட்டுப் போயிற்று. இவர் வழக்கமாகச் செய்யாத சிகிச்சையாதலால் நிதானிக்க வேண்டியிருந்தது.

சிகிச்சை முடிய முக்கால் மணி நேரம் பிடித்தது. முகத்தில் அரும்பிய வியர்வையைத் தேவானை ஒரு துண்டினால் அவ்வப்பொழுது ஒத்தி ஒத்தி எடுத்தாள். அழகான ஒரு ஆண் குழந்தையை வெளியே எடுத்து அது அழத் தொடங்கியதும்தான் அத்தனை பேரும் நிம்மதியாக மூச்சு விட்டார்கள். சிகிச்சை நடந்த இடத்தில் தற்காலிகமாகத் தையல் போட்டார். விடியும் வரை அவரும் தேவானையும் அந்தப் பெண் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

மறுநாள். விடிந்தும் விடியாத அந்த மங்கிய வேளையில் கிராமத்து ஆட்கள் எங்கிருந்தோ பலகைகள், கயிறுகளுடன் வந்து காரைப் பள்ளத்திலிருந்து வெளியே எடுத்தார்கள். நல்ல வேளையாக மழை துப்புறவாக விட்டிருந்தது.

அந்தப் பெண்ணை இரண்டு பேர் அலாக்காகத் தூக்கி காரின் பின் ஆசனத்தில் படுக்க வைத்தார்கள். குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு தேவானை ஒரு ஓரத்தில் ஒண்டிக் கொண்டாள். பெண்ணின் தகப்பனாரை உடன் அழைத்துக் கொண்டு சரவணன் புறப்பட்டார்.

கார் நேராக நர்ஸிங் ஹோம் போயிற்று. அங்கே அவளை உடனே அவசர சிகிச்சைக்கு உட்படுத்தினார்கள்.

பகல் பத்து மணிக்கு வீடு திரும்பிய சரவணன், அசதி காரணமாகச் சாப்பிட்டவுடன் உறங்கப் போய் விட்டார். தேவானைக்கு உறக்கம் பிடிக்கவில்லை. இதுவரை தன் கணவனைப் பார்க்காத ஒரு கோணத்தில் அவள் இன்று பார்த்தாள். முதல் நாள் இரவு அவர் கைகள் இயங்கிய வேகம் என்ன? சிகிச்சையை அத்தனை இடையூறுகள் இடையில் கையாண்ட லாகவம் என்ன? லட்சிய வேகம் விழிகளில் கொப்பளிக்க, எடுத்த காரியத்தை முடிக்க அவர் காட்டிய சிரத்தையை நினைவு கூர்ந்தாள். தாயுமானவனாக, உலகை ரட்சிக்க விசுவரூபம் எடுத்த பரம்பொருளாக அவர் தெரிந்தார்.

தாயே! இதைவிடப் பெரிய படையல் உனக்கு உண்டா? என் கணவர் செய்த இந்தச் சேவையை விடப் பெரிய தொண்டு உனக்கு உகந்ததாக ஆகுமா?

சரவணன் உறங்கி எழுந்தார். ''தேவானை, உனக்கு இந்த வருஷமும் ஏமாற்றம்...'' என்றார் பச்சாதாபத்துடன்.

''இல்லீங்க... ஆத்தாளுக்கு எந்தப் படையலும் தேவை இல்லீங்க. நேற்று உங்க பக்கத்திலே இருந்து கவனிச்சேன். இதே மாதிரி தினம் தினம் எத்தனை பேருக்கு...'' என வியந்தாள் தேவானை.

''இல்லை தேவானை. நேற்றுத்தான் நான் என்னைப் புரிந்து கொண்டேன். சாதாரணமா நான் யாரையும் வீட்டில் போய்ப் பார்ப்பதில்லை. நேற்றைக்கு என்று அந்தப் பெரிய மனிதரைப் பார்க்க எல்லா உபகரணங்களுடன் போனேன். நீ அவசரப்படுத்தினதால் அந்தப் பெட்டி காரில் தங்கி விட்டது. யாரோ சொல்லி வைத்தாற்போல் கார் அந்தக் கிராமத்தில் நின்றது. அந்தப் பிள்ளைக்கு நான் வைத்தியம் பார்க்க வேண்டும் என்று ஒரு நியதி இருந்திருக்கிறது. அந்தக் கட்டளையைப் பிறப்பித்த சக்தியைப் புரிந்து கொண்டேன். நான் ஒரு கருவிதான் என்கிற உணர்வு எனக்கு இப்பத்தான் ஏற்பட்டிருக்கு...'' என்றார் சரவணன் அமைதியாக.


• • •



உத்தரபிரதேச மந்திரிகள் 35 பேர் கடந்த ஆண்டு சுமார் ஐம்பதரை லட்ச ரூபாய் பயணப்படியாகப் பெற்றிருக்கிறார்கள். இது அவர்களுடைய சம்பளத்தைப் போல மூன்று மடங்கு!

— டைம்ஸ் ஆஃப் இந்தியா

— ராமு





அத்தியாயம் 48
"நீ என் மகன் அல்ல"

ஆதித்த கரிகாலரின் இறுதி ஊர்வலம் காவிரி நதிக்கரையோரமாகத் தஞ்சையை நோக்கிச் சென்ற போது, அந்த ஊர்வலத்தில் சோழ நாட்டு மக்கள் லட்சக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். வீரர்களைப் போற்றும் குணம் அந்நாளில் தமிழகத்தில் பெரிதும் பரவியிருந்தது. இடையில் சில காலம் சோழ குலம் மங்கியிருந்து, விஜயாலய சோழர் காலத்திலிருந்து மீண்டும் தலையெடுத்ததைக் கண்டோம் அல்லவா? நூறு ஆண்டுகளாக அந்தக் குலத்தில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் வீரப் புகழில் ஒருவரையொருவர் மிஞ்சிக் கொண்டு வந்தார்கள். விஜயாலயன் மகன் ஆதித்தவர்மன் பல்லவ குலத்தின் புகழை அழித்துத் தொண்டை நாட்டைக் கைப்பற்றினான். அவனுடைய மகன் பராந்தக சக்கரவர்த்தி மதுரையும் ஈழமும் கொண்டு தென்னாடு முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். பராந்தக சக்கரவர்த்தியின் புதல்வர்கள் நால்வரும் ஒருவரையொருவர் வீரத்தில் மிஞ்சினார்கள். அவர்களில் ஒருவன் பாண்டிய நாட்டுப் போரில் உயிர் துறந்தான். மூத்த மகனாகிய இராஜாதித்தனோ, சமுத்திரம் போல் பொங்கி வந்த இரட்டை மண்டலக் கன்னர தேவனின் பெரும் படையுடன் தக்கோலத்தில் போர் தொடுத்து, அம் மாபெரும் சைன்யத்தை முறியடித்த பிறகு, போர்க்களத்திலேயே வஞ்சனையினால் கொல்லப்பட்டு, 'யானை மேல் துஞ்சின தேவன்' ஆயினான். கண்டராதித்தர் சிவஞானச் செல்வராயினும் அவரும் வீரத்தில் குறைந்தவராக இல்லை. பின்னர், ஆற்றூர்த் துஞ்சிய அரிஞ்சயனைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. அரிஞ்சயனுடைய குமாரர் சுந்தர சோழர் காலத்தில், தக்கோலப் போருக்குப் பிறகு சிறிது மங்கியிருந்த சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் மீண்டும் மகோந்நதமடைந்தது.

இவ்வாறு வழி வழியாக வந்த வீர பரம்பரையில் பிறந்தவர்களில் ஆதித்த கரிகாலனுக்கு ஒப்பாருமில்லை, மிக்காருமில்லை என்று மக்களின் ஏகோபித்த வாக்கே எங்கும் கேட்கக் கூடியதாயிருந்தது. பன்னிரண்டாம் வயதில் சேலூர்ப் போர்க்களத்தில் அவன் புரிந்த வீரதீர சாகஸச் செயல்கள் அர்ச்சுனன் மகனான அபிமன்யுவின் புகழையும் மங்கச் செய்து விட்டதல்லவா?

ஆசிரியர் கல்கி

இத்தகைய வீராதி வீரன் சில வருட காலமாகத் தஞ்சைக்கு வராமல் காஞ்சியிலேயே தங்கியிருந்த காரணம் பற்றிப் பலவித வதந்திகள் உலாவி வந்தன. சிற்றரசர்கள் சூழ்ச்சி செய்து மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டும் நோக்கத்துடன் ஆதித்த கரிகாலனைத் தஞ்சைப் பக்கம் வராதபடி செய்து வருகிறார்கள் என்பது ஒரு வதந்தி. முன்னொரு காலத்தில் கரிகால் வளவன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று இமயமலையின் உச்சியில் புலிக்கொடியை நாட்டி விட்டு வந்தது போல், அதே பெயர் கொண்ட ஆதித்த கரிகாலனும் செய்ய விரும்பிச் சபதம் செய்திருக்கிறான் என்றும், அந்தச் சபதம் நிறைவேறாமல் அவன் தஞ்சைக்குத் திரும்ப விரும்பவில்லையென்றும், அதற்குப் பழுவேட்டரையர் முதலியவர்கள் குறுக்கே நின்று தடுத்து வருகிறார்கள் என்றும் இன்னொரு வதந்தி பரவியிருந்தது.

எனவே, திடீர் என்று ஒரு நாள் ஆதித்த கரிகாலன் இறந்து விட்டான் என்றும், சம்புவரையரின் மாளிகையில் வஞ்சனையினால் கொல்லப்பட்டான் என்றும் செய்தி பரவவே, சோழ நாட்டு மக்களின் உள்ளக் கிளர்ச்சி எப்படியிருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

அந்த வீர புருஷனுக்கு இறுதி மரியாதை செய்வதற்கு மக்கள் லட்சக்கணக்கிலே திரண்டு வந்து சேர்ந்ததிலும் வியப்பில்லை தானே?

ஊர்வலம் தஞ்சையை அணுகிய போது, ஜனக்கூட்டம் ஜனசமுத்திரமாகவே ஆகிவிட்டது. தஞ்சை நகர மக்களும், தஞ்சைக் கோட்டையைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த தென் திசைப்படை வீரர்களும் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து கொண்டார்கள். அவர்களையெல்லாம் கோட்டைக்குள் அநுமதித்தால் பல விபரீதங்கள் நேரிடலாம் என்று முதன் மந்திரி அநிருத்தர் எச்சரித்ததின் பேரில், துயரக் கடலில் மூழ்கியிருந்த சக்கரவர்த்தியும் அவருடைய குடும்பத்தாரும் கோட்டைக்கு வெளியிலேயே வந்து விட்டார்கள்.

சுந்தர சோழரைப் பார்த்ததும், அந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு பேரிரைச்சல் எழுந்தது. "சோழ நாட்டைச் சுந்தர சோழர் அரசு புரிந்த போது 'ஹா' என்ற சப்தமே கேட்டதில்லை" என்று சிலாசாஸனங்கள் சொல்லுகின்றன. ஆதித்த கரிகாலரின் மரணத்துக்கு முன்னால் குடிகொண்டிருந்த நிலைமை அச் சிலாசாஸனங்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கோ, "ஹா! ஹா!" "ஐயையோ!" என்ற சப்தங்கள் லட்சக்கணக்கான குரல்களில் எழுந்தன. அபிமன்யுவைப் பறிகொடுத்த அர்ச்சுனனுடைய நினைவு அநேகருக்கு வந்தது. ஆனால் அபிமன்யுவோ பகைவர் கூட்டத்துக்கு மத்தியில் தன்னந் தனியாக நின்று அஸகாய சூரத்தனங்கள் செய்து விட்டு உயிரை விட்டான்.

இங்கேயோ ஆதித்த கரிகாலன் மதுராந்தகனின் மண்ணாசையினாலும் சிற்றரசர்களின் அதிகார வெறியினாலும் சூழ்ச்சிக்கு ஆளாகிக் கொல்லப்பட்டான். மக்களின் மனத்தில் குடிகொண்டிருந்த இந்த எண்ணத்தை உறுதிப்படுத்தும் காரியங்களும் வெளியிலே நடந்தன.

ஆதித்த கரிகாலருடைய சடலம் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே எல்லாரும் வந்து பார்க்கும்படியாக வைக்கப்பட்டிருந்தது. அனைவரும் வந்து பார்த்துக் கண்ணீர் விட்டு விட்டுப் போனார்கள். ஆனால் மதுராந்தகன் மட்டும் வரவில்லை. பழுவேட்டரையர்களும் வரவில்லை.

பழுவேட்டரையர்கள் தங்கள் நண்பர்களைச் சைன்யங்களுடன் ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வதந்தி பரவவும் ஆரம்பித்திருந்தது.

எனவே, ஆதித்த கரிகாலருக்கு வீர மரணத்துக்குரிய முறையில் ஈமச் சடங்குகள் நடந்து, சக்கரவர்த்தியின் குடும்பத்தினர் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்த பிறகும் ஜனக் கூட்டம் விரைவாகக் கலையவில்லை.

"மதுராந்தகன் வீழ்க!" "பழுவேட்டரையர்கள் வீழ்க!" என்னும் கோஷங்கள் முதலில் இலேசாக எழுந்தன. நேரமாக, ஆக, இந்தக் கோஷங்கள் பலம் பெற்று வந்தன.

திடீரென்று ஜனக் கூட்டத்தில் ஒரு பகுதியினர் கோட்டைக் கதவுகளை இடித்து மோதித் திறந்து கொண்டு தஞ்சை நகருக்குள் பிரவேசித்தார்கள். முதலில் அவர்கள் பழுவேட்டரையர்களின் மாளிகைக்குச் சென்றார்கள். வெளியிலே நின்று "பழுவேட்டரையர்கள் வீழ்க!" என்று சப்தமிட்டார்கள்.

முதன் மந்திரி அநிருத்தரின் கட்டளையின் பேரில் வேளக்காரப் படை வீரர்கள் வந்து ஜனங்களைக் கலைந்து போகச் செய்ய நேர்ந்தது.

இதற்கிடையில், மதுராந்தகத் தேவன் அநிருத்தரின் வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்பதாக ஒரு வதந்தி பரவியது.

ஜனங்கள் அநிருத்தரின் வீட்டைப் போய்ச் சூழ்ந்து கொண்டார்கள்.

"எங்கே அந்தப் பேடி மதுராந்தகன்? வெளியே வரச் சொல்லுங்கள் மதுராந்தகனை!" என்று கத்தினார்கள்.

அச்சமயம் உண்மையாகவே மதுராந்தகன் அநிருத்தரின் வீட்டுக்குள்ளிருந்தான். வெளியிலே ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு விட்டு, அவன் நடுநடுங்கினான். அநிருததரைப் பார்த்து, "முதன் மந்திரி! என்னை எப்படியாவது கோட்டைக்கு வெளியே அனுப்பி விடுங்கள். ரகசியச் சுரங்க வழியாக அனுப்பி விடுங்கள். என்னை ஆதரிக்கும் நண்பர்களுடனே நான் போய்ச் சேர்ந்து கொள்கிறேன். இந்த உதவியைத் தாங்கள் செய்யும் பட்சத்தில் நான் சோழ சிம்மாசனத்தில் ஏறும் போது தங்களையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்ளுவேன்" என்று சொன்னான்.

"ஐயா! சிங்காதனம் ஏறுவதைப் பற்றி இப்போது ஏன் பேச வேண்டும்? இன்னும் சுந்தர சோழச் சக்கரவர்த்தி உயிருடன் இருக்கிறாரே" என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

"சுந்தர சோழர் தம் குமாரனுக்கு ஈமக் கடன் செய்து விட்டுத் திரும்பி வந்ததை நீங்கள் பார்க்கவில்லையா? அவர் முகம் எவ்வாறு பேயடித்தது போலிருந்தது என்பதைக் கவனிக்கவில்லையா? நான் இந்த மச்சு மேடையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அதிக காலம் இனி உயிரோடு இருக்க மாட்டார். அருள்மொழிவர்மனாவது நானாவது சிங்காதனம் ஏறி இந்த ராஜ்யத்தை ஆள வேண்டும். சுந்தர சோழர் எனக்குப் பட்டம் கட்டவே பிரியப்படுகிறார். நீங்களும் அன்னையும் எதற்காக அதற்குக் குறுக்கே நிற்க வேண்டும்?" என்றான் மதுராந்தகன்.

"இளவரசே! தங்கள் அன்னை குறுக்கே நிற்பதற்குக் காரணம் இல்லாமல் போகுமா? அதோ கேளுங்கள், இந்த வீட்டைச் சூழ்ந்திருக்கும் மக்களின் கூச்சலை. சுந்தர சோழர் இஷ்டப்பட்டால் மட்டும் போதுமா? சோழ நாட்டு மக்கள் இஷ்டப்பட வேண்டாமா?" என்று கூறி விட்டு, "ஆகா! இது என்ன?" என்று அநிருத்தர் வீதியில் எட்டிப் பார்த்தார்.

பழைய கூக்குரலுக்குப் பதிலாக இப்போது "அருள்மொழிவர்மர் வாழ்க!" "பொன்னியின் செல்வர் வாழ்க!" "ஈழங் கொண்ட வீராதி வீரர் வாழ்க!" என்ற கோஷங்கள் கிளம்பின.

கம்பீரமான குதிரை மேலேறி அருள்மொழிவர்மர் அங்கே வந்து கொண்டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்து அத்தனை ஜனங்களும் போனார்கள். சில நிமிஷ நேரத்துக்கெல்லாம் அநிருத்தர் வீட்டின் வெளிப்புறம் வெறுமையாகி விட்டது. அநிருத்தருக்கு முன்னாலிருந்து மதுராந்தகனும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் பொறாமைத் தீயினால் கோவைப் பழம் போலச் சிவந்தன. "ஆகா! இந்தப் பிள்ளையிடம் அப்படி என்னதான் வ சீ க ர ம் இருக்கிறதோ?" என்று தனக்குத்தானே சொல்லிப் பொருமிக் கொண்டான்.

அநிருத்தர், "இளவரசே! ஈழத்து ராணியைக் கொன்றவனைப் பின்தொடர்ந்து சின்னப் பழுவேட்டரையர் ஓடிய போது நீர் அந்தப் பாதாளச் சுரங்க வழியில் இருந்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"பொன்னியின் செல்வன் யானைப் பாகன் வேஷத்தில் அரண்மனைக்கு வந்த பிறகு எனக்கு மிக்க மனச்சோர்வு உண்டாயிற்று. அவனும் நானும் ஒரே சமயத்தில் இந்தக் கோட்டைக்குள்ளிருக்கப் பிரியப்படவில்லை. பழுவேட்டரையர் சுரங்க வழியை எனக்குக் காட்டிக் கொடுத்திருந்தார். அதன் வழியாகப் போய் விடலாமா என்று யோசித்துக் கொண்டு அரண்மனைத் தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவன் சுரங்கப் பாதை வழியாக வெளியே வருவதைப் பார்த்தேன். அவன் என்னை நெருங்கி, 'இளவரசே! தங்களைப் பார்க்கத்தான் வந்தேன். பெரிய பழுவேட்டரையரும், கந்தமாறனும் தங்களை உடனே அழைத்து வரும்படி என்னை அனுப்பினார்கள். தங்கள் சிம்மாதன உரிமையை ஆதரித்து நிற்கப் பெரிய சைன்யங்கள் தயாராயிருக்கின்றன' என்றான். அவனுடைய தோற்றம் எனக்குச் சிறிது சந்தேகத்தை உண்டாக்கிற்று.

'பெரிய சைன்யம் தயாராகியிருந்தால் நான் ஏன் வெளியே வர வேண்டும்? அவர்களே இங்கு வந்து கொடும்பாளூர்ப் படைகளைத் தோற்கடித்து விட்டு என்னைச் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்கட்டுமே!' என்றேன்.

அந்த மனிதன், 'இளவரசே! அது மட்டுமல்ல. தங்களுடைய பிறப்பைக் குறித்து ஒரு பயங்கரமான மர்மம் இருக்கிறது. அதை வேறு யாரும் உங்களுக்குச் சொல்லத் துணிய மாட்டார்கள். நான் சொல்வேன்' என்றான்.

'அப்படியானால் வா! உடனே போகலாம்' என்றேன் நான். அதற்கு அவன், 'முதன் மந்திரி அநிருத்தருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அதைச்

சொல்லி விட்டு வருகிறேன். நீங்கள் முதலில் போய்ச் சுரங்கப் பாதையில் ஒளிந்திருங்கள்' என்றான்.

அதன் பேரில் பொக்கிஷ நிலவறைக்குள் போய் நான் காத்திருந்தேன். முதன் மந்திரி! தங்களை அவன் வந்து பார்த்தானா? என் பிறப்பைக் குறித்த பயங்கரமான மர்மம் என்னவாக இருக்கக்கூடும்?" என்றான் மதுராந்தகன்.

"இளவரசே! தங்களுக்கு அதை வெளியிட்டுச் சொல்லும் உரிமை பெற்றவர் தங்கள் அன்னை செம்பியன்மாதேவி ஒருவர்தான். எனக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும் நான் அதைச் சொல்லக் கூடாது" என்றார் அநிருத்தர்.

இந்தச் சமயத்தில் அம்மாளிகையின் வாசலில் மறுபடியும் கலகலப்புச் சப்தம் கேட்டது. முதன் மந்திரி எட்டிப் பார்த்தார். "ஆகா! இதோ உங்கள் அன்னையே வந்து விட்டார்" என்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் செம்பியன் மாதேவி அநிருத்தரின் வீட்டுப் பெண்மணிகளைப் பார்த்துப் பேசி விட்டு மேல் மாடிக்கு வந்தார். அந்தத் தேவியின் முகத்தில் அப்போது சோகம் ததும்பிக் கொண்டிருந்தது. அநிருத்தர் எழுந்து உபசரித்துச் சுட்டிக் காட்டிய ஆசனத்தில் தேவி உட்கார்ந்தார். சிறிது நேரம் தரையைக் குனிந்து பார்த்தவண்ணமாக இருந்தார். அந்த மேல் மாடத்திலும் மாளிகைக்கு வெளியிலே வீதியிலும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. பின்னர் செம்பியன் மாதேவி மதுராந்தகனையும், அநிருத்தரையும் ஒருமுறை பார்த்து விட்டு, "ஐயா! என் கணவர் என் தலை மீது இந்தப் பாரத்தைச் சுமத்தி விட்டு மேற்றிசைக்கு எழுந்தருளி விட்டார். தவறு செய்தது என்னவோ நான்தான். ஆனால் அவர் இச்சமயம் இருந்திருந்தால் நான் இவ்வளவு துன்பப்பட நேர்ந்திராது" என்றாள்.

அப்போது மதுராந்தகன் கண்களில் கோபக் கனல் பறக்க, "நீ ஏன் இப்படி வேதனைப்படுகிறாய்? ஏன் அடிக்கடி என் தந்தையின் பெயரை எடுக்கிறாய்? தஞ்சாவூர்ச் சிம்மாதனத்தில் நான் ஏறப் போவதென்னமோ நிச்சயம். அதற்குத் தடையாக இருந்தவர்களில் ஒருவன் இறந்து போனான். அருள்மொழிவர்மனோ என்னை விட வயதில் சிறியவன். நான் உயிரோடு இருக்கும்போது அவனுக்கு ஒருநாளும் பட்டம் கட்ட மாட்டார்கள். நீ மட்டும் குறுக்கே நில்லாமல் கருணை செய்ய வேண்டும். அம்மா! பெற்ற பிள்ளைக்குத் துரோகம் செய்யும் அன்னையைப் பற்றி யாராவது கேள்விப்பட்டதுண்டா? சிவபக்த மணியாகிய நீ ஏன் எனக்குத் துரோகம் செய்யப் பார்க்கிறாய்?" என்றான்.

"என் குழந்தாய்! பெற்ற பிள்ளைக்குத் தாய் விரோதமாக இருப்பது பயங்கரமான துரோகம்தான். ஆனால் என் கணவர் எனக்கு அவ்விதம் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய கட்டளையை நிறைவேற்றுவது என் கடமை. சொல்லுகிறேன் கேள்! மண்ணாசை ரொம்பப் பொல்லாதது. ராஜ்யத்தின் மேல் ஆசை அதைவிடக் கொடியது. தலையிலே முடி சூடிக் கொண்டிருப்பவர்களைப் போல் இவ்வுலகத்தில் கவலைக்குள்ளாகிறவர்கள் வேறு யாருமில்லை. சிங்காதனத்தில் வீற்றிருப்பவர்களைப் போல் மன அமைதியின்றிச் சங்கடப்படுபவர்களும் யாரும் இல்லை. தலையிலே கிரீடம் வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் அல்லவா வீரபாண்டியன் உயிரை விட நேர்ந்தது? பூலோக ராஜ்யத்தைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு மேலானது சிவலோக சாம்ராஜ்யம். நாம் இந்த ஊரை விட்டே போய் விடுவோம் வா. க்ஷேத்திர தரிசனம் செய்து கொண்டு கைலையங்கிரி வரையில் போவோம். சாக்ஷாத் கைலாச நாதரின் கருணைக்குப் பாத்திரமாவோம்."

"ஆகா! கைலாச யாத்திரை போவதற்குத் தங்களுக்குத் தக்க பருவம்தான். எனக்கு இன்னும் பிராயம் ஆகவில்லை. இந்த உலகத்தின் சுக துக்கங்கள் எதையும் நான் இன்னும் அனுபவிக்கவில்லை. உடம்பெல்லாம் சாம்பலைப் பூசிக் கொண்டு 'சிவ சிவா' என்று பைத்தியக்காரனைப் போல் அலைந்து திரியும்படி என்னை நீ வளர்த்து விட்டாய். அந்தப் பரமசிவனுடைய பெருங்கருணையினாலேயே என்னிடம் இப்போது ராஜ்யம் நெருங்கி வந்திருக்கிறது. அதை ஏன் நான் கைவிட வேண்டும்?". என்று கேட்டான் மதுராந்தகன்.

"அப்பனே! உன்னை நெருங்கி வந்திருக்கும் ராஜ்யம் எத்தனையோ அபாயங்களுடன் சேர்ந்து வந்திருக்கிறது. நீ சிம்மாதனம் ஏறுவதற்கு ஒரு தடை நீங்கி விட்டது. ஆதித்த கரிகாலன் இறந்து விட்டான் என்று சொன்னாய். சற்று முன்னால் இந்த வீட்டைச் சுற்றி நின்று கொண்டிருந்த ஜனங்கள் கூச்சலிட்டது உன் காதில் விழவில்லையா? மதுராந்தகா! ஆதித்த கரிகாலன் இறந்ததற்கு நீயும் பழுவேட்டரையர்களுமே காரணம் என்று மக்கள் நினைக்கிறார்கள். உன்னை எப்படிச் சக்கரவர்த்தியாக அவர்கள் ஒப்புக் கொள்வார்கள்?"

"அம்மா! அதையெல்லாம் ஜனங்கள் வெகு சீக்கிரம் மறந்து விடுவார்கள். என்



னைச் சிங்காதனத்தில் ஏற்றி விட்டால் என்னையே சக்கரவர்த்தி என்று ஒப்புக் கொள்வார்கள். இன்னும் சொல்கிறேன் கேள். கரிகாலனுடைய மரணத்துக்கு யார் காரணம் தெரியுமா? அருள்மொழிவர்மரின் அருமைச் சிநேகிதன் வந்தியத்தேவன்தான். சம்புவரையர் வீட்டில் கரிகாலன் செத்துக் கிடந்த இடத்தில் வந்தியத்தேவன்தான் இருந்தானாம். சம்புவரையரையும், வந்தியத் தேவனையும் பாதாளச் சிறையில் போட்டிருக்கிறார்கள். தனக்குச் சிம்மாதனம் கிடைக்கும் பொருட்டுத் தமையனைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தவன் அருள்மொழிவர்மன். இது மட்டும் ஜனங்களுக்குத் தெரியட்டும். அப்புறம் பொன்னியின் செல்வரின் கதி என்ன ஆகிறதென்று பார்க்கலாம்.''

செம்பியன் மாதேவி தம் கண்களில் கனல் வீச, ''அட பாவி! கருணையே உருக் கொண்ட அருள்மொழியைப் பற்றி என்ன வார்த்தை சொல்கிறாய்? உன்னைப் போன்ற துராசை பிடித்தவனையே அவன் கோவிலில் வைத்துக் கும்பிடத் தயாராக இருக்கிறானே. அவனைப் பற்றி நீ மறுபடியும் இப்படிச் சொன்னால் நீ எரிவாய் நரகத்துக்குத்தான் போவாய். உனக்கு இம்மையிலும் மறுமையிலும் கதி மோட்சம் கிடையாது.''

இதைக் கேட்டதும் மதுராந்தகன் குதித்தெழுந்தான். ''அடி பேயே! உன் சொந்த மகனுக்குச் சாபம் கொடுக்கிறாய். என்னுடைய விரோதிக்கு ஆசி கூறுகிறாய். நீ என்னுடைய தாயாராக இருக்க முடியுமா? இல்லவே இல்லை'' என்று மதுராந்தகன் உள்ளம் நொந்து கொதித்துக் கூறினான்.

அப்போது செம்பியன் மாதேவி ''அப்பா! உனக்கு நான் இதை என்றைக்கும் சொல்ல வேண்டாமென்றிருந்தேன். உன்னுடைய பிடிவாதத்தினால் சொல்லும்படி செய்து விட்டாய். உண்மையிலேயே நான் உன்னைப் பெற்ற தாயார் அல்ல. நீ என் மகனும் அல்ல'' என்றாள்.

மதுராந்தகன் கம்மிய குரலில், ''ஆகா! நான் சந்தேகித்தது உண்மையாகப் போய் விட்டது. நீ என் தாயாரில்லா விட்டால் என் தாயார் யார்? நான் உன் மகன் இல்லையென்றால் பின் யாருடைய மகன்?'' என்றான்.

தேவி முதன் மந்திரி அநிருத்தரைப் பார்த்து, ''ஐயா! தாங்கள் சொல்லுங்கள். என்னுடைய அவமானத்தை நானே சொல்லும்படி தயவு செய்து வைக்க வேண்டாம்'' என்றாள்.

முதன் மந்திரி அநிருத்தர், மதுராந்தகனைப் பார்த்துச் சொன்னார்: ''இளவரசே! தங்களைச் சின்னஞ்சிறு குழவிப் பருவத்திலிருந்து எடுத்து வளர்த்த அன்னையை மனம் நோகும்படி செய்து விட்டீர்கள். எப்படியும் ஒரு நாள் தாங்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டியதுதான். இப்போதே அதைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றார்.

செம்பியன்மாதேவிக்குக் கல்யாணமான புதிதில் தன் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்றும் அக் குழந்தை சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக வேண்டுமென்றும் ஆசை இருந்தது. அவள் கர்ப்பந்தரித்து, குழந்தைப் பேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், அவளுடைய கணவர் வெளியூருக்குச் சென்றிருந்தார். அதே சமயத்தில் அதே காலத்தில் அக்காளும் தங்கையுமான இரண்டு ஊமை ஸ்திரீகள் அரண்மனைத் தோட்டத்தில் குடியிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி கர்ப்பந்தரித்துக் குழந்தைப் பேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். செம்பியன் மாதேவி க்ஷேத்திராடனம் சென்றிருந்த போது அனாதையாகக் காணப்பட்ட அந்தக் கர்ப்ப ஸ்திரீயை அழைத்து வந்திருந்தாள். அவளுடைய சகோதரி தஞ்சாவூருக்கருகில் இருக்கிறாளென்று கேள்விப்பட்டுக் கர்ப்ப ஸ்த்ரீக்கு உதவி செய்வதற்காக அவளை வரவழைத்துக் கொண்டிருந்தாள்.

செம்பியன் மாதேவிக்குக் குழந்தை பிறந்தது. முதன் மந்திரி அநிருத்தர் ராஜ்யத்துக்குப் பிள்ளை பிறந்திருப்பதன் பொருட்டு வாழ்த்துக் கூற வந்தார். அப்போது செம்பியன் மாதேவி கண்ணீர் விட்டு 'கோ'வென்று அழுதாள். பிறந்த குழந்தை உயிரில்லாமல் அசைவற்றுக் கட்டையைப் போல் கிடந்த படியால் அவ்வாறு அவள் துக்கப்பட்டாள்.

''ஐயா! என் கணவன் வந்து கேட்கும் போது நான் என்ன பதில் சொல்வேன்?'' என்று விம்மியழுதாள். அவளுடைய துயரத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் அநிருத்தர் ஒரு யோசனை கூறினார். தோட்டத்தில் குடியிருந்த ஊமைப் பெண்ணுக்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்திருப்பதை அவர் அறிந்திருந்தார். அந்த ஊமைப் பெண்ணிடம் சென்று குழந்தைகளை அங்கேயே விட்டு விட்டுப் போய் விட்டால், அவர்கள் அரண்மனையில் வளர்வார்களென்று ஜாடையினால் தெரிவித்தார். அந்த ஊமைப் பெண் வெறிபிடித்த பைத்தியக்காரி போல் இருந்தாள். முதலில் அவள் குழந்தைகளைக் கொடுக்க மறுத்தாள். சற்று நேரங் கழித்துக் குழந்தைகளை விட்டு விட்டு ஓடியே விட்டாள். உடனே அநிருத்தர் அவளுடைய தங்கையைக் கொண்டு ஆண் குழந்தையைச் செம்பியன்மாதேவியிடம் கொண்டு விடச் செய்தார். உயிரின்றிக் கட்டை போல இருந்த குழந்தையை ஒருவருக்கும் தெரியாமல் கொண்டு போய்ப் புதைத்து விடும்படி ஊமைத் தங்கையிடம் கொடுத்தனுப்பி விட்டார். மற்றொரு பெண் குழந்தையைத் தன்னுடைய வீட்டுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்த தன்னுடைய சீடன் ஆழ்வார்க்கடியானிடம் கொடுத்துப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார்.

இவ்விதம் குழந்தை மாற்றம் செய்தது செம்பியன் மாதேவியின் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. ஒருநாள் கண்டராதித்த தேவரிடம் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டாள். அந்த மகான், ''அதனால் பாதகமில்லை! பெண்ணே! யார் வயிற்றில் பிறந்த குழந்தையாக இருந்தால் என்ன? சிவபெருமான் அளித்த குழந்தைதான். உன் வயிற்றில் பிறந்த குழந்தையைப் போலவே வளர்த்து வா. ஆனால் வேறு குலத்தில் பிறந்த பிள்ளை சோழ சிங்காதனத்தில் ஏறக் கூடாது. அப்படிச் செய்வது குலத் துரோகமாகும். ஆகையால் சிறு பிராயத்திலிருந்தே இவனைச் சிவ பக்தனாகும்படி வளர்த்து வருவோம். 'சோழ சாம்ராஜ்யம் வேண்டாம். சிவபக்தி சாம்ராஜ்யமே போதும்!' என்று இவனே சொல்லும்படி வளர்ப்போம். ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இவனைத் தஞ்சாவூர் சிங்காதனத்தில் ஏற்றி வைப்பதற்கு மட்டும் நாம் உடந்தையாக இருக்கக் கூடாது. அந்தச் சந்தர்ப்பம் வரும் போது நான் உயிரோடு இல்லா விட்டாலும் நீ உறுதியுடனிருந்து சோழர் குலத்தைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''**ம**துராந்தகா! நீ கண்டராதித்த தேவருடைய புதல்வனுமல்ல. செம்பியன் மாதேவி வயிற்றில் பிறந்த பிள்ளையுமல்ல. ஊர் சுற்றித் திரிந்த அனாதை ஊமைப் பெண்ணின் மகன். உன்னை இந்தத் தேவி தம் சொந்தக் குழந்தையை விட நூறு மடங்கு அதிகமாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார். இப்போது அவருடைய கருத்துக்கு மாறாக நடக்காதே. தேவி சொல்வதைக் கேள். அதனால் உனக்கு நன்மையே விளையும்'' என்றார், அநிருத்தர்.

(தொடரும்)

> **புத்திசாலிக்கு வாதத்தில் எப்படி வெல்வது என்று தெரியும்; கனவானுக்கு அதை எப்படித் தவிர்ப்பது என்று தெரியும்!**
>
> — ரோமர்
>
> — ராமுசாமி.

‘அந்த அவஸ்தை கலைஞனு





பன்னிரண்டாயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆன இந்த நவீன ஓவியம் சமீபத்தில் சென்னை, சாக்ஷி கலை அரங்கில் ஒரு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. ஓவியத்தை வரைந்தவர்: தோட்டா தரணி! ஆமாம், 'நாயகன்' புகழ் ஆர்ட் டைரக்டர் தோட்டா தரணிதான்!

இவரது ஒரு முகம், நல்ல ஓவியக் கலைஞனை அடையாளம் காட்டுகிறது. மற்றொரு முகம், வர்த்தக ரீதியான திரைப்பட உலகில் புகுந்து வெற்றி பெற்ற கலைஞனை இனம் காட்டுகிறது.

தயாரிப்பில் இருக்கும் 'அஞ்சலி' படத்துக்கான ஒரு செட் அமைப்பதில் மிகவும் பிஸியாக இருந்தார் தரணி. வீனஸ்

க்குத்தான் புரியும்...”



• நாயகன் படத்தில் ஒரு 'ஸெட்'

ஸ்டூடியோவிற்குள் அவர் போட்டிருந்த ஸெட் ஒரு 'ஃபிளாட்' போல் அமைந்திருந்தது — தத்ரூபமாக.

''ஏம்பா... காலிங்பெல் வைச்சாச்சா?''— என்று கேட்டுக் கொண்டிருந்தார் தரணி. அவர் வெற்றியின் ரகசியம் புரிந்தது. சின்னச் சின்ன விஷயங்களில் கூட அக்கறை காட்டுகிறார்.

முன்னாட்களில் எல்லாப் படங்களுக்கும் 'செட்' போடுவார்கள். ஆனால் அதில் செயற்கைத்தனம் தெரியும். இடையில் சில வருடங்கள் சினிமாக்காரர்கள், நிஜ வீடு, நிஜகிராமம் என்று காமெராவைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றினார்கள். இப்போது மறுபடியும் தரணி போன்றவர்களின் கைத்திறமை+கலைத் திறமையினால் கிராமங்களும், மார்க்கெட்டுகளும், ரயில்வே ஸ்டேஷன்களும் ஸ்டுடியோவிற்குள்ளேயே உருவாக, ஏகப்பட்ட ஏழைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வாழ்வு மலர்ந்திருக்கிறது.

“என்னோட வெற்றி என்று நான் நினைப்பதெல்லாம், படத்தைப் பார்த்துவிட்டு 'எந்த வீட்டில் இதை எடுத்தார்கள்?' என்று ரசிகர்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்ளும் கேள்வியைத்தான்... அதுதான் என் உழைப்புக்கான பலன். பார்ப்பவர் மனத்தில் செட் போட்டிருக்கிறார்கள் என்ற எண்ணமே தோன்றக் கூடாது.”

நாற்பதை எட்டி விட்டத் தரணியின் தகப்பனார் தோட்டா, மிகச் சிறந்த ஆர்ட் டைரக்டராக விளங்கியவர். அமரதீபம், இதயக்கமலம் போன்ற பல அந்தக் காலப் படங்களுக்கு ஆர்ட் டைரக்டர். சந்திரலேகா படத்திற்குப் புகழ்பெற்ற ஆர்ட் டைரக்டர் சேகருடன் சேர்ந்து உழைத்தவர்.

''என்னுடைய பதினான்காவது வயதிலேயே செட்டுகளோடு எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. இரவெல்லாம் சின்னச் சின்ன பிளாஸ்டிக் பூக்களைக் கொண்டு செட்டுகளை அலங்கரிப்பதில் ஆரம்பித்தது. என் பணி'' என்று நினைவு கூர்ந்தார் தரணி.

நாயகன் பட ஆர்ட் டைரக்ஷனுக்கு இந்திய அரசின் உயர் பரிசான தங்கத் தாமரை கிடைத்தது.

தரணியுடைய வெற்றியைப் பார்த்துவிட்டு, ஜோல்னா பையும் தாடியுமாக கம்பெனி கம்பெனியாக அலைகிறார்களாம் ஓவியப் பள்ளியில் படித்த மாணவர்கள்.

''நான் ஏதோ ஓவியப் பள்ளியில் படித்துவிட்டு உடனே சினிமாவில் வெற்றியை ருசிக்கத் துவங்கினேன் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு. எனக்குப் பின்னால் அனுபவம் இருக்கிறது. வாழ்க்கையில் அடிபட்ட ரணங்கள் இருக்கின்றன. நானும் ஓவியப் பள்ளியில் படித்தவன்தான். படிப்பெல்லாம் ஒரு அடிப்படையாக இருக்கலாமே தவிர அனுபவத்துக்கு முன் ஈடுகொடுக்க முடியாது.'' என்று கூறும் தரணி ஒரு சமயத்தில் ஒரு படத்துக்கு மேல் ஒப்புக் கொள்வதில்லை. ''திறமை நீர்த்துப் போய் விடும்'' என்கிறார்.

அவரது மற்றொரு முகத்தை நினைவுபடுத்தினோம்.

''சினிமாவில், என் திறமையெல்லாம் பயன்படுத்தி ஒரு செட் அமைப்பதில் ஏற்படும் திருப்தியை விட ஓர் ஓவியத்தைப் பூர்த்தி செய்யும் போது எனக்குள் ஏற்படும் திருப்தியும், சந்தோஷமும் கொஞ்சம் அதிகம்தான். அடிக்கடி பிரஷ் பிடிக்க என் கைகள் ஏங்குகின்றன'' என்றார் தரணி.

என்னதான் திரைப் படத்தில் பிஸியாக இருந்தாலும் வருடத்துக்கொருமுறை தன் ஓவியக் கண்காட்சியை இவர் நடத்தத் தவறுவதில்லை. சென்னை, பம்பாய், பெங்களூர் என்று எங்காவது ஓர் இடத்தில் அது நடக்கும். இதுவரை இருபத்தேழு கண்காட்சிகளை நடத்தி விட்டார் தரணி.

சாக்ஷி கண்காட்சியில் பன்னிரண்டாயிரம் ரூபாய்க்கு விற்ற படத்தைப் பற்றி, ''என்ன...? விலை ரொம்பவும் அதிகமாக இருக்கிறதே!'' என்ற சங்கடமான கேள்வியைக் கேட்டோம்.

''அந்த பெயிண்டிங் வெறும் கைவேலை மட்டுமல்ல. அதற்கான 'கருத்து' 1971ல் நான் ராஜஸ்தானில் இருந்தபோதே தோன்றி விட்டது. அந்தக் கருத்தை என் மனத்தில் அசை போட்டுப் போட்டு... அந்த அவஸ்தை, சம்பந்தப்பட்ட கலைஞனுக்குத்தான் புரியும். இத்தனை வருடங்கள் அதைத் தேக்கி வைத்து, இந்த வருடம்தான் இரண்டு நாட்கள் தொடர்ந்து பாடுபட்டு அப்படத்தை வரைந்து முடித்தேன். இந்த அவஸ்தைக்கும் அதன்பின் ஏற்பட்ட மனநிறைவுக்கும் விலை நிர்ணயிக்க நேர்வதைப் போன்ற துர்ப்பாக்யம் வேறு ஏதுமில்லை'' என்றார் தோட்டா தரணி.


சந்திப்பு: **ப்ரியன்**

வண்ணப்படங்கள்: **கண்ணன்**

ஸ்டில்: **முரளி சுரேஷ்**

வீணாகிப் போன வயசு; கல்லாகிப் போன மனசு!

அப்போது அவனுக்கு முப்பத்தி மூன்று வயசு! எதையாவது முறித்துப் போட வேண்டும் என்று அலை பாய்கின்ற 'காளை' வயசு! ஆனால் அவன் அப்படியொன்றும் வித்தியாசமாய்ச் செய்து விடவில்லை. சேத்துப்பட்டு பஸ் பாலத்திற்குக் கீழே ஒரு நிழல் பிரதேசத்தில் சகவிடலைகளுடன் சதா 'ஆடுபுலி' ஆட்டம் ஆடுவதிலே உயிராய் இருந்தான். வீடு பற்றிய பிரக்ஞையே சுத்தமாய் அற்றுப் போயிற்று! காய் நகர்த்துவதிலே காலம் கரைந்து கொண்டிருந்தது. அவனுடைய முழுப்





இது கதையல்ல, நிஜம்! முன்னந் தலைமயிர் நரைத்து, கண்களில் குழி விழுந்து... அடர்த்தியாய் வளர்ந்த தாடியும்... பீடி புகைத்துக் கருத்துத் தடித்த உதடுகளும், காவியேறிய பற்களுமாய்... பஸ் நிலையங்களிலும், இரயில்வே ஸ்டேஷனிலும் 'இவர்களிடம் ஜாக்கிரதை' என்ற சுவரொட்டி நோட்டீஸில் விழி உருட்டிப் பார்க்கிற முப்பத்தெட்டு வயசு உருவத்தின் நிஜம்!

பொழுதையும் அந்த மரத்து நிழலே தின்று தீர்த்துக் கொண்டிருந்தது.

"ஏலே! இப்படி ராவடி பண்றே! வூட்டுல நைனாவுக்கு முடியலை, பாவம் மனுஷன் எத்தனை நாளைக்குத்தான் சைக்கிள் 'ரிக்ஷா' இழுக்கும்? சும்மாவே ஊரைச் சுத்தி வர்றதுக்கு ரிக்ஷாவுக்காவது போனா துட்டு வருமில்ல? ரெண்டு நாளா வூட்டுல அடுப்பு மூட்டலடா பாவி! நீ கௌப்பு கடையிலே தின்னுட்டுத் திரியுற! உங்க நைனாவைப் பாரு... நோய்ல உசுரு போகக் கெடக்குது!"

— அம்மா இதுபோல் எத்தனையோ முறை வீதியில் நின்று கொண்டு கூச்சலிட்டிருக்கின்றாள்.. நாளை 'ஆடுபுலி' ஆட்டம் விளையாட எதை அடமானம் வைக்கலாம் என்று தேடினான். அந்தக் குடிசையில் இரண்டு மூன்று அலுமினியப்பாத்திரங்கள் தான் இரைந்து கிடந்தன. மெல்ல அவன் பார்வை வாசலுக்குத் திரும்பியது. காற்று இறங்கி, தூசி படிந்து, நைனாவின் ரிக்ஷாவும் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தது.

இந்த ரிக்ஷா நைனாவின் விதை! நிலம் பிடித்துக் குடிசை போட்டு... பொண்டாட்டி தேடி... பாத்திரங்கள் வாங்கிப் போட்டு, இந்தப் பூமியில் சுயமாய் வேரூன்ற மூலமாய் இருந்த விதை! 'இதை விற்றால் நைனா முறிந்து போகுமோ? லேசாய் வண்டியை அசைத்தாலே அலறுகின்ற நைனா வேரோடு பிடுங்கி விட்டால் தாங்குமா?'

அதற்கு மேல் சிந்திக்க விடாமல் ஆடுபுலி ஆட்டம் அழைத்தது. கண்களை மூடிக் கொண்டு இருநூறு என்று அடிமட்ட விலைக்கு ரிக்ஷாவை விற்றுப் பணமாக்கிக் கொண்டு, மர நிழல் தேடிப் போனான். மறுபடியும் மறுபடியும் விளையாடித் தோற்றுப் போனான். மனசு அயர்ச்சி அடைய, 'ஊறல்' விற்கின்ற இடம் தேடிப் போனான்.

அன்றிரவு சப்தமில்லாது, நைனா மூச்சு விடுதலை முடித்துக் கொண்டது! நைனாவை அடக்கம் செய்த வகையில முன்னூறு ரூபாய் கடனாயிற்று! மூன்று நாட்கள் 'ஆடுபுலி' ஆட்டத்தில் இருநூறு ரூபாய் கடன்.. வீட்டில் அம்மாவின் நச்சரிப்பு என்று தொல்லைகள் ஏறுவரிசையில் ஏறிக் கொண்டே போயின! இந்த நேரத்தில்தான் எதிர்பாராதவிதமாய், அவனுக்குக் கபாலி அறிமுகமானான்.

கபாலி வித்தைக்காரன். மேல் நோகாமல் பணம் சேர்க்கின்ற வித்தைக்காரன். அவனுக்கும் அந்த வித்தையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாக வெறி கிளம்பிற்று. கபாலியைச் சிநேகம் பிடித்துக் கொண்டான். கபாலி அந்த வித்தையை இரண்டே மாதத்தில் அவனுக்குக் கற்றுக் கொடுத்து விட்டான். அந்த வித்தை வேறு ஒன்றுமல்ல! பிக்பாக்கெட் அடிப்பதுதான்! ஆடியாடி உழைத்து அயர்ச்சியாய் வருகின்றவனின் மடியை அலுங்காமல் அறுத்துக் கொண்டு ஓடுகின்ற குரூரம்தான்!

இரண்டாண்டுகளுக்குள் கை தேர்ந்தவனாகிப் போனான் அவன். பஸ் டெப்போக்களிலும் ரயில்வே ஸ்டேஷனிலும் "இவர்களிடம் ஜாக்கிரதை" என்ற வரிசையில் அவன் புகைப்படமும் வந்தது. இதுதான் 'சின்னா' என்று செல்லமாக அழைக்கும் சின்னசாமியின் முன்கதைச் சுருக்கம். அந்தச் சின்னாவை ஒரு போலீஸ் அதிகாரியின் உதவியுடன் ஒரு காவல் நிலையத்தில் சந்தித்தோம்.

"இதுவரை உங்க கதையைச் சொன்னீங்க. இனி உங்க தொழில் பற்றிச் சொல்ல முடியுமா? அதாவது உங்க கைவரிசையை எப்போ எப்படிக் காட்டுறீங்கன்னு...?"

சின்னா லேசாகத் தாடியைச் சொறிந்து கொண்டே போலீஸ் அதிகாரியைப் பார்த்தான். அவர் மெல்ல எழுந்து நடந்து வெளியே போக, தொடர்ந்தான்.

"ஒண்டியா ஒருத்தனா பிளேடு போடுறது கஷ்டமுங்க. ஒரு குரூப்பாத்தான் செய்ய முடியும். அப்படித்தான் செய்துக்கிட்டும் வர்றோம். ஒரு பஸ்ல ரெண்டு மூணு பேர் ஏறுவோம். முதல்ல கண்டக்டர் பக்கத்துல போய் நின்னுடுவோம். பர்ஸ் எடுத்து டிக்கெட் வாங்கும்போதே எது நல்ல கிராக்கினு நோட் பண்ணிடுவோம்! அப்புறம் அந்த ஆளுக்கு முன்னாடி எங்க ஆள் ஒருத்தன் போய் நிற்பான் பின்னால ஒருத்தன் வந்து நின்னுடுவான். சைடுல ஒருத்தன் ஓரங்கட்டி நின்னுட்டே இருந்து வேலையை முடிச்சிடுவோம்."

"சரி பஸ்ல யாராவது பார்த்துட்டா என்ன பண்ணுவீங்க?"

"அதான் சொன்னேனே முன்னாடியும் பின்னாடியும் எங்க ஆள்தானே நிக்கிறான்.



மகளிர் சிறப்பிதழ்

பெருமதிப்பிற்குரிய பெண்மணி
— வாசகர் கடிதங்கள்



பம்பாயில் ஒரு புதுமைப் பெண்
— ஷபானா ஆஸ்மி சிறப்புப் பேட்டி

இன்றையப் பெண்கள்
— இளைஞர்கள் பார்வையில்

வழக்கு



— வாஸந்தி எழுதும் குறுநாவல்

அதிக பக்கங்கள்

அதனால் பிரச்னை ஒண்ணும் இல்லை! இதுல பாரு சார் ஒரு ஆச்சரியம்...! வேத்து மனுஷன் பார்த்தாலும் மூச்சு விடவே மாட்டான். நமக்கு எதுக்குடா வம்புனு ஜன்னலுக்கு வெளியே முகத்தைத் திருப்பிக்குவான். இப்படி எத்தனையோ பார்த்திருக்கேன். வாட்ட சாட்டமா பெரிய உடம்புக்காரனா இருப்பான்... ஆனால், எங்க பிச்சுவாவை எடுத்து நீட்டினா பயம் புடிச்சுக்கும். சத்தியமாச் சொல்றேன் சார் — பிச்சுவாவை எடுத்துக் காட்ட எங்ககிட்டே பெரும்பாலும் 'தில்லு' கிடையாது. அப்படியே பயம் ஆட்டும். ஆனால் ஜனங்க நாங்க வெறுமனே முறைச்சுப் பார்த்தாலே அடங்கிப் போறாங்களே! அதான் எங்களுக்குத் தைரியம் இருக்குது. அதுவும் படிச்சுட்டு மசெண்டா இருக்கிற ஆள் கண்ணெதிரே நடந்தாலும் கம்முனு வேறு பக்கம் திரும்பிடுவான். கிராமத்து ஜனம்னா பட்டுனு கையைப் பிடிச்சுடும். அதனால தான் மாம்பலம், மைலாப்பூர், அண்ணா நகர், கே. கே. நகர்னு எங்க ஆளுங்க தேடிப் போறானுங்க..

''சரி சின்னா நீங்க கைவரிசையைக் காட்டுவதற்கு யார்யாரெல்லாம் உதவியா இருக்காங்க..?''

''இன்னா சாரே நம்பள வம்புல மாட்டி விட வழி பண்றயே!'' (சின்னா யோசிப்பது போல் சிறிது நேரம் தாடியைச் சொறிகின்றான்) ''எல்லாரும் போலீஸ்தான் உடந்தைன்னு பேசறாங்க அது தப்பு சார். பஸ் கண்டக்டர், டிக்கெட் கொடுக்கும்போதே பத்துப் பைசா சில்லறை இருக்கா? இருபது பைசா இருக்கான்னு கேட்பார். அந்த அவசரத்துல ஜனங்க ஜோபில இருக்கற பணமெல்லாம் வெளியிலே எடுக்கும். அப்ப நோட் பண்ணிடுவோம். அடுத்து 'முன்னாடி போ.. முன்னாடி நவந்து போய்யா..'ன்னு கூவுரது எங்களுக்குச் சௌகரியம் பண்ணிக் கொடுக்கத்தான். தோள்ல துண்டு போட்டுக்கிட்டுப் போவோம். அடுத்தவன் தோளோடு தோளா உரசிட்டு நிப்போம் அப்படியே வெளியே தெரியாம அவன் பையில பிளேடு போட்டிருவோம். எப்படியாவது ஜனங்க கவனத்தைத் திருப்ப, பஸ்ல ஏதாவது கலாட்டா செய்வோம். எங்க ஆளுங்களே பாவலாவுக்குச் சண்டை போடுவானுங்க.ஜனங்க அதை வேடிக்கை பார்க்கும். அப்ப வேலையைக் காட்டுவோம். சில விடலைப் பசங்க பொண்ணுங்களை உத்துப் பாத்துட்டு வருவாங்க. அப்ப எங்க வேலை சுலபமாய் முடிஞ்சுடும். சில சமயம் எங்க குழு பொம்பளைங்களையே கூட கூப்பிட்டு வருவோம். அவங்க ஒரு 'தினுசா' எவனையாவது பார்ப்பாங்க. அவனும் கிறங்கிடுவான். அப்ப அவன் மேலே கை வைச்சிடுவோம். இப்படித்தான்னு இல்ல சார்... தோது எப்படி அமையுதோ அதுக்கு ஏத்தமாதிரி காரியத்தை முடிச்சிடுவோம்.

''எந்த நேரத்துல மாட்டிக்குவீங்க..?''

''எங்க கோஷ்டில கத்துக் குட்டிங்கதான் மாட்டுவானுவ! மற்றபடி மாசக் கடைசில மாட்டுவோம். அதெல்லாம் ஒரு செட்டப் தான். அப்படியே திடீர்னு மாட்டினாலும் கோர்ட்டுக்குக் கொண்டு போவாங்க. அங்க எங்களை நம்பியே சில வக்கீலுங்க இருக் காங்க. உடனே வெளியில எடுத்துடுவாங்க. 'பிக்பாக்கெட்' காரன்னு தெரிஞ்ச உடனே வக்கீல் யாராவது ஆஜராகி வெளியில எடுத்திடுவாங்க. பிற்பாடு காசு கிடைத்த உடனே கொண்டு போய்க் கொடுத்திடு வோம். எங்களுக்குனு எல்லா கோர்ட்டுல யும் வக்கீலுங்க இருக்காங்க. அவங்களை நம்பி நாங்களும் எங்களை நம்பி அவங் களுமா பிழைப்பு ஓடுது!''

பெண்களிடம் பிக்பாக்கெட் அடிப்ப தற்கென்றே இவர்கள் ஒரு வழியைக் கையாளுகின்றார்களாம். ஒரு பெண் அழுக் காய் ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு நாகரிகமாய் இருக்கும் பெண்களின் பக்கத் தில் போய் உட்கார்ந்து விட வேண்டியது தான். அந்தப் பெண்ணின் முழுக் கவன மும் அழுக்குப் பெண்ணின் உடல் தன் மேல் பட்டு விடாமல் இருக்க வேண்டுமே என்று இருக்கும். ஒதுங்கி ஒதுங்கியே நகரும் போது நோகாமல் ஹேண்ட்பேக்கில் கை வைத்துக் கச்சிதமாய்க் காரியத்தை முடித்து விட வேண்டியதுதான்!

'**சி**ன்னா'வைப் பொறுத்தவரை எத்தனையோ முறை தொழிலை விட முயன்றும் முடியவில்லை. தொழில் செய்யா விட்டால் போதை வஸ்துக்களை மறக்க முயல்வது மாதிரி சித்திரவதை பண்ணுகின் றதாம். எத்தனையோ முறை தன்னால் பிறருக்கு ஏற்பட்ட துயரங்களைப் பார்த்துக் கசிந்திருக்கின்றான்... ஆனால் மறுநிமிடமே மனசு கல்லாகிப் போய் விடுகின்றது. போலீஸ் அடித்து, கடைவாயில் ரத்தம் கசிய நடு ரோட்டில் இழுத்து வந்திருக்கின்றது. வெளியே வந்த ஒரு மணி நேரத்தில் அந்த அவமானம் ஆறி விடுகின்றது. மற்ற மனிதர் கள் மாதிரி 'வெள்ளை' உடுத்தி, வீதியில் கைவீசி நடக்க வேண்டும் என்ற ஆவல் எல்லாம் அடங்கி இப்படி அழுக்காய் அலை வதே சுகமாய்ப் படுகின்றது. ஆடை முழுவதுவும் அகற்றி போலீஸ் லத்தியால் மானாவாரியாக விளாசும் போது ரணம் தாங்காமல் ''இனிமேல் செய்ய மாட்டேன். இனிமேல் செய்ய மாட்டேன்...'' என்ற கூச்சல் பிறக்கின்றது. கோர்ட்டுக்குப் போன நிமிடம் வெளியே வந்து விட முடி கின்றது. வந்ததும் வலி அடங்க, நாலு டம்ளர் 'ஊரல்' அடித்தவுடன் சகலமும் சரியாகி விடுகின்றது. விடிந்ததும் ஏதாவது ஒரு ''பல்லவனில் தொற்றிக் கொள்ளத் தான் தோன்றுகிறது'' என்று கூறுகின்றான் சின்னா என்ற சின்னசாமி!

சந்திப்பு: **சரஸ்வதி**



வல்லமை தாராயோ?

தான் கேட்டது சரியான வார்த்தைகள் தானா என்றே அரவிந்திற்குப் புரியவில்லை. வந்தனா கொடுத்த கடிதத்தில், சொந்தக் காரணங்களுக்காக ராஜினாமா செய்வதாக முறையாக ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டிருந்தது.

''வந்தனா, என்னங்க இது?''

''அதான் சொன்னேனே, என் ராஜினாமா லெட்டர்'' என்றாள் அமைதியாக.

''அது தெரியுது. ஏன்?''

''சொந்தக் காரணங்கள்னு குறிப்பிட்டிருக்கேனே...''

''அதான் என்ன?''

''மன்னிக்கணும் சார். அதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லைன்னு நினைக்கிறேன்.''

''வந்தனா, ஏன் இப்படிப் பேசறீங்க? நான் நேத்து எதுவுமே தப்பாப் பேசிடலையே. வரம்பு மீறி எதையும் சொல்லிடலையே. என் விருப்பத்தைச் சொன்னேன். யோசிச்சு உங்களை முடிவெடுக்கச் சொன்னேன்.''

''இதான் என் முடிவு.''

''புரியலையே. என்ன அர்த்தம் இதுக்கு?''

''உங்க யோசனையை நான் ஏற்கலைன்னு அர்த்தம். உங்க நோக்கப்படி எல்லாம் விளையாடறதுக்கு நான் பொம்மை இல்லைன்னு அர்த்தம்.''

''சத்தியமா நீங்க பேசறது எனக்குப் புரியலை.''

''உங்க நடிப்பைக்கூடத்தான் நான் புரிஞ்சுக்காம இருந்துட்டேன்.''

''நடிப்பா, எது?''

''என் குரலைப் புகழ்ந்தது, விளம்பரத்துக்குப் பயன்படுத்தினது, வேலை போட்டுத் தந்தது. மொபெட் வாங்கிக்கச் சொன்னது.. இது எல்லாம்தான்.''

''என்னங்க, வந்தனா இப்படியெல்லாம் பேசறீங்க? நான் உங்க மேல உள்ள உண்மையான பிரியத்தாலதான்....''

''ஸ்டாப் ப்ளீஸ். சார், இதைப் பத்தி விரிவா வாதம் செய்ய நான் விரும்பலை. நீங்க செஞ்ச உதவிகளுக்கெல்லாம் நன்றி. நான் வர்றேன்.''

''வந்தனா, நான் சொல்றதைக் கேளுங்க. நிதானமாப் பேசி முடிவெடுக்கலாம். ஹலோ!'' அரவிந்த் சொல்லிக் கொண்டேயிருக்க, வந்தனா வேகமாக நடந்து வெளியேறினாள்.

தொப்பென்று சேரில் விழுந்தான் அரவிந்த். தன்னைக் கசக்கி எறியப்பட்ட ஒரு காகிதமாக உணர்ந்தான்; கவண் கல்லில் தாக்கப்பட்டு தரையில் விழுந்த புறாவாக, மிதித்து நசுக்கப்பட்ட சிகரெட் துண்டாக...

ஏன் இவ்வளவு பெரிய தாக்குதல்? எதற்காக இப்படி திராவகத்தில் நனைத்த வார்த்தைகள்? தெளிவாகத்தானே சொன்னேன். முறையாக, பண்போடுதானே சொன்னேன்? சம்மதித்தாக வேண்டும் என்று கட்டளையாகச் சொன்னேனா, மிரட்டினேனா, எதுவும் இல்லையே! ஒரு விண்ணப்பமாக, ஒரு வேண்டுகோளாகத்தானே, அவள் முன் வைத்தேன். எத்தனை நாட்கள் யோசித்து, பேச வேண்டியதை மனத்திற்குள் மறுபடி மறுபடி ஒத்திகை பார்த்து, பக்குவமாகத்தானே சொன்னேன்? நாளைக்கே பதில் சொல்ல வேண்டும் என்று கூடக் கட்டாயப்படுத்தவில்லையே.

ஏன் இத்தனை பெரிய முடிவை எடுத்தாள்? எல்லாம் நடிப்பு என்றாளே... ஏன்? வேலையையே உதறி விட்டுப் போக வேண்டிய அளவிற்கு வெறுப்பு ஏற்படக் காரணம்?

போன் அடித்தது. எடுத்து, ''ஹலோ, அரவிந்த் பேசறேன்,'' என்றான்.

''உங்களைப் பார்க்க சில ஏஜெண்ட்ஸ் வந்திருக்காங்க. நீங்கதான் வரச் சொல்லியிருந்தீங்க.''

''நீங்களே அவங்களைப் பார்த்துப் பேசியனுப்பிச்சிடுங்க மேனேஜர்.''

''சரி சார். ஒரு மணிக்கு ஃபாக்டரி விசிட் போலாம்னு...''

''அதையும் கேன்சல் பண்ணிடுங்க. நாளைக்குப் போகலாம்.''

வெறுப்பாக ரிசீவரை வைத்தான் அரவிந்த்.

குப்தாவின் முன்னால் மௌனமாக நின்று கொண்டிருந்தாள் வந்தனா. குப்தா பான் பீடா குதப்பிக் கொண்டே, ''ஒரு மாசம்கூட ஆகலேது. அதுக்குள்ளே எந்துகம்மா அந்த வேலையை ராஜினாமா சேஸ்த்தாவு?'' என்றான்.

மேஜையின் கண்ணாடிப் பரப்பை நகத்

பட்டுக்கோட்டை பிரபாகர்





"போபால் விஷவாயுக் கசிவு சம்பவத்தை வைத்து ஒரு திரைப்படம் தயாரிக்க நான் ஸ்க்ரிப்ட் வைத்திருக்கிறேன். யாராவது பைனான்ஸியரிடம் படம் தயாரிக்கும் பொறுப்பை மேற்கொள்ளச் சொன்னால், எல்லோருமே, 'அந்தக் கதையில் எத்தனை பாடல்கள், எத்தனை காதல் காட்சிகள், எத்தனை சண்டைக் காட்சிகள், நடனங்கள் எத்தனை?' என்று கேட்டு என்னை ரொம்பத்தான் இம்சை பண்ணுகிறார்கள்."

— நடிகர் அம்ஜத்கான்.

— எம். எஸ்.

தால் கிறிக் கொண்டே, "சார், அந்த கம்பெனி பாஸோட நோக்கம் எனக்குப் பிடிக்கலை. பிடிக்காதவரோட ஆஃபீஸ்ல வேலை பார்க்கிறது குறுகுறுப்பா இருக்கும். அதனாலதான். எப்ப எந்தப் பிரச்னைன்னாலும் என்கிட்டே வரலாம்னு நீங்க சொன்னதாலதான் வந்தேன். இங்கேயே முந்தி மாதிரியே பார்ட் டைமா வேலை பார்க்கட்டுமா சார்? வேற யாரையும் சேர்த்துட்டீங்களா?" என்றாள் வந்தனா.

குப்தா கண்மூடி யோசித்தான்.

"பெத்த நாய்னா எக்கடரா?" என்றான் ஒரு சிப்பந்தியிடம்.

"நீங்கதான் சார் வகுலுக்கு அனுப்பினீங்க."

"அவுனு. அவுனு. இக்கட சூடம்மா வந்தனா, உனக்கு அந்த பார்ட்டைம் வேலையைக் கொடுக்கறதா இல்லை" என்றான்.

"சார், ப்ளீஸ்... உங்களை நம்பித்தான் நான் துணிச்சலா ராஜினாமா செஞ்சேன்."

"உண்டம்மா. நேனு இன்னும் முடிக்கலையே. இங்கே உன்னை ஃபுல் டைம்க்ளெர்க்காவே சேர்த்துடலாம்னு இருக்கேன். ஏன்னா, வேலைகளும் அதிகமாய்டுச்சி. உனக்கு எட்டு நூறு சம்பளம் இஸ்தானு. ஏமி செப்தாவு?"

"சார், ரொம்ப தேங்ஸ் சார்" என்றாள் கலங்கின கண்களுடன்.

"மனுஷிகு மனுஷி தேங்க்ஸ் செப்பவொத்தும்மா. இவனுக்குச் சொல்லு." என்று மேஜையின் மேலிருந்த புத்தகங்களை, ஃபைல்களை நகர்த்தி வெங்கடாசலபதியைக் காட்டினான். "ஏடு கொண்டல வாடா" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

வள்ளுவர் கோட்டத்தின் கல் தேர் அருகில் மார்பிள் போர்த்தின படிக்கட்டுகளில் வந்தனாவும், அவள் அண்ணன் கோபியும் அமர்ந்திருந்தார்கள். டூரிஸ்ட் கூட்டம் கும்பல் கும்பலாக நகர்ந்து கொண்டிருந்தது. இருள் வந்து கொண்டிருந்தது. அருகில் எங்கோ ஆரம்பிக்கப் போகிற அரசியல் கூட்ட மேடையில் இருந்து கட்சிப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஏன் பேச மாட்டேங்கறே கோபி?" என்றாள் வந்தனா தன் கடலைப் பொட்டலத்தில் இருந்து கொஞ்சம் உள்ளங்கையில் கவிழ்த்துக் கொண்டு, அவனிடம் நீட்டிய படி.

"உன் போக்கை என்னால புரிஞ்சுக்க முடியலை வந்தனா."

"நான் முடிவெடுத்ததிலே என்ன தப்பு?"

"எல்லாமே தப்போன்னு படுது. உன் அளவுகோல் தப்போன்னு படுது. உன் கண்ணோட்டமே தப்போன்னு படுது. உன்கிட்டே ஏன் பாசிட்டிவ் அணுகுமுறையே இல்லாம போச்சுன்னு புரியலை வந்தனா."

"விளக்கமா சொல்லு கோபி. என் அணுகுமுறை எங்கே, எப்படி தப்புங்கறே?"

"அரவிந்த் உன்னை நேசிக்கிறதாத்தானே சொன்னான்? வர்றியா, ஹோட்டல்ல ரூம் போடலாம்னா கேட்டான்?"

"இல்லை. அதுக்காக?"

"வெயிட். நீ என்னைக் கல்யாணம் செய்துக்கச் சம்மதிக்கலைன்னா உன்னை வேலைலேர்ந்து எடுத்துடுவேன் — உன் குடும்பத்துக்குத் தொந்தரவு கொடுப்பேன் — இந்த மாதிரி ஏதாவது சொன்னானா?"

"இல்லை."

"உன்னோட முடிவைத்தானே கேட்டான். இதிலே நீ ஆத்திரப்படவோ, பொங்கறதுக்கோ என்ன இருக்கு? உனக்கு அவனைப் பிடிக்கலையா, இல்லை அவன் சொன்ன விதம் பிடிக்கலையா? எதுவா இருந்தாலும் அவனை மாதிரியே நீயும் மனம் திறந்து இந்த, இந்த காரணங்களால எனக்கு இதில சம்மதமில்லைன்னு நாகரிகமாச் சொல்லலாமே. அதை விட்டுட்டு வெடுக்குன்னு ராஜினாமா செய்யறது அவனை அவமானப்படுத்தற மாதிரி இல்லையா?"

"ஆமாம். அதனாலதான் அப்படி செஞ்சேன்."

"எதுக்காக அவமானப்படுத்தணும் வந்தனா?"

"அவர் செய்கைகளால என்னை அவமானப்படுத்தலையா? என்னை அடையணுங்கிற லட்சியத்தை மனசில வச்சிக்கிட்டு அதுக்காகத் திட்டம் போட்டு, படிப்படியா இறங்கியிருக்கார் கோபி. உதவறேன், உதவறேன்னு சொல்லிக்கிட்டு என்னை அவரோட கட்டுப்பாட்டுக்குக் கீழே கொண்டு வந்து, 'இப்ப கேட்டா, இவ எங்கே மறுக்க முடியும்'ங்கிற திமிர்ல பேசியிருக்கார். பேச்சு பண்பாடானதுதான். அந்தச் சூழ்நிலையை உருவாக்கின நரித்தனம் இருக்கே, அது என்னைக் காயப்படுத்திடுச்சு."

"வந்தனா, தன்மானம் அவசியம்தான். பார்க்க வேண்டியதுதான். இந்த அளவுக்

உங்கள் முன்னேற்றத்திற்குத் துணை புரிபவர் இவர்தான்!...



உங்கள் முன்னேற்றத்திற்குத் துணை புரிபவர் இவர்தான் என்று தபால்காரரை நாங்கள் சுட்டிக்காட்டினால் அது வியப்பாகத் தோன்றும். ஆனால் உண்மை நிலை அதுதான்.

உங்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஆங்கிலமொழி தடையாக இருக்குமேயானால், கீழ்க்காணும் நிலைகளில் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்...........

★ தமிழ் எழுத, வாசிக்கத் தெரிகிறது. ஆனால் ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூட வாசிக்க முடியவில்லை. இதுதான் உங்கள் நிலையா?—அல்லது,

★ பிறர் ஆங்கிலத்தில் பேசுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவர்களிடம் ஆங்கிலத்தில் பதிலளிக்க முடியவில்லையே என வருந்தும் நிலையா? — அல்லது,

★ பட்டம் பெற்றிருந்தும், ஆங்கிலத்தில் பேசினால் இலக்கணத் தவறு ஏற்பட்டு விடுமோ எனத் தயங்கி நிற்கும் நிலையா?

இனி, கவலை வேண்டாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், ஆங்கிலத்தில் சரளமாகப்பேச வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதம் எழுத வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தை, ஒரு போஸ்ட் கார்டில் எழுதி 'ஆசியன் இன்ஸ்டிட்யூட்' நிறுவனத்திற்கு இன்றே அனுப்புங்கள்.

எளிய தமிழில் தபால் மூலம் அளிக்கப்படும் இப்பயிற்சி பற்றிய விபரங்களும், வீட்டிலிருந்தவாறே இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுவது எவ்வாறென்பது போன்ற விபரங்களும் அடங்கிய ஓர் தகவல் புத்தகத்தை இரண்டொரு நாட்களில் தபால்காரர் உங்களிடம் அளிப்பார்.

போஸ்ட் கார்டில் எழுத வேண்டிய முகவரி:

ஆசியன் இன்ஸ்டிட்யூட்
பொன்மேனி (P.O.) மதுரை-10

குப் பார்க்கணுமான்னு தெரியலை. ஓவர் சென்ஸிடிவா இருக்கே நீ. இது இந்த பிராக்டிகல் உலகத்துக்குச் சரியா வராதும்மா.''

வந்தனா மௌனமாகக் கடலை சாப்பிட்டாள்.

''அரவிந்த் கேட்டதிலே தப்பில்லைன்னு நினைக்கிறேன். அவன் நடந்துக்கிட்ட விதங்களலேயும் தப்பிருக்கிற மாதிரி எனக்குப் படலை.''

''உனக்குப் படாதுண்ணா, ஏன்னா, நீயும் ஒரு ஆம்பளை. விடு. இத்தோட இந்த விவகாரத்தை விடு. வீட்டுக்குப் போகலாம்'' என்று எழுந்து கொண்டாள் வந்தனா.

ஒரு பெருமூச்சை வெளியேற்றி விட்டு, பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஸ்கூட்டர் சாவியை எடுத்துக் கொண்டு எழுந்தான்.

''அம்மாகிட்டே விவரமாச் சொல்லலை. ஆபீஸ் பிடிக்கலை, வந்துட்டேன்னேன். குப்தா கடையில ஃபுல் டைம் வொர்க்கா சேர்ந்ததைச் சொன்னதால நோண்டி நோண்டிக் கேக்கலை. நீயும் விவரமாச் சொல்ல வேணாம்.''

கிருஷ்ணன் தன் மோட்டார் பைக்கை அரவிந்த் வீட்டின் போர்ட்டிகோவில் நிறுத்தி இறங்கினான். எதிர்ப்பட்ட வேலைக்காரனிடம், ''அரவிந்த் இருக்கானா?'' என்று விசிலிலேயே கேட்டான்.

''இருக்கார். கோபமா இருக்கார்.''

''கோபமாவா? ஏன்?''

''நான் கேட்டா சொல்லிடுவாரா?''

''மாட்டான். நான் கேட்டா சொல்வான். ஆபீஸ்லேர்ந்து எப்போ வந்தான்?''

''காலைல பதினோரு மணிக்கெல்லாம் வந்துட்டார். மறுபடி போகவே இல்லை. மத்தியானம் சாப்பிடவே இல்லை.''

''என்ன இது?'' கிருஷ்ணன் மாடிப் படிகளில் விரைந்து ஏறி அரவிந்தின் அறைக்குள் வர, அது ஒரு விளக்குக் கூட இல்லாமல் இருட்டாக இருந்தது. வரிசையாக சுவிட்சுகளைத் தட்ட... கட்டிலில், தலைக்கடியில் கைகளைச் செருகி அரவிந்த் படுத்திருந்தான்.

''டேய்! என்னடா ஆச்சு? உடம்பு எதுவும் சரியில்லையா?'' கிருஷ்ணன் கட்டிலில் அமர்ந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை'' என்று எழுந்து அமர்ந்தவனின் கண்கள் சிவந்திருந்தன.

''என்ன நடந்துச்சு? அழுதியா என்ன? வந்தனா விஷயமா?''

ஆமோதிப்பதாகத் தலையசைத்தான்.

''என்ன சொன்னா? இஷ்டமில்லைன்னுட்டாளா?''


''அப்படிச் சொல்லியிருந்தாகூட கொஞ்சம் மனசு ஆறுதலா இருக்கும்'' என்ற அரவிந்த் காலையில் வந்தனா வந்து ராஜினாமா கடிதம் கொடுத்துப் பேசிச் சென்றதை விவரித்தான்.

''நினைச்சேன். இந்த மேட்டருக்குக் க்ளைமாக்ஸ் இப்படித்தான் இருக்கும்னு நினைச்சேன்! சொன்னனே, ரொம்ப ராங்கித்தனம் தெரியுதுன்னு, நீதான் உருகினே. நான்தான் வீட்டுக்குப் போய்ப் பார்த்தேனே... போர்ஷன்தான். விருந்தாளி ரெண்டு பேர் வந்துட்டா திணறும். ஆனா பாரு, அவ மனசுல ராஜகுமாரின்னு நினைப்பு.''

''அப்படிச் சொல்லாதே கிருஷ். என்னால அவளை வெறுக்க முடியலை. ஏன் என்னை வெறுக்கறான்னு தெரிஞ்சுக்கணும். வியாபாரத்தில எவ்வளவோ ஜெயிச்சிருக்கேன். வாழ்க்கை விஷயத்தில இது ஒரு அசிங்கமான தோல்வி. காரணம் புரியாத தோல்வி. எந்த வகையில நான் அவளோட அன்பைச் சம்பாதிக்கத் தகுதியில்லாதவனாப் போனேன் கிருஷ்?''


கிருஷ்ணன் சிகரெட் கொளுத்திக் கொண்டு, ''அரவிந்த், இந்த மாதிரி விஷயத்தில உன் யோசனை எடுபடாதுன்னு சொன்னா கேக்கலை. என் யோசனைக்கு வர்றியா? வெற்றிக்கு நான் கியாரண்டி'' என்று ஆரம்பித்தான்.

(தொடரும்)





இன்னிசை பாடும் நேரம்
MIRACLE EYE
SOUND AUTO CONTROL
Ajanta®
நேரத்தை நினைவூட்டும்
மணிக்கொருமுறை நினைவூட்டும்
அனைவருக்கும் ஆனந்தம்
தொல்லையற்ற உறக்கம்.
மியூசிகல் கடிகாரங்களிலே இந்தியாவில் முன்னோடிகள்
Ajanta®
QUARTZ
the touch of tomorrow's technology
பதிவு அலுவலகம்:
மோர்வி 363 641
போன்: 3627, 2280, 2457, 2433
டெலக்ஸ்: 0168-212 ATCM
VANITHA
M207
M267
M227
M257
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது
எச்சரிக்கை: எங்கள் தயாரிப்பு அனைத்திலும் 'அஜந்தா' மார்க் உள்ளதா என பார்க்கவும். போலிகளை கண்டு ஏமாறாதீர்.


ஆம்! டாடா ஓகே பால் வறட்சியைப்போக்கும் ஒரு முழுமையான தீவனம்.
மாட்டுத்தீவனம் வாங்கும் பொழுது டாடாவின் ஓகே தானா என்று பார்த்து வாங்குங்கள்.
டாடாவின் ஓகே ஒரு முழுமையான கால்நடைத்தீவனம்.
"பாத்தியாடீ அவ மடிய தளுக்கிகிட்டு நிக்கறத!"
"பொறாமைப்பட்டு என்னடி பயன் — அவதான் தினமும் ஓகே திங்கிறாளே!"
OK
OK
CATTLE FEED
MADE IN INDIA
THE TATA OIL MILLS CO. LTD.
BOMBAY
45 Kgs. NET WHEN PACKED.
தயாரிப்பவர்கள்:
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.

பொண்ணு பாக்கப்போறேன்



புலி புகுந்து அட்டகாசம் பண்ணும் ஒரே ஒரு கிராமத்திலே ஒரே ஒரு மரமேறத் தெரிந்த பெண்ணாம். அந்தப் புலியை வேட்டையாட வந்த ஆளிடம்தான் அவளுக்கு 'இது' என்கிற மாதிரி தோன்றுகிறது. அப்புறம் அந்த ஊருக்குள் வந்த அப்பாவி போல் தெரிந்த விவசாய ஆபீசரிடம் மனசையும் மற்றவற்றையும் பறிகொடுத்து விடுகிறாள். தன்னையே காதலிப்பதாய் நம்பிக் கொண்டிருந்த வேட்டைக்காரன் தன் தங்கையைப் பறிகொடுத்து விட்டு நொந்து போய் வந்த போது, அந்தப் பெண் தன்னை 'அண்ணா' என்று உரிமை கொண்டாடியதும் மேலும் பொடிப் பொடியாய்ப் போகிறான். அப்புறம் தேறி, அவளது காதலை நிறைவேற்றப் பார்க்கும் கட்டத்தில், தன் தங்கையைக் கெடுத்துத் தற்கொலை செய்து கொள்ள வைத்த அதே நபர்தான் இப்போது அந்தப் பெண்ணின் வாழ்வில் குறுக்கிடுகிறான் என்று புரிந்து கொண்டு அவளை மீட்கப் போவதற்குள் எல்லா விவகாரமும் முடிந்து போய் விடுகிறது. அவளை ஒரு வழி பண்ணி விட்டுத் தப்பியோடப் பார்க்கும் ஆபீசரை நாகம் தீண்ட, அவனை அவள் காப்பாற்ற, அவன் தன் தவறை உணர்ந்து திருந்த... சுபம்.

கதாநாயகன் மனோ, காரெக்டருக்கு ஏற்ற பாவம்தான். ஒன்றும் தெரியாத அப்பாவி போல் அசட்டுப் பிசட்டு வேலைகள் செய்யும் இந்த மனிதருக்குள் அப்பேர்க்கொத்த வில்லன் ஒளிந்திருப்பது வெளிப்படும் கட்டத்தில் ஷாக். பாவம், டீ.வி. நாடகம்தான் பாதித்து விட்டது. சீரியஸ் நடிப்பிலும் ரசிகர்களுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வருகிறது.

பிரபு ஏதோ முட்டுக் கொடுக்க வந்தவர் போல் தோற்றினாலும் அழுத்தம் விழுந்த நடிப்பில் தூக்கலாகிப் போகிறார்.

மரமேறி சீதா படுபாந்தம். ஆபீசர் மனோவின் அசட்டுப் பிசட்டுத் தனங்களை அப்படி அப்படியே ஏற்றுக் கொண்டு அவர் வதைபடுவதை வாய் விட்டுச் சிரித்து ரசிக்கும் விதம் என்ன, இவரது விளையாட்டில் அந்த நபர் உயிர் வதைப்படுவதாய் நம்பித் தன்னிரக்கத்தில் கனிந்து அவரிடம் ஒட்டிக் கொண்டு விடும் பலவீனம் என்ன? இந்த மாற்றத்தில் ஆழமான நடிப்பு முத்திரை.

மாணாவாரிக் கலகலப்பை அள்ளித் தெளிக்கும் கைங்கரியம் ஜனகராஜுக்கு. சரளாவிடம் அவர் சரணடைவது விலாப் புடைச் சிரிப்புக் கதை.

இத்தனைக்கும் நடுவில் அந்தப் பஞ்சாங்க சமாசாரம் எதுக்கு? சோதிடத்தை முன்வைத்து மக்களின் செயல்பாட்டைப் பின்னுக்குத் தள்ளும் நாசவேலைக்குத் தயவு பண்ணி முடிவு கட்டுங்கள்.

— பி. எஸ். எஸ்.

மார்கழி அதிகாலை, பனியின் பயமுறுத்தலில் வெடவெடத்துக் கொண்டிருந்தது. எங்கோ தூரத்தில் ஆளுக்கொரு திக்கில் 'சீர்காழி'யும் ஈஸ்வரியும் தேய்ந்து போன இசைத் தட்டுகளில் முருகனையும், அம்மனையும் பாடிப் பரவிக் கொண்டிருந்தனர்.

கனத்த ஈரோட்டுப் போர்வையின் ஒரு முனையை இழுத்து, கால்களுக்கு அடியில் செருகி, மறுமுனையை முகத்தை மூடி, தலையைச் சுற்றிக் கவ்வி, சுகமான கதகதப்பை ஏற்படுத்தி, சோம்பலும் சுவாரஸ்யமும் கூடிய அந்த 'மார்கழி மயக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன். இந்தப் பூலோக சொர்க்கத்தைப் பொய்யாக்கும் வகையில், எனக்கென்று சொர்க்கத்தில் பிரத்யேகமாக நிச்சயிக்கப்பட்டிருந்த சகுந்தலா, தான் நேற்று இரவு போட்டுப் பழகியிருந்த பதினெட்டு புள்ளி, பதினேழு வரிசை கோலத்தால் வாசலை அடைக்க, கதவை 'பா'வென்று திறந்து விட்டுப் போயிருந்தாள். இதன் காரணத்தால், குறைந்தழுத்த பனிவாடைக் காற்று மண்டலமொன்று கதவைக் கடந்து உள்ளே நுழைந்து சற்றே பலமடைந்த நிலையில் விலகியிருந்த போர்வையின் இடுக்கு வழியே பரவி பாடாய்ப்படுத்தியது.

"கதவை மூடித் தொலைச்சிட்டு போயேண்டி" என்று, குரல் கொடுத்தபடி போர்வையை நன்றாக வழித்து, காற்று புகாமல் 'காம்பாக்ட்'டாக மூடி உடம்பை, ஒரு சுருட்டாகச் சுருட்டிக் கொண்டேன்.

"கத்திப் பேசாதீங்க... வாசலில் சேதுராமன் சார் உங்களுக்காகக் காத்துண்டிருக்கார். இன்னிலேர்ந்து பஜனைக்கு வர்றதா சொன்னேளாமே?" என்றபடி உள்ளே வந்தாள் சகுந்தலா.

எனக்குப் பகீரென்றது. நேற்று சேது



மார்கழி மயக்கம்



ராமனிடம் ஏதோ பேச்சுக்காக பஜனைக்கு நானும் வந்து கலந்து கொள்கிறேனென்று சொன்னது இப்போது விபரீதமாகி, இந்த விடியற்காலையில் விளையாடியது.

'மகாதேவன்... மணி நாலரை... சரியா ஐந்து மணிக்கு பஜனை ஆரம்பிச்சாத்தான் ஆறேழு தெருக்களைச் சுத்திட்டு, விடியற

துக்கு முன்னால பெருமாள் கோயில் போய்ச் சேர சரியாய் இருக்கும்.. சட்டுனு கிளம்புங்க...'' என்று விடாப்பிடியாக உள்ளே வந்து உட்கார்ந்தார்.

''இதோ கிளம்பிடறேன்... கொஞ்சம் அசந்துட்டேன்'' என்று அசடு வழிந்தபடி, உயர்தர உறக்கத்தைத் துறந்த துயரத்தில் எழுந்து குளியலறைக்குச் சென்றேன்.

பதினைந்து நிமிடத்தில் வெளியே வந்த என்னிடம் ''கிளம்பலாமா'' என்றபடி எழுந்து வெளியே நடந்தார் சேதுராமன். சால்வையைப் போர்த்தி மஃப்ளரைக் கட்டிக் கொண்டும் மசியாத குளிரில் பற்கள் பாட்டியாய் நடுங்க, நானும் நடைபோட்டேன். கட்டாயம் இந்த நடை இன்றே கடைசி என்று தீர்மானித்தேன்.

'**ஸ்ரீ** ராம பஜனை மண்டலி' என்ற



— அகிலா கார்த்திகேயன் —

பெயிண்ட் உரிந்த பெயர்ப் பலகையோடு ஒரு பழைய காலத்துத் திண்ணையில் ஓர் ஓரமாக ஒதுங்கியிருந்தது பஜனை சபா. நாங்கள் வந்து சேர்ந்த சமயம் ஏற்கெனவே குத்துவிளக்கு ஏற்றப்பட்டு, ஒரு ராமர் படத்திற்குப் பூப் போடப்பட்டு பஜனை ஆரம்பிக்கத் தயார் நிலையில் காணப்பட்டது.

''வாங்கோ... வந்துட்டேளா... உங்களுக்காகத்தான் 'வெய்ட்' பண்ணினோம்...'' என்றவரை ஏறிட்டேன். அவர் என்னிடம் சொல்லவில்லை; சேதுராமனைக் குறிப்பிடுகிறாரென்று புரிந்தது. ஊதினால் ஒடிப்போகக்கூடிய ஒல்லியான உருவம். வெற்று உடம்பில் ருத்ராக்ஷ மாலை... தலை மொழு மொழுவென்ற சொட்டை. பாலைவனப் பனை மரமாய் குடுமிக் கீற்று. பஜனை கோஷ்டியின் பிரதான பேர்வழி என்று புரிந்து கொண்டேன். அவருக்குப் பக்கத்தில் சுருதிப் பெட்டியைத் தன் தொப்பையின் மேல் பதித்து, நரைமுடி அடர்ந்த மார்பில் சந்தனம் தடவிய இரட்டை நாடி ஒன்று தன் காவிப் பல்லைக் காட்டியபடி ''சார்... யாரு'' என்றது. என் அந்தஸ்தான உத்தியோகத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் இவனிடம் என்ன சொல்லிப் புரியப் போகிறது என்று நினைத்தபடி அவர் கேட்டது காதில் விழாதது போல இருந்து விட்டேன். முருகா, முருகா என்று பிரிண்ட் செய்த மஞ்சள் நிறத் துண்டால் போர்த்தி, முகத்தில் மூன்று நாள் தாடியுடன் மூக்குக் கண்ணாடி வழியே முழித்துக் கொண்டிருந்த மூன்றாம் நபர் கையில் 'ஜால்ரா' இருந்தது. சுத்த அசட்டு கும்பல்; நாம் வேறு வந்து மாட்டிக் கொண்டோம் என்றிருந்தது.

''கணபதிராயன் அவன் இரு காலைப் பிடித்திடுவோம்...''

ஊரே உறக்கத்திலிருக்க அந்த 'ஒல்லி' ஓங்கிப் பாடியாடி பஜனையை ஆரம்பித்திருந்தது. ஆளுக்கொரு பக்கமாய், சுருதிப் பெட்டியும் ஜால்ராவும் செல்ல, சேதுராமனும் பலமாகப் பாடியபடி சென்றார். நான் அவர்களோடு பாடுவதா வேண்டாமா என்று தயங்கியபடி,

''ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்'' என்று விட்ட இடத்தை நிரப்பியபடி வேண்டா வெறுப்பாய்ச் சொல்ல ஆரம்பித்தேன்.

எனக்கு இந்த கோஷ்டி ஒரு கடைநிலைக் கூட்டமாய்ப் பட்டது. இந்த ஒடிசல் மனுஷன், ஒன்றுக்கும் உதவாத கம்பெனி எதிலாவது இரண்டாந்தர குமாஸ்தாவாய் இருக்க வேண்டும். 'தொந்தி'யை ஹோட்டல் சர்வருக்கு மேல் உயர்த்த முடியாது. 'ஜால்ரா' மிஞ்சிப் போனால் 'டப்பா' தட்டும் அரசாங்க 'டைப்பிஸ்ட்'டாய் இருக்கலாம். ஏன் நம் 'சேதுராமன்' கூட நெடுஞ்சாலைத் துறையில் ஒரு கீழ்மட்டப் பணியாளர்தான். என்னை அலாதிப்படுத்திய நினைப்புடன் ஒரு அலட்சிய மனோபாவம், அவர்களிடம் நான் ஒட்டாமல் செய்தது. மேலும் சுகமான தூக்கத்தை இழந்த துக்கத்துக்கு இந்த நாலரை மணி பனி தூபம் போட, நமக்கெல்லாம் இது லாயக்கில்லை என்று எண்ணச் செய்தது.

''**கோ**விந்த ராதே..கோபால ராதே...'' பஜனை முதல் தெருவைக் கடந்து ராஜ



டி.வி.யில் செய்தி வாசிப்பவர்: டாக்டர்! வாயைத் திறந்தால், 'பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி' என்றே வருகிறது. அதை மாற்றி, 'பாரதப் பிரதமர் வி. பி. சிங்' என்று வாயில் வருவதற்கு ஏதாவது மருந்து தர முடியுமா?''

— அவ்வை.



''எங்களிடம் மனை வாங்குபவர்களுக்கு இலவசமாக ஒரு தடி வழங்குவோம்...

''எதற்கு?''

''பாம்பு, நண்டுவாக்கிளி, நரியை விரட்ட உதவுமே!''

வீதிக்கு வந்திருந்தது அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சாணித் தெளிப்புகள் காதில் விழுந்தன. நடுவே பால்காரர்களின் மணி சப்தம்.

'மாதவ ராதே எங்கள் யாதவ ராதே' என்று பின்பாட்டு பாடியவர்கள் சுற்றிச் சுழன்று, குதியாட்டம் போட்டுத் தொடர்ந்தனர். இவர்களுடன் சேர்ந்து கூத்தாடி வேறு தொலைக்க வேண்டுமா என்ற எரிச்சலோடு, ஏதோ கடமையாக 'ராதே' மட்டும் மெதுவாக என்னிடம் ஒலித்தது. இந்தக் கூத்தாடி கும்பலில் என்னை யாராவது பார்த்து வைக்கக் கூடாதே என்ற பயம் மேலோங்க, மஃப்ளரை முன்நோக்கி இழுத்து, முகத்தைச் சற்றுத் தெரியாமல் மூடினேன்.

பாரதி நகரை அடைந்த போதுதான் அந்த விபரீதத்தை உணர்ந்தேன். என் கோட்டப் பொறியாளர் முதல் ஆபீஸில் பாதி பேருக்கு இங்குதான் ஜாகை. ஜகா வாங்கிக் கொண்டு போய் விடலாமா என்று நினைத்த மாத்திரத்தில் அது நிகழ்ந்தது.

''எட்டுகுடி வேலவனே வா... வா ஷண்முகா'' என்றபடி ஏடாகூடமாய் இம்முறை தொந்தி ஆசாமி ஆட்டத்தோடு பாடி முன் செல்ல, மூக்குக் கண்ணாடி தம் தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னா பையிலிருந்து, அரை அடி சைஸில் ஓர் உண்டியலை எடுத்து என்னிடம் நீட்டி, ஏதோ ஜாடை காட்டிக் கையில் திணித்து விட்டுப் ''பழநி மலை பாலகனே... வா வா'' என்று அழைத்தபடி நடந்தார். ஒரு நிமிடம் ஒன்றும் புரியாமல் நின்றேன்.

''வெறுங்கையோடு வரேளேன்னு உங்க கிட்டே கொடுத்துட்டார் போலிருக்கு. கூடவே குலுக்கிட்டு வாங்கோ. போடறவா போடட்டும். நல்லவேளை பாரதி நகர்ல பாதி பேர் வீட்டில் எழுந்தாச்சு போலிருக்கு. 'லைட்' எரியறது...'' சேதுராமன் விளக்கம் கூறிய போது எனக்கும் உள்ளே எரிந்தது. கழன்று கொண்டு போய் விடலாமென்று நினைத்தால் கையில் உண்டியலைக் கொடுத்து, குலுக்க வேறு சொல்கிறார்களே என்று புலம்பாத குறையாகப் பின்தொடர்ந்தேன்.

இப்போது பஜனை கோஷ்டி விடுவிடுவென நடையைக் கட்டாமல் ஒவ்வொரு வீட்டின் முன்னும் ஒரு நிமிட நேரம் நின்று உயிரை வாங்கிற்று.

மூன்று வீடு தள்ளி ஆபீஸ் ரிசப்ஷனிஸ்ட் மாலதி வாசலில் நின்றபடி தன் வேலைக்காரியுடன் கோலம் போடுவதில் கூட்டணி அமைத்திருந்ததைப் பார்த்ததும் என் மூச்சே நின்று விடும் போலிருந்தது. பொல்லாதவள்! என்னை இந்நிலையில் பார்த்து விட்டாளானால் தீர்ந்தேன்! ஆபீஸ் முழுக்க பரப்பி, 'குலுக்கல் நாயகன்', பஜனை பாண்டியன் என்ற ரீதியில் ஏதாவதொரு பெட் நேமை வைத்துப் பழிவாங்குவாள். உண்டியலைப் பிடித்திருந்த எனக்கு உதறல் கண்டு விட்டது.

''சங்கடங்கள் தீர்க்கும் எங்கள் சங்கர குரு!''

என் சங்கடத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத ஜன்மங்களாய் இவர்கள் ஜங் ஜங் என்று குதித்தபடி மாலதி வீட்டை அடையும் போது எனக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது. சட்டென்று மாலதி தன் பார்வையைத் திருப்பி விட்டாள். நானும் துரிதகதியில் இயங்கி, உண்டியலை டக்கென்று கக்கத்தில் இடுக்கி மறைத்துக் கொண்டு இயல்பாய் அவளைப் பார்த்து இளித்தேன்.

''குட்மார்னிங் சார்... என்ன சார் இந்தப் பக்கம்?'' என்றாள்.

''ஒண்ணுமில்லே... நம்ப டிவிஷனல் இஞ்ஜினியரைப் பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன்... என்ன கோல சூப்பர்விஷனா?'' என்று அசடு வழிந்தேன்.

''சத்தியத்தைக் காக்கும் எங்கள் சங்கர குரோ'' என்றபடி முன்னே சென்றவர்கள் நான் சத்தியத்தைப் பறக்க விட்டதைக் கவனித்திருக்க சாத்தியமில்லை. மாலதியும் கோலத்தை முடித்து வீட்டிற்குள் நுழைந்தாள். நானும் குலுக்கலைத் தொடர்ந்தேன்.

பெருமாள் கோயிலினுள் நுழைந்தோம்.

பிரகாரத்தைச் சுற்றி வந்து ''ஜெய் அனுமான்'' பாடப்பட்டு 'மங்களம்'...

மங்களம்...'' என்று முழங்கியபடி பஜனை முடிக்கப்பட்டது. பெருமாளுக்குத் தீபாராதனை காண்பிக்கப்பட்டு எங்களுக்கென்று பிரத்யேகமாக பிரசாதங்கள் வழங்கப்பட்டன. அனைவரும் ஒரு மூலையில் போய் அமர்ந்தோம்.

''இந்த வருஷம் சார் புதுசா வந்திருக்கார். இந்த மாதிரி 'சத்' காரியத்துக்கு யார் வரா சொல்லுங்கோ'' என்று 'ஐஸ்' வைத்து ஆரம்பித்தார் 'தொந்தி'. 'சரிதான் நாளையிலிருந்து யார் வரப் போகிறான்' என்று லேசாக நினைக்க ஆரம்பித்தவனை,

''மே ஐ நோ யுவர் நேம்?'' என்ற அசத்தலான ஆங்கிலம் ஒல்லி மனிதரிடமிருந்து கிளம்பி அதிர்ச்சி அடையச் செய்தது. பெயரைச் சொன்னேன்.

''மகாதேவன்...! ஈஸ்வர நாமா சொல்லிப் பாடிண்டு போகும்போது நம்மகிட்டேர்ந்து 'ஈகோ' ஓடிப் போயிடறது பார்த்தேளா? பகவன் நாமாவைப் பல பேர் காது படப் பாடி, அவா கிட்டே நம்மைத் தாழ்த்தி யாசகம் வாங்கி அவாள உசத்தறோம்... அவாளும் நம்மை வலம் வந்து நமஸ்காரம் பண்ணித் தங்களைத் தாழ்த்தி நம்மை உசத்திடறா... எல்லாம் அவனோட மந்திரத்தோட மகிமை... பத்து பைசாவோ, பத்து ரூபாயோ உண்டியலில் எத்தனை சேர்ந்துதுன்னு நமக்குக் கவலையில்லே... ஒரு நல்ல காரியத்துக்கு நாலு பேரோட பணம் சேர்றதுலே நாம பங்கு கொண்டோமேன்னு திருப்திதான். வெங்கட்ராமன்... உண்டியல் பணத்தோட இதையும் சேர்த்துக்கோங்கோ. பெருமாள் கைங்கர்யத்துக்குத் தினம் நூறு ரூபாய் ஆறதாம்.. தனுர் மாதம் முப்பது நாளும் ஓடணும்... உங்களாலே முடிஞ்சதையும் அவா அவா போட்டு, கோயில்லே சேர்த்துடுங்கோ... நாளைப் பாடு ஆயிற்று'' என்றவாறு ரூபாய் நோட்டை எடுத்து உண்டியலில் திணித்தார்! எனக்கு முதுகில் யாரோ சூடு போட்டாற்போல் இருந்தது. கனையாக ஐம்பது ரூபாய்! தொந்தியும், கண்ணாடியும் தம் பங்காய் இருபதும், பத்தும் போட்டனர். சேதுராமன் இரண்டு ரூபாய் போட, எனக்கு இருண்டு கொண்டு வந்தது. நான் எதையும் போட முடியவில்லை. வீட்டிலிருந்து வரும் போது எடுத்து வரத் தோன்றவில்லை. என் அகந்தைக்கு முதல் அடி விழுந்தது.

''அப்போ நான் கிளம்பட்டுமா... நேரமாறது. வெங்கட்ராமனும், அருணாசலமும் என் கூட வந்தா வழிலே 'டிராப்' பண்ணிட்டுப் போறேன். வாட் அபவுட் யூ மிஸ்டர் மகாதேவன்?'' பேசிக் கொண்டே நடந்தவரை பிரம்பிப்போடு பார்த்து நின்றேன். ஏனோ பேச்சு எழவில்லை.

''நானும் சாரும் நடந்தே போய்டறோம்... என் வீட்டுப்பக்கத்திலே தான் அவர் வீடு'' என்று சேதுராமன் எனக்கென்று பதில் சொல்ல, கோயில் வாசலில் நிறுத்தியிருந்த மாருதியில் மூவரும் ஏறிக்கொள்ள, ''ஓகே நாளைக்குப் பாப்போம்'' என்றபடி கிளம்பினார்.

நான் வியப்பிலிருந்து விடுபடுமுன் சேதுராமன் ஆரம்பித்தார்:

''ரொம்ப உயர்ந்த மனுஷன் லக்ஷ்மி நாராயணன். சென்ட்ரல் எக்ஸைஸில் அசிஸ்டெண்ட் கலெக்டரா இருக்கார். பரம்பரைப் பணக்காரர். தான் செஞ்சதுன்னு சொல்லிக்காம நிறையத் திருப்பணிகள் பண்ணியிருக்கார்... வெங்கட்ராமனைத் தெரிஞ்சிருக்குமே? எம். டி. சர்ஜனா இருக்கார். அருணாசலம் செட்டியார் சாலிடேர் டீலர்... பஜார்லே டீ. வி. ஷோரூம்னு பார்த்திருப்பீங்களே...'' சேதுராமன் சொல்லச் சொல்ல அத்தனையும் சவுக்கடியாக விழுந்தன.

கோயிலை விட்டு வெளியேறி வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். இப்போது பனிமூட்டம் பளிச்சென்று விலகியிருந்தது. என்னுள்ளும் தான்!

சென்ற பத்து நாட்களாக பஜனைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். ''உங்க வீட்டுக்காரர் உண்டி குலுக்க ஆரம்பிச்சுட்டாரா?'' என்று சாரதா கிருஷ்ணமூர்த்தி சகுந்தலாவிடம் கிண்டல் செய்ததால் சகுந்தலாவிற்கு நான் போவது பிடிக்கவில்லை. டீ. வி யில் பைத்திய ஆட்டத்துடன் இசைக்கப்படும் பாப் மியூசிக்கை மட்டும் ரசிக்கத் தெரிந்த பையன் ராம்ஜிக்குக் கூட நான் பஜனைக்குப் போவது பிடிக்க வில்லை தான். ஆனால் எனக்குப் பிடித்திருந்தது...

நண்பர்: நீங்க ரொம்ப பிஸியா இருக்கீங்களா?

எழுத்தாளர்: ஆமாம்! ஏன் கேட்கிறீங்க?

நண்பர்: உங்களுக்குச் சிந்திக்கக்கூட நேரம் கிடைக்கலையேன்னு கேட்டேன்...!

— மணியன் தர்மலிங்கம்.




''வர வர ரொம்ப மோசமா போச்சுடா?''

''என்ன?''

''நடங்களுக்கு வருந்துகிறோம் சிலை ணடக் கூட, 'வழங்கியவர்: அம்போ காப்பி கம்பெனி'ன்னு போடுறான்!''

— பொடுசி.



எம்.ஏ.சி. அறக்கொடை

டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசுத்திட்டம்

எம்.ஏ.சி. அறக்கொடை நிறுவனத்தார் தங்களுடைய பதினாறாவது (1990) ஆண்டிற்குரிய பரிசிற்காக 1986-89 ஆண்டுகளுக்கிடையே வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

பரிசிற்குரிய நூல் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று, அந்நூலின் ஆசிரியருக்கு ரொக்கப் பரிசாக ரூ.20,000/- வெள்ளித்தட்டில் வைத்து வழங்கப்பெறும்.

நூல்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதி நாள் 28.2.1990.

பரிசுத் திட்டம் குறித்த முழு விவரங்களை,

செயலாளர், நிர்வாகக்குழு,
''டாக்டர் ராஜா சர் அண்ணாமலை
செட்டியார் பரிசு''
எம்.ஏ.சி. இன்ஸ்டிடியூட் ஆப் கம்யூனிட்டி ஹெல்த்
ஹாஸ்டல் கட்டடம்
வி.எச்.எஸ். வளாகம்
டி.டி.டி.ஐ. அஞ்சல், சென்னை 600 113.
என்ற முகவரிக்கு எழுதிப்பெறவும்.

PROFAD/MAC/451/89/TAM

76 வயதில் நடனம் கற்கலாம்! 24 தடவை தேர்தலில் தோற்கலாம்!



உலக அளவிலான சாதனைகள் இடம் பெறும் கின்னஸ் புத்தகம் போல, இந்திய அளவிலான சாதனைகளைக் கொண்ட புத்தகம் Limca Book of Records. இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சுவையான விவரங்கள்:

oo மிகவும் குட்டையான மனிதர், குல் முகமது. பழைய டெல்லிவாசியான இவர் உயரம் அறுபத்து மூன்றரை செ.மீ. (சுமார் 2 அடி 2 அங்குலம்.) வயது முப்பத்தாறு.

oo மிக உயரமான மனிதர் போபாலைச் சேர்ந்த மங்கல் சிங். ஏழரை அடி உயரமான இவர், ஹார்மோன் கோளாறு காரணமாய்க் கிடுகிடுவென உயர ஆரம்பித்து, விஷயம் விபரீதமாகு முன்னர் அறுவை சிகிச்சை மூலம் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

oo 1949ல் தொடங்கி பதின்மூன்று ஆண்டுகளில் 2.59 மீ. நீளத்துக்கு மீசை வளர்த்து உலக சாதனை புரிந்திருப்பவர் உ.பி.யைச் சேர்ந்த மசூரியா தின்.

oo ம.பி.யின் சிவில் சப்ளைஸ் துறையினர் தயவில் தயா சங்கர் வியர்ஸ் (42) ஒரு சாதனை புரிந்திருக்கிறார். இந்த உணவு அதிகாரியை ஆறு வருட சர்வீசில் நாற்பது தடவைகள் டிரான்ஸ்ஃபர் செய்திருக்கிறார்கள்!

oo ஜி. டி. பிஸ்ட் என்கிற ராஜ்ய சபை சீனியர் நிருபர், நிமிடத்துக்கு 250 வார்த்தைகள் சுருக்கெழுத்து டிக்டேஷன் எடுத்துக் கொள்ளும் திறமைசாலி. ஸ்டெனோகிரபியில் டாக்டர் பட்டம் வாங்கிய முதல் இந்தியரும் இவரே!

oo மிகவும் வயதான பின், நடனம் கற்றுக் கொண்டவர் தாகூர். பூனாக்காரரான இவர், எழுபத்தாறாவது வயதில் கதக் நடனம் கற்றுக் கொண்டு, அரங்கேற்றமும் செய்து விட்டார்!

oo தமிழகத்தின் சத்திய மங்கலத்தைச் சேர்ந்த ரவி, ஒரு பட்டம் விட்டார். அதன் வால் 44.2 மீ நீளமாம். இதுவும் ஒரு சாதனை! இவர் செய்துள்ள இன்னொரு சாதனை முப்பத்து நான்கு மணி நேரம் ஒற்றைக் காலில் நிற்பது!

oo பெங்களூரைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஈஸ்வர் பட். இவரிடம் நாலாயிரம் பேனாக்களுக்கும் அதிகமாய் உள்ளன. சிகரெட் லைட்டர், காய்கறிகள், மிருகங்களின் அமைப்புள்ள பேனாக்கள் தவிர, இந்திரா காந்தி உபயோகித்த பேனா ஒன்றும் வைத்திருக்கிறார்!

oo எட்டு முறை தொடர்ந்து ஒரே தொகுதியிலிருந்து, பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதி ஜகஜீவன்ராம்.

oo இருபத்து நான்கு தடவை தேர்தலில் போட்டியிட்டு, அத்தனை முறையும் தோற்ற மனிதர் வி. டி. ஆர். வீரப்ப கவுண்டர். இதில் பதினேழு தடவை டெபாசிட் காலி!

oo பி. ஹெச். பாண்டியனும் இப் புத்தகத்தில் ஒரு சாதனைக்காக இடம்பெற்றிருக்கிறார். அவர்தான், சட்டசபைக்குள் போலீஸை அழைத்த முதல் சபாநாயகர்!





oo வழக்கறிஞர் குப்தா, டெல்லி போக்குவரத்துக் கழகத்தின் மேல் கேஸ் போட்டார். பஸ் ஒன்று பிரேக் டவுன் ஆகி, அதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படாததால் தமக்கு நஷ்டம் ஏற்பட்டதாக வாதாடினார். போக்குவரத்துத் துறை குப்தாவுக்கு நஷ்ட ஈடு தர வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார். தொகை எவ்வளவு தெரியுமா? ஆறு ரூபாய் முப்பது காசு! குப்தா ரிக்‌ஷா கூலியாகத் தந்த தொகை!

oo இந்தியாவின் மிகப் பெரிய பாங்க் கொள்ளை 1987 பிப்ரவரி இரண்டாம் தேதி லூதியானாவில் நடந்தது. இருபத்தைந்து பயங்கரவாதிகள், போலீஸ்காரர்கள் போல வேடம் தரித்துப் பஞ்சாப் நேஷனல் பாங்க்கினுள் நுழைந்து, ஐந்து கோடியே எழுபது லட்சத்தை அடித்துக் கொண்டு போய் விட்டனர்.

oo மன்மௌளஜி என்ற நடிகர் இருநூறுக்கும் அதிகமான திரைப்படங்களில் மொட்டைத் தலையுடன் தோன்றியுள்ளார்.

தொகுப்பு: **மௌஷ்மி**

முகவரி:
**Limca Book Of Records,
DDA Complex, Ring Road,
Naraina, New Delhi — 110 028.**

விலை ரூ. 95/-

வட்டமேஜை



வி.பி.சிங்கின் முடிவு விவேகமானதே!



* தேவிலால் ஒரு முரட்டு, உணர்ச்சிவசப்படும். ஆனால் லட்சக்கணக்கான ஜாட் இன மக்களை வசியப்படுத்தும், தவிர்க்க முடியாத, சுவாரசியமான மனிதர். அக் கிழச் சிங்கம் வெளியில் இருப்பதை விட, வளையத்துக்குள் மாஸ்டருக்குத் துணையாக இருப்பதே பாதுகாப்பு என்ற வி. பி. சிங்கின் முடிவு விவேகமானதே.

சிட்லபாக்கம். அ. ஷண்முகசுந்தரம்.

* பிடிவாதக்கார தேவிலாலைப் பற்றிய மூன்று பக்க 'கவர்ஸ்டோரி' ஒரு சஸ்பென்ஸ் சிறுகதையைப் போல நல்ல விறுவிறுப்பு.

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

* 'தேவிலால் துணையா? தலைவலியா?' கட்டுரையில் தேவிலால் பற்றி மட்டுமல்லாது 'துணைப் பிரதமர்' என்கிற பதவி, இந்திய அரசியலில் எந்த எந்தக் காலத்தில் எந்தவிதமான பங்குகளை ஆற்றியுள்ளது என்பதையும் விலாவாரியாக விளக்கியிருந்ததைப் பாராட்ட வேண்டும்.

கோவை — 16. பெ. அருண்.

* கல்கி வார இதழ் எங்கள் கைக்கு எட்டிய உடனே பொன்னியின் செல்வன், அரசியல், மற்ற கதைகள், சினிமா விமர்சனம் என்று படித்து விட்டு சினிமாத் துறை (நடிகர்களைப் பற்றி) செய்திகள் இடம்பெறவில்லையே என ஏங்கும் எங்களைப் போன்ற வாசகர்களுக்கு, 'சினி சிப்ஸ்' ஒரு வரப்பிரசாதம். இனி வரும் இதழ்களில் சினி சிப்ஸை எதிர்பார்க்கிறோம்.

குடியாத்தம். மதுசூதனன்.

* 'அந்த ஒரு கணம்' கதையில் வித்தியாசமான ஒரு மேலதிகாரியைச் சந்தித்த தித்திப்பு இன்னும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

இராமநாதபுரம். எஸ். லதா.

* கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி, 'மயிலை மாதா'வின் சரித்திரப் புகழ்வாய்ந்த பெருமைகள் குறித்த கட்டுரை கல்கிக்குச் சிறப்பைத் தந்தது. பாராட்டுக்கள்!

புதுவை — 3. கே. எஸ். மாறன்.

* 'சுந்தரண்ணா' ஒரு சகாப்தம் என்பதற்கு மியூசிக் அகாடமி அரங்கே சாட்சியாக அமைகிறது. அவரின் உழைப்பும், வெற்றி கண்ட பின்னும் அனைவரையும் விருந்தோம்பிய பண்பும், சங்கீதத்தின் மீது இருந்த தீராத காதலும் யாருக்கினி வாய்க்கும்!

குருவரெட்டியூர். நந்திவர்மன்.

* ஏற்கெனவே உள்ள உறவுகளில் அந்நியத்தனத்தைக் கண்டு துவண்டு போன கோபாலரத்னம், அந்நியத்தில் ஒரு புது உறவை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தது பற்றிய சிறுகதை உறவின் உருவத்தைப் படம் பிடித்துக் காட்டியது.

மதுரை — 20. வே. மாறியாடும்பெருமாள்.

* வழிகாட்ட ராஜாஜி வாழ்கிறார் என்ற பகுதியில் வெளியான துணுக்கு ஒவ்வொன்றும் தேனில் ஊறிய பலாதான்!

பூந்தோட்டம். து. பாண்டியன்.

* அன்றைக்கு ராஜீவ் காந்தி பதவி ஏற்றுக் கொண்டு 'மிஸ்டர் கிளீன்' என்று பெயர் எடுத்த காலகட்டமும் வேறு. அவருக்கு அப்போது அனுபவமும் இல்லை. ஆனால் இன்றைக்கு வி. பி. சிங் பதவி ஏற்றுக் கொண்டிருக்கும் காலகட்டம் வேறு. அவர் அனுபவம் நிறைந்தவர், பழைய ஜனதா ஆட்சியை நன்கு அறிந்தவர் என்பதால் ஆரம்ப சூரத்தனம் கண்டிப்பாகக் கடைசி வரையில் தொடரும் என்கிற பரிபூரண நம்பிக்கை இருக்கிறது.

பெங்களூர். ப. மூர்த்தி.

* பாராளுமன்றத் தேர்தல் அரங்கில், பரபரப்பூட்டிய அரசியல் தலைவர்களைப் பற்றியச் செய்தித் துணுக்குகள், கலையாக இருந்தன.

வேலாயுதம்பாளையம். எம். சம்பத்.

* ஸ்வீட்டான கதைகள், காரசாரமான அட்டைப் படக் கட்டுரை, அரைப் பக்கமேயானாலும் ஸ்ட்ராங்கான காப்பி போல் கவிதை... இந்த வாரக் கல்கி நெஞ்சு நிறையச் செய்துட்டுது!

கண்கொடுத்தவனிதம். ந. சுந்தரபுத்தன்.

* கல்கி 24.12.89 இதழில் அத்வானி குறித்துச் செய்தி வெளியிட்டிருக்கிறீர்கள். "ஆரம்பத்தில் காங்கிரஸிலிருந்த எல். கே. அத்வானி பிறகு ஜனசங்கத்திற்கு வந்தார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்வானி என்றுமே காங்கிரஸில் இருந்தது கிடையாது. மாணவப் பருவத்திலிருந்து ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக சங்கப் பணியில் ஈடுபட்டிருந்தார். ஜனசங்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அதில் சேர்ந்து அரசியல் துறையில் பணியாற்றி வருகிறார்.


சென்னை — 83. ஜனா கிருஷ்ணமூர்த்தி.
துணைத் தலைவர், பாரதிய ஜனதா கட்சி.

* சினி சிப்ஸ் பகுதியில் சிவாஜியின் அண்ணன் சண்முகத்தின் மகன் மனோ என்று தவறுதலாகப் போட்டு இருக்கிறீர்கள். சிவாஜியின் அண்ணன் பெயர் தங்கவேலு. அவரது மகன் பெயர் T. மனோகர்.


திருநெல்வேலி, சாலைக்குமார் தி. ஆவுடையப்பன்.

உள் மனத்தில் ரவிக்கு தன் மகள் இந்துவின் திருமணம் பற்றியகவலை.

இப்போது இந்துவின் வயது எட்டு. அவருக்கு என்ன வழி?



லக்ஷ்மி விலாஸ் பாங்க்
மானேஜரிடம்
சென்றால் போதும்.



ஏனெனில் அவர்
வாடிக்கையாளர்களின் பொதுப்
பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்.
ரவி போன்றவர்கள் இந்த பாங்கின்
தொடர்பை தொடர்ந்து
வைத்திருப்பதில் ஆச்சரியம் என்ன
இருக்கிறது?


The Lakshmi Vilas Bank Ltd.

கரூர் 639 001

சேர்மன்: ஐ. சதா சிவ குப்தா

**எங்களது நோக்கம்
உங்களுக்கு உதவுதல்**

Shubh/M/LVB/860


ஏழாவது இரவு
கதை: அபர்ணா நாயுடு
சித்திரம்:
11
மறுநாள் மாலையில் —
வசுமதி அடிக்கடி போன சில இடங்கள்... அவ பழகின சில பேர்.. அங்கெல்லாம் உன்னைக் கூட்டிப் போய் அவங்க கிட்ட எல்லாம் அறிமுகப் படுத்தப் போறேன்...
...இதுல ஒரு முக்கியமான விஷயம் இருக்கு. ரொம்ப முக்கியம்.
என்ன அது?
எங்களுக்கெல்லாம் தெரியாம வசுமதி சில காரியங்களில் ஈடு பட்டிருக்கா. அதைக் கண்டு பிடிக்கறதுக்கு அது அவசியம்.
அதுக்கு என்ன செய்யணும்?
நீ வசுமதியோட தங்கைதான்னு அவங்க யாருக்குமே தெரியக் கூடாது.
ரைட். ஆனா நான் யாருன்னு ரமேஷுக்குத் தெரியும். துப்பாக்கியைக் காண்பிச்சு மிரட்டினவன், போன்ல பேசினவன்... இப்படிச் சில பேர் இருக்காங்களே!


அதைப்பற்றிக் கவலையில்லை. நாம போற இடங்களுக்கும் அவங்க ஊருக்கும் சம்பந்தம் இல்லை... புறப்படு.
வாசலில் —
என் நடவடிக்கைகளைக் கவனிச்சு எச்சரிக்கை செய்த அந்த ஆள் இப்போ நம்மைக் கவனிக்க மாட்டானா?
அதை எதிர்பார்க்கத் தான் வேணும்...
தெருவில் நடந்து கொண்டே —
...அப்படி எதிர் பார்த்துச் சமாளிக்கத் தான் வேணும். பஸ், ஆட்டோ — எது முதலில் கிடைக்கிறதோ அதுல போயிட வேண்டியதுதான்.
அதோ பஸ்ஸே வருது.
பஸ்ஸில் —
சட்டுனு பஸ் வந்துட்டது வசதியாப் போச்சு.
உண்மைதான். நேத்து ஆட்டோவில போகும் போது ஒரு ஆளைப் பார்த்தேன். அவன் நம்மை ஃபாலோ செய்யறானோன்னு சந்தேகம் வந்தது...
...உண்மையிலேயே அப்படியான்னு தெரியலை. இன்னைக்கு அவன் வந்தான்னா... ஐயையோ! அதோ மோட்டார் சைக்கிள்! அதே ஆள்! தப்பிக்கணும்...
தொடரும்

பெற்றோருக்காக...

சாந்தீபிகா



அவசரம் அவசரமாய் டிபன் பாக்ஸை மூடித் துடைத்து ஸ்கூட்டரின் பெட்டியில் வைப்பதற்காக வந்த சாந்தாவிடம் எரிந்து விழுந்தேன்.

ஒரு நாளைக்காவது நேரத்தோடு சமைச்சுப் போட்டு, புருஷனைக் காலாகாலத்துக்கு ஆபீஸுக்கு அனுப்புவோம்னு ஒரு பொறுப்பு இருக்குதா? என்னிக்குப் பார்த்தாலும் லேட்டுத்தான்....''

''ஆ...மா...., ஆபீஸுக்கு ஒழுங்காய்ப் போய்க் கிழிச்சு என்ன வாழ்ந்தீங்க? ஒரு பிரமோஷன், ஒரு நல்ல வீடு, வசதின்னு உண்டா? சும்மா புலம்பிக்கிட்டே போகாதீங்க,'' என்று பதிலடி கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டாள் சாந்தா.

நான் ஸ்கூட்டரை இரண்டு உதைவிட்டுப் பார்த்துவிட்டு, 'ஸ்பார்க் பிளக்'கைக் கழற்றலாமா என்று யோசிக்கையில் பக்கத்தில் நிழலாடியது; அம்மா புடைவைத் தலைப்பைத் திருகியவாறே நின்றிருந்தாள்.

''ஒனக்கு என்னவாம்?'' என்று சிடுசிடுத்தேன்.

''ஒண்ணுமில்லே....'' அம்மா இழுத்தாள். உங்கப்பாவுக்கு ஆஸ்துமா மருந்து தீர்ந்து போயி ஒரு வாரமாச்சு; எனக்கு மூட்டுவலி தாளலே, 'அயோடக்ஸ்' வேணும். உன் பொண்டாட்டிக்கிட்டே நாலுதடவை சொல்லிட்டேன்; காதிலேயே போட்டுக்க மாட்டேங்கிறா; உங்கப்பாவோ வாயைத் திறந்தாலே பொல்லாப்பு வந்திரும்னு பயந்துக்கிட்டு 'கம்'னு இருக்காரு; எனக்குத்தான் மனசு கேட்கலை; உங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிடலாம்னு.....''

''அடாடா...டா; பொழுது விடிஞ்சு பொழுது போனா உங்க வியாதிப் பாட்டுத்தானா? உங்களுக்கு மருந்து மாத்திரை வாங்கிக் கொடுத்தே நான் போண்டியாயிடுவேன் போலிருக்கிறது'' நான் எரிந்து விழுந்தபடி ஸ்கூட்டரை உதைக்க, அது கிளம்பிவிட்டது!

''சரி, சரி; வழிவிடு; மருந்து மாத்திரைப் பிரச்னையெல்லாம் சாயந்திரம் நான் வந்ததும் சொல்லித் தொலை,'' நான் கிளம்பி வேகம் பிடித்தேன்.

''சார், உங்களை ஜெனரல் மானேஜர் கூப்பிடறாரு,'' என்று பியூன் வந்து கூப்பிட்டான். சரிதான்; இப்போதெல்லாம் நான் கொஞ்சம் அடிக்கடி நேரம் கழித்து வருவது ஜி.எம் காது வரை போயிருக்கிறது போலும்; கூப்பிட்டுக் கத்துவாரோ? நான் பயந்து கொண்டே அவர் அறைக்குப் போனேன்.

''வாங்க மிஸ்டர் பாலு; டேக் யுவர் ஸீட். உங்களுக்கு ஒரு நல்ல நியூஸ் சொல்லப் போறேன்; நீங்க ரொம்ப நாளா எதிர்பார்த்துக்கிட்டிருக்கிற 'மேனேஜர்' பிரமோஷன் இப்போ உங்களுக்குக் கிடைக்க ஒரு 'சான்ஸ்' வந்திருக்கு....'' என்றார் ஜி.எம்.

நான் ஸீட்டிலே எம்பிக் குதிக்காத குறைதான்!

''அப்படியா சார்? தாங்க்யூ சார்,'' என்று படபடத்தேன்.

''கொஞ்சம் இருங்க; அதிலே ஒரு சின்ன விஷயம்; 'வேகன்ஸி' இங்கே இல்லை; மகாராஷ்டிராவிலே 'பண்டாரா'ங்கிற ஊரிலே நம்ம புது பிராஜக்ட் ஆரம்பிச்சிருக்கோம் இல்லே? அங்கே 'கன்ஸ்ட்ரக்ஷன் ஸைட்'டிலே 'பிராஜக்ட் மானேஜர்' போஸ்ட் இப்போ காலியாய் இருக்கு. உங்களுக்கு சம்மதன்னா உங்க பேரை உடனே ரெக்கமண்ட்' பண்ணிடறேன்; என்ன சொல்றீங்க?'' என்றார்.

என் உற்சாகமெல்லாம் ஒரு கணத்தில் வடிந்து போயிற்று. உள்ளூரில் பிரமோஷன் கிடையாதா?

''சார்.... வந்து.... எனக்குச் சட்டுன்னு பதில் சொல்லத் தெரியலே....'' என்று இழுத்தேன்.

அப்படியா? அப்போ, நல்லா யோசிச்



சிட்டு வந்து நாளைக்கு உங்க முடிவைச் சொல்லுங்க. அதிலே ஒண்ணு மட்டும் ஞாபகம் வெச்சுக்குங்க; நம்ம கம்பெனி பிரைவேட் கம்பனியானதாலே இங்கே உங்க உழைப்புக்கும் விசுவாசத்துக்கும் ஏத்த பலன் உண்டு; பண்டாராவிலே போய் 'பிராஜக்டை' நல்லா 'ஹாண்டில்' பண்ணி னீங்கன்னா உங்களுக்குக் கம்பெனியிலே பிரகாசமான எதிர்காலம் உண்டு; பிராஜக்ட் ஸைட்டிலே உங்களுக்குக் கம்பெனி வீடும், ஜீப்பும் உண்டு.....''

"**எ**ன்னங்க, காப்பி ஆறிப் போகுது; வந்ததிலேயிருந்து அப்படி என்ன ஒரே யோசனையிலே மூழ்கியிருக்கீங்க?'' சாந்தா கேட்டாள்.

''இன்னைக்கு ஆஃபீஸிலே ஜி. எம். கூப்பிட்டு ஒரு விஷயம் சொன்னாரு சாந்தா. அது நல்ல நியூஸா கெட்ட நியூஸான்னு தீர்மானிக்க முடியலை. அதான் குழம்பிக் கிட்டுக் கிடக்கறேன்...'' என்று சொல்லி விட்டுச் சமாசாரத்தைச் சொன்னேன்.

''என்னது? எங்கேயோ பண்டாராவி லேயா? அது எங்கே இருக்குது?'' சாந்தா வின் முகத்தில் பிரகாசமே இல்லை.

''மகாராஷ்டிராவிலே நாக்பூர்தாண்டி சரியான பொட்டல் காடு. வெயில் கொளுத்தி எடுத்துடுமாம்...'' என்றேன்.

''என்னங்க இது? இங்கே எங்க பொறந்த வீடு, சொந்த பந்தம், ஜனங்களை விட்டுட்டு அவ்வளவு தொலைவு தள்ளிப் போகணுமா? கேட்கவே பிடிக்கலையே? இங்கேயே பிரமோஷன் வராதா?''

''ஊகூம்... இப்போதைக்கு சான்ஸே இல்லை.''

''அப்போ பிரமோஷனை ஒத்துக்கிட்டுப் போய்த்தான் ஆகணுமா?'' சாந்தா கவலை யுடன் கேட்டாள்.

''அதான் யோசிச்சுக் குழம்பிக்கிட்டிருக் கேன்; பிராஜக்ட் ஸைட்டிலே வேலைன்னா நாய்ப் பொழப்புத்தான். கொளுத்தற வெயில்லே நேரம் காலம் இல்லாம 'லோல்' படணும். ஏகப்பட்ட பொறுப்பு என் தலை யிலே வந்து விடியும். ஹெட் ஆபீஸிலே யிருந்து சதா விரட்டிக்கிட்டே இருப்பாங்க. ஆனா ஒண்ணு. நீ ரொம்ப நாளா துளைச்சு எடுத்தியே... ஒரு கம்பெனி வீடு, வசதின்னு உண்டான்னு? அதெல்லாம் கிடைக்கும். ஜீப்பும் டிரைவரும் உண்டு. வீட்டோட பியூன் இருப்பான்...'' என்றேன்.

அடப்போங்க. இத்தனை கஷ்டம் இருக் கும்போது வீடு, வசதின்னு சிலது கிடைக் கும்னு ஆசைப்பட்டுக்கிட்டு அத்துவானத் திலே போய்க் கஷ்டப்படணுமா என்ன? நாம பங்களா, ஜீப்புன்னு வசதியா இருக் கிறதைப் பார்த்து வயிறெரியக் கூடத் தெரிஞ்ச மூஞ்சின்னு ரெண்டு பேரு இல்லாத ஊரு என்ன ஊரு? பேசாம உள்ளூரிலேயே 'உள்ளது போதும்'னு நிம் மதியா குப்பை கொட்டலாம். பிரமோஷ

னும் வேணாம், ஒண்ணும் வேணாம். அது சரி, 'வேணாம்'னு சொன்னா விட்டுடுவாங்க இல்லை?''

''அப்படி மூஞ்சியிலே அடிச்ச மாதிரி 'வேண்டாம்'னு சொல்றதும் தர்மசங்கடம் தான். பிரைவேட் கம்பெனி இல்லே? மேனேஜ்மெண்ட்டிலே தப்பா எடுத்தாலும் எடுத்துப்பாங்க. அதான் எப்படிச் சொல்லிப் பிரச்னையைச் சமாளிக்கிறதுன்னு யோசிக்கிறேன்...''

ராத்திரி சாப்பாட்டுக் கடையின் போது அப்பா, அம்மாவிடமும் விஷயத்தைச் சொன்னேன். கிழங்கள் என்ன அபிப்பிராயம் சொல்கிறார்கள் என்று ஆழம் பார்க்கத்தான்.

''என்னைக் கேட்டா நீ சரின்னு சொல்லிடறதுதான் நல்லதுன்னு படுது. இதுதான் பாடுபட்டு உழைச்சு முன்னுக்கு வர வேண்டிய வயசு. இப்பவே வெயிலுக்கும், கஷ்டத்துக்கும் பயந்தா ஆகுமா?'' என்றார் அப்பா.

''அப்போ உங்களை என்ன பண்றது? என் கூடவே வருவீங்களா? அங்கே உங்களுக்குத் தமிழிலே நாலு வார்த்தை பேசிப் பழகக் கூட அக்கம் பக்கம் ஆள் இருக்காது. நீ என்னம்மா சொல்றே?'' அம்மாவைக் கேட்டேன்.

அம்மாவின் முகத்தில் பயம் அப்பிக் கொண்டது.

''இதோ பாருப்பா, கஷ்டமோ நஷ்டமோ கடைசிக் காலம் வரை உன் நிழலிலேதான் நாங்க இருக்கணும். எங்களுக்கு வேற நாதி என்ன சொல்லு? உன் எதிர்காலத்துக்கு எது நல்லதோ அதைச் செய் ... ஆனா நீ எங்கே போறியோ அங்கே எங்களையும் கூட்டிக்கிட்டுப் போயிடு. அனாதையா விட்டுடறேன்னு மட்டும் சொல்லிடாதப்பா...'' அம்மா வழக்கம் போல் ஓர் அழுகை அழுது மூக்கை உறிஞ்சி விட்டுத் தொடர்ந்தாள்: ''எங்களுக்கு என்ன வெளி, வாசல்னு போய் ஊர் சுத்தற வயசா? நாலு சுவத்துக்குள்ளே அடங்கி 'அக்கடா'ன்னு இருக்கப் போறோம். அது இந்த ஊரா இருந்தா என்ன? எந்த ஊரா இருந்தா என்ன? நாங்க எப்படியும் அனுசரிச்சுப்போம்.''

இப்போது சாந்தா இடைவெட்டினாள்.

''இவங்களுக்கென்ன? வேறே போக்கிடம் கிடையாது. எனக்கு அப்படியா? எனக்கு சினிமா, நாடகம், பீச்சுன்னு போகணும். உள்ளூர்லே இருக்கிற பொறந்த வீட்டு மனுஷாளை மாசம் இரண்டு முறையாவது போய்ப் பார்க்கணும். இதையெல்லாம் விட்டுட்டு எங்கேயோ 'இடி விழுந்தான் மூலையிலே' போய் ஜெயில் வாசம் வாழணுமா? எனக்கு வேணாம். ஆமாம். சொல்லிட்டேன்'' என்றாள் தீர்மானமாக.

இந்தக் குழப்பத்திலிருந்து தப்பிப்பது எப்படி? நான் தீவிரமாக யோசித்தேன்.

''**ஐ**யாம் வெரி ஸாரி சார்! இந்தப் பிரமோஷன் சான்ஸை ஒத்துக்க முடியாத

நிலையிலே இருக்கேன்,'' காலையில் முதல் காரியமாக ஜெனரல் மானேஜரைச் சந்தித்துச் சொன்னேன்.

''ஒய், ஒய்? வாட் ஈஸ் த பிராப்ளம்?'' அவர் குரலில் ஆச்சரியமும் சற்றே கோபமும் ஒலித்தன.

நான் ராத்திரியே பலமுறை ஒத்திகை பார்த்து வைத்திருந்த வசனங்களை விட ஆரம்பித்தேன்.

''என்னைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையிலே எந்தப் பிரச்னையும் இல்லே சார்; எனக்கு இன்னும் குழந்தை குட்டி இல்லை; என் ஒய்ஃப்புக்கும் 'ஓக்கே' சார். இன் ஃபாக்ட், பிராஜக்ட் ஸைட்டிலே வேலை ரொம்ப சுவாரசியமாவும், என் திறமைக்குச் ச வா ல ா வு ம் இருக்கும்; ஆனா...

''ஆனா?''

''எனக்கு வயசான பேரண்ட்ஸ் இருக்காங்க சார்; அவங்களுக்கு நான் ஒரே பிள்ளை. என்னை வளர்த்து ஆளாக்க அவங்க ரொம்பக் கஷ்டப் பட்டிருக்காங்க; இன்னைக்கு அவங்க என்னையே நம்பி என் நிழலிலே இருக்காங்க; அவங்களுக்கு இந்த டிரான்ஸ்ஃபரிலே இஷ்டம் இல்லே சார்....''

''என்ன காரணம்?''

''பாஷை தெரியாத ஊரு; சொந்த பந்தத்தையெல்லாம் விட்டுட்டு ரொம்பத் தொலைவு போகணும்; போற இடத்திலே அவங்களுக்குக் கிட்டத்தட்ட ஜெயில் வாசம் மாதிரிதான்; தெரிஞ்சவங்க, பழகின மூஞ்சின்னு நாலு பேருகிட்ட தமிழிலே பேசிப் பழகக் கூட வழியில்லை; அதோட வெயில் ரொம்பக் கடுமைன்னா அவங்க உடம்புக்கு ஒத்துக்காது....''

''ம்....ம்...'' ஜி. எம். புரிந்து கொள்பவராய்த் தலையாட்டினார். நான் தொடர்ந்தேன்.

''நான் வற்புறுத்தினா வேற வழியில்லாம எங்கூட வந்திருவாங்கதான்; ஆனாலும் என் சுயநலத்துக்காக அவங்களைக் கஷ்டப் படுத்தறது தப்பில்லையா சார்? வயசான பேரண்ட்ஸுக்காக, அவங்க நிம்மதி, சௌகர்யத்துக்காக நான் எனக்கு வர இந்த வாய்ப்பை விட்டுக் கொடுத்துடறதுதான் தர்மம்னு மனசுக்குப் பட்டுடிச்சு சார்; என்னை நீங்க மன்னிக்கணும்.....''

''ஓக்கே, மிஸ்டர் பாலு. நீங்க சொல்ற 'ரீஸன்' ரொம்ப நியாயமாத்தான் படுது; நான் ஹெட் ஆபீஸுக்கு எழுதிப் போட்டுடறேன்'' என்று சொல்லிவிட்டார் ஜி. எம்.

கஷ்டப்பட்டு என் நிம்மதியையும் சந்தோஷத்தையும் முகத்தில் காட்டி விடாமல் ''தேங்க் யூ சார்'' என்று சொல்லி எழுந்தேன்!

அருள்வாக்கு



ஜன ஸமூஹத்தில் யோகம், வேதாந்தம், மீமாம்ஸை என்றெல்லாம் தத்வ ஆராய்ச்சியில் போகாதவர்கள்தான் நிறைய இருப்பார்கள். இவர்கள் உள்பட ஸகலமான பேருக்கும் அல்பமாகவோ ஸ்வல்பமாகவோ பக்திதான் ஏதோ ஒருவிதத்தில் தன்னியல்பாக அமைந்தது. 'இந்த லோகம் இப்படித் தோன்றி நடந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக ஒரு மஹாசக்தி இருக்க வேண்டும். அதனிடம் நாம் அடங்கியிருக்க வேண்டும்' என்ற அளவுக்கு ஒரு பக்தியெண்ணம் தோன்றாமலிருக்காது. மஹாசக்தனான அவனைத்தான் தங்களுடைய எந்த விருப்பத்தையும் ஈடேற்றுபவனாகக் கருதி பிரார்த்திப்பார்கள். பணம், படிப்பு, ஆரோக்யம், பிரமோஷன் எதுவானாலும், இதற்கெல்லாம் தாங்களும் முயற்சி மேற்கொண்டு காரியங்கள் பண்ணிக் கொண்டேயிருந்தாலும், அவனருள் இருந்தால்தான் நமக்கு வேண்டியது பலிக்கும் என்று தங்களுக்குத் தெரிந்த அளவில் பக்தி செய்து கொண்டிருப்பார்கள். 'இது பக்தியே இல்லை, வ்யாபாரம்தான்' என்று சொல்பவர்கள் சொன்னாலும் தங்களளவில் பக்தியாக இருப்பதாகத்தான் இந்த ஜனங்கள் நினைக்கிறார்கள்... இவர்களிடம் எங்கோ ஒரு மூலையில் ஏக பரமாத்மாவிடம் ஒரு நிஜமான பக்தியெண்ணம் இல்லாமல் போய் விடவில்லை.

ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



அண்ணாவின் நிதானம் + பெரியாரின் சிக்கனம்

* கருணாநிதிக்குத் தமக்கைகள் இருவர். மூத்த அக்காவின் மகன்தான் மாறன். 57 வயது.

* பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. பொருளாதாரம் படித்தவர். இயற் பெயர் தியாகராஜ சுந்தரம். 'நெடு மாறன்' என்று பெயரை மாற்றிக் கொள்ள, அது சுருங்கி மாறனாகி விட்டது!

* இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதானார். தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்பதற்காக அண்ணா தென் சென்னை எம்.பி. பதவியை ராஜினாமா செய்த போது அந்த இடைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். பின்னால் நடந்த ஒரு தேர்த லில் ஆர்.வி.யிடம் தோற்றபின், ராஜ்ய சபா உறுப்பினரானார்.

* பல சிறுகதைகள் எழுதியுள்ள மாறன், வசனமெழுதிய படங்கள் சுமார் முப்பது. இவற்றில் குறிப்பிடத்தக்கவை 'குல தெய்வம்', 'அன்னையின் ஆணை'

* 'எங்கள் தங்கம்', 'மறக்க முடியுமா' உட்பட சுமார் பத்துப் படங்களை இயக்கியும் இருக்கிறார்.

* ராஜ்ய சபா எம்.பி. என்கிற முறையில், பாராளுமன்றத்தில் பேசுவதைத் தவிர, மற்ற நிகழ்ச்சிகளில் பேசுவது பற்றிய செய்திகள் சாதாரணமாக முரசொலி யில் பிரசுரமாகாது. இனி எப்படியோ?

* மேலை நாடுகள் பலவற்றுக்குப் போய் வந்திருக்கிறார் மாறன். 1969ல் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில், ஹென்றி கிசிஞ்சர் நடத்திய 'அரசியல் விஞ்ஞானப் பட்டறை'யில் பங்கேற்றிருக்கிறார்.

* 'மாறன் நிதானத்தில் அண்ணா; சிக்கனத்தில் பெரியார்' என்று குறிப் பிட்டார் அவரது நண்பர் ஒருவர்.

* கழக முன்னணித் தலைவர்கள் கூடக் கலைஞரின் கருத்துக்கு மாற்றுக் கருத்துச் சொல்லத் தயங்குவார்கள். மாறன், உரிமையுடன் மாறுபட்ட கருத்துச் சொல்லுவார். "இதற்குக் கட்சி மீதும், கலைஞரின் மீதும் அவர் கொண்டிருக் கும் அக்கறைதான் காரணம்" என்று நெருங்கிய வட்டத்தினர் சொல்கிறார் கள்.

* நிறையப் படிக்கும் பழக்கமுடையவர். ஏராளமான புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்குவார்.

* திருவாரூரில் கலைஞர் நாடகங்கள் நடத்திய போது பெண் வேடம் போட் டிருக்கிறார் மாறன்!


தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

படம்: சுபா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: பி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

எங்களது வாழ்வில் நல்ல தருணங்கள்

1990



புத்தாண்டு பிறக்கிறது.
உங்கள் வாழ்விற்கு புத்துணர்வு அளித்திட -

சௌத் இந்தியன் பாங்கு

சிறப்பான வாழ்விற்கு அடிகோலிட்டு,
வாழ்நாள் முழுவதும் நீங்கள் மகிழ்வுடன்
வாழ வழி காட்டுகிறது.
"எங்கள் வாழ்வின் நல்ல தருணங்களுக்கு காரணம்
சௌத் இந்தியன் பாங்குடன் எங்களை
இணைத்து கொண்டது தான்" என இனி
பெருமையுடன் கூறிக் கொள்வோம்.

புத்தாண்டு பிறக்கட்டும்
புது வாழ்வு மலரட்டும்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்

The South Indian Bank Ltd
Regd. Office : Trichur, Kerala

SASI/SIB/20/89

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka